"நான் கவிஞன் ஆனது எப்படி?"

— டைரக்டர் அகத்தியன் பேட்டி!



கல்கி

KALKI 2.3.97 ரூ. 3.00



~~அ~~ வ டேங்கப்பா!


சாரதா'ஸில்
ஜவுளி எடுத்தால்தான் திருமணம் - இதுவே சம்பந்தம் பேசுமிடத்தில் மக்களின் செல்லமான நிபந்தனை!
யுகருபிணி
அனுப்ரியா
சாரதாஸ்
32, என்.எஸ்.பி. ரோடு,
திருச்சி - 2.

சமீபத்தில் சென்னைக்கு அருகில் உள்ள மணலியில், புலியோ அல்லது கழுதைப் புலியோ ஒரு பெண்மணியைத் தாக்கிவிட்டுப் போக அதே சமயத்தில், ஆழ்வார்ப்பேட்டை, டி.டி.கே. சாலையில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்த முரளிதரன் என்கிற விடுதலைப் புலியை போலீஸார் வளைத்துப் பிடித்தனர். போலீஸாரைக் கண்டதும், பையிலிருந்த சயனைட் குப்பியை வாயில் போட்டுக் கொண்டதன் மூலம் முரளிதரன் 'தான் ஒரு விடுதலைப் புலிதான்' என்பதைப் பளிச்சென வெளிப்படுத்தி விட்டார். உடனடியாக அந்தப் புலி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட, கூட இருந்த சென்னை டாக்டர் ஒருவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

வீட்டைச் சோதனை போட்ட போது புலிகளின் தற்கொலைப் பிரிவு உட்பட வேறு பல விவரங்களைக் கொண்ட காம்பாக்ட் டிஸ்குகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. 'ஈழத்திற்கு மருந்து கடத்துவதைத் தவிர வேறெந்த சட்ட விரோதமான காரியங்களையும் தாங்கள் செய்யவில்லை' என்று போலீஸாரிடம் பிடிபட்டவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியாக மேலும் பல புலிகள் தமிழகத்தில் தங்கிச் செயல்படும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. புலிகளுக்கு உதவியாகச் செயல்பட்டதாக வாரப் பத்திரிகை ஆசிரியர் ஒருவரும் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவத்தின் மூலம், 'தமிழகத்தை விடுதலைப் புலிகள் மீண்டும் தங்கள் தளமாக மாற்றிக் கொண்டு விடுவார்களோ என்ற பயம் நடுநிலையாளர்கள் மத்தியில் ஏற்பட்டு இருக்கிறது. இந்தச் சந்தேகத்தை சு. சுவாமி, சோ போன்றோர் ஊதி ஊதிப் பெரிதாக்கி விடுவார்கள் என்ற கவலையும் தி.மு.க.வினருக்கு இருக்கிறது.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு என்ற பெயரில் பா.ம.க. நடத்திய புலிகள் ஆதரவுக் கூட்டங்களில் பேசப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், ஒப்புக்கு இரண்டு பேரைக் கைது செய்தது தவிர வேறெந்த மேல் நடவடிக்கையையும் தமிழக அரசு கறுகறுப்பாக எடுக்கவில்லை. ஆகையால் சந்தேகம் உருவாகிற வாய்ப்பும் கூடிவருகிறது.

"ஈழத் தமிழர் பிரச்னையில் மத்திய அரசின் கொள்கை எதுவோ, அதுவே தமிழக அரசின் கொள்கை என்று சட்டமன்றத்தில் சொன்ன கலைஞர், புலிகள் விஷயத்தில்

மீண்டும் புலிகளா?

'சப்த' ஸ்வரம்

சப்தங்களின் ரசிகன் நான்.

●

மவுனமான பூக்களை விட,
சுற்றிவரும் வண்டுகளின் ரீங்காரமே சுகம்.

மோனப் பறவைகளாய் ஓடும் மேகங்களைவிட,
மின்னல் இடியோடுதான் வானம் அருமை!

கடலில் –
அலைகளின் ஆர்ப்பரிப்புகள்தான்
வாழ்க்கையின் சலனங்கள் – சுகங்கள்.

பிரசவ அறையில் –
குழந்தையின் அலறல்தான்
பிறப்பின் சம்பூரண ராகம்!

●

மவுனம் –
நினைவுகளின் சமாதி;
வார்த்தைகளோ,
நினைவுகளின் பரிணாம எழுச்சி.

வார்த்தைகளில்தான்
மொழி – வெற்றியடைகிறது.

எத்தனையோ காதல்கள், லட்சியங்கள் –
ஊமைக்கவசத்தில் இறுகிக் கருகிவிடுகின்றன.

கண்ணோடு கண் கலந்தபின்,
வாய்ச்சொல் இல்லாததால் –
வாழ்க்கையை இழந்தவர்கள்
எத்தனையோ பேர்...

கூச்சத்தால், தாழ்மை நினைவால்
கூறத் தவறியவர்கள்,
கனவுகளை அசைபோட்டுக்
கண்ணீரில் மூழ்குகிறார்கள்.

●

சப்தங்கள் –
இயக்கத்தின் சாட்சிகள்

ஒவ்வொரு இயக்கத்திலும்,
சப்தத்தை உணர்ந்தவன்தான்
தத்துவத்தைத் தரிசித்தவன்.

●

வாழ்க்கையை, மரணத்திலும் –
சப்தங்கள்தான் தம்பட்டமடிக்கின்றன.

பிணத்தைச் சூழ்ந்து அழுபவர்களின்
ஓலத்தைவிட,
பிணத்தின் மவுனம்தான்
பயங்கர அலறல்.

– கே. ஆர். முரளி

கவனமாக இருக்க வேண்டும். இல்லையேல் த.மா.கா. பிரச்னையை எழுப்பும்'' என்று நம்மிடம் சொன்னார் த.மா.கா. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்.

ஆயுதங்கள், பெட்ரோல், டீசல், மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியமான பொருட்களை இலங்கைக்குக் கடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை, 1983லிருந்தே தமிழகத்தில் எந்தவிதத் தொய்வும் இல்லாமல், தொடர்ந்து வருவதாகச் சொன்னார், தமிழக அரசின் உள்துறை அதிகாரி ஒருவர்.

"கிட்டத்தட்ட பதின்மூன்று வருடங்கள் முன்பே, அகதிகளாக தமிழகத்துக்குள் அடைக்கலம் புகுந்தனர், ஈழத் தமிழர்கள். பாலிலிருந்து எப்படித் தண்ணீரைப் பிரிக்க முடியாதோ அது போல தமிழ்நாட்டுடன் ஐக்கியமாகி விட்டனர். அவர்களுள், புலிகளும் இருக்கலாம். அவர்களின் அனுதாபிகளும் இருக்கலாம். இது தவிர, போராடும் புலிகளுக்குத் தார்மீகக் குரல் கொடுக்க, நெடுமாறன், வீரமணி போன்றோர் இருக்கும் சூழலில், பல வகைகளில் உதவி வழங்கப்படுவதை அத்தனை சுலபத்தில் தடுத்து விட முடியாது!" என்றார் அவர்.

1991-ல் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த புதிதில் புலிகளைத் தேடிப் பிடித்து நடவடிக்கைகள் எடுத்தார் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். இதன் மூலம் தப்பிப் போன பத்மனாபா கொலையாளிகள் உட்பட பலர் மாட்டிக் கொண்டனர். மேலும், 'விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டார்கள்' என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், தீவிரவாத இயக்கங்களின் அமைப்பாளர்கள் தடாவில் கைது செய்யப்பட்டனர். ஆனால் ஜெ.வின் கடைசி இரண்டு வருட ஆட்சி, 'புலிகளுக்கு மிகவும் அனுசரணையாக இருந்தது' என்பது சு. சுவாமியின் குற்றச்சாட்டு.

சென்னைச் சிறை, வேலூர் கண்காணிப்பு மையம் போன்றவற்றிலிருந்து புலிகள் தப்பிச் சென்றனர். கோர்ட்டுக்குக் கொண்டு செல்லப்பட்ட போது, ஏ.கே. 47ஐ பயன்படுத்தி, காவலர்களைக் கொன்று

பத்மனாபா கொலையாளிகளை மீட்டுச் சென்றனர் புலிகள். 'ஜெயலலிதா புலிகளிடம் சமரசமாகப் போய் விட்டார்' என்று மேடைகளில் பேசப்பட்டது. 'பத்மனாபா கொலைக்குப் பின்னரும், ஜெயலலிதா புலிகளைத் தொடர்ந்து ஆதரித்து வந்தவர்தான்' என்று கலைஞரும் ஆதாரம் காட்டிப் பேசினார்.

ஆனாலும் புலிகள் பிரச்னை காரணமாக ஒருமுறை ஆட்சியை இழந்துவிட்ட காரணத்தால், தி.மு.க. வட்டாரத்தில் 'புலிகள்' என்றாலே கொஞ்சம் அலர்ஜியுடன் பேசுகிறார்கள். "சென்ற முறை எங்கள் ஆட்சியின் போது வை.கோ. மற்றும் அவர்களது ஆதரவாளர்களால் கெட்ட பெயர் ஏற்பட்டு விட்டது. இப்போது கட்சி சுத்தமாகி விட்டது. ஆனால் புலிகள் ஆதரவு என்ற பொய்க் குற்றச்சாட்டைக் கூறி அப்பாவித் தமிழர்கள் பிரச்னையை திசை திருப்புவதை நாங்கள் ஏற்க முடியாது" என்று சொல்கிறார் கழகத்தின் முன்னணிப் பேச்சாளர் ஒருவர்.

இப்போது ஒரு வேடிக்கை என்னவென்றால், ம.தி.மு.க. வட்டாரத்திலும், புலிகளைப் பற்றிப் பேசத் தயங்குவதுதான். ஆக, கிட்டத்தட்ட எல்லாப் பெரிய கட்சிகளும் புலிகளை கைவிட்ட நிலையில், பா.ம.க.வின் போக்கு மட்டும் அமைதியை விரும்பும் மக்களை கவலைக்குள்ளாக்கி இருக்கிறது.

கனடா, ஜெர்மனி, மற்றும் ஐரோப்பாவின் பல நாடுகளில் போய் நன்றாகவே காலூன்றி விட்ட ஈழத் தமிழர்கள், மாதம் ஒரு தொகையை புலிகள் இயக்கத்துக்கு நன்கொடையாகக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இந்த வசூலை திட்டமிட்டு, மிகவும் நேர்த்தியான முறையில் செய்கிறார்கள் புலிகள். அவர்கள் அள்ளிக் கொடுக்கும் ஆயிரக்கணக்கான டாலர்கள், ஆயுதங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வாங்கச் செலவிடப்படுகிறது. உடைந்து போன ரஷ்யக் கூட்டரசுகள் மற்றும் தெற்காசிய நாடுகள் சில, ஆயுதச் சந்தைகளாக மாறி விட்டன. அங்கு வாங்கப்படும் ஆயுதங்களை இலங்கைக்குக் கடத்திச் செல்ல தமிழகமே மிகச் சிறந்த இடம் என்று புலிகள் கருதுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. இதற்குக் காரணம், இலங்கை மிக நெருக்கத்தில் இருப்பது மட்டுமல்லாமல், இடையில் இருக்கும் ஆழமில்லாத கடற்பகுதியும்தான்.

''முன்பெல்லாம் தார்மீக ஆதரவும் ஒத்துழைப்பும், நாங்கள் கொடுத்து வந்தது ண்மைதான். ஆனால் புலிகள் இயக்கம் டைசெய்யப்பட்ட பின், கடலோரக் காவல் டை, மற்றும் கப்பல் படை ஆகியவற்றின்

'சுட்ட' பழம் :



தேர்தலில் நிற்கவிருக்கும் எனது கட்சிக்காரர்கள் சிலரது பெயர்கள், காவல் துறை ரிகார்டுகளில் இடம்பெற்றிருக்கலாம். ஆனால் அவர்களெல்லாம் குற்றவாளிகளில்லை... அவர்களைக் குற்றவாளிகள் என்று சொன்னால், பிரிட்டிஷ் காலத்தில் ஜெயிலுக்குப் போன காந்தியும் நேருவும் கூட கிரிமினல்கள்தான்.

— பால் தாக்கரே

கனிந்த சிந்தனை :

'பொது வாழ்வில் இருக்கும் ஒரு கட்சித் தலைவர் இப்படியெல்லாம் பேசலாமா...?' என்று வீணாக வருத்தப்படுகிறார்கள் சிலர். தாக்கரேயின் துணிவைப் பாராட்ட துப்பில்லாதவர்கள்!

இப்படியெல்லாம் பேசும் அதிகாரமும் அறிவும் பொது வாழ்விலிருப்போருக்கும் அரசியல் தலைவர்களுக்குமன்றி வேறு யாருக்கு வருமாம்?!

'போலீஸ் ரிகார்டுகளில் பெயர் இடம்பெற்றிருக்கிறது - அவர்களெல்லாம் குற்றவாளிகளில்லை என்று சொன்னால் எப்படி ஏற்பதாம்...?' என்று வாதாடுகிறார்கள் வேறு சிலர்.

நீங்கள் ஏற்காது போனால் என்ன... தேர்தல் நின்றுவிடவா போகிறது! கொலைக் குற்றம் செய்தவர்கள் கூட குற்றவாளிகள் அல்ல என்பது சிவசேனா போன்ற கட்சிகளின் கோட்பாடு. ஆஃப்டர் ஆல், போலீஸ் ரெகார்டில் பெயர் இருக்கிறது என்பதற்காகச் சிலரை புறக்கணிக்கலாமா...!

'எப்படியோ ஒழியட்டும்! காந்திஜீ, நேருஜீயையெல்லாம் வம்புக்கிழுத்து உவமை சொன்னால் தாங்க முடியவில்லை...' - சிலர் இப்படி கண்ணீர் கூட விடுகிறார்கள்!

இத்தனை பலவீனர்களாய் இருந்தால் கட்டுபடியாகாது! 'எங்கள் பாதையில் குறுக்கிடுபவர்களை மண்ணோடு மண்ணாக்கி விடுவோம்!' என்கிற சிவசேனாவின் லேட்டஸ்ட் கோஷத்தை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள் - கண்ணீரெல்லாம் காய்ந்துபோய் வீரம் பொங்க புறப்பட்டு விடுவீர்கள்!

- சில்மிஷா

கெடுபிடி காரணமாக அந்தப் போக்கு குறைந்துள்ளது. இப்போது மீனவர்களுக்கும் புலிகளின் மேல் கொஞ்சம் வெறுப்பு உண்டாகி இருக்கிறது. காரணம், நாங்கள் எங்கள் படகுகளுக்காகக் கொண்டு செல்லும் டீஸலை, நடுக்கடலில் புலிகள் மிரட்டிப் பிடுங்கிக் கொள்கிறார்கள்!" என்று சொன்னார் சமீபத்தில் ராமேஸ்வரத்தில் நாம் சந்தித்த மீனவர் அமைப்பின் தலைவர் ஒருவர்.

வ.உ.சி. ராமநாதபுரம், நாகை, புதுக்கோட்டையைச் சேர்ந்த கடற்பகுதிகளில் இன்னமும் மர்மமான முறையில் சில படகுகள் வருவதும் போவதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது என்றும் ஒரு தகவல் சொல்கிறது. அந்தப் பகுதி கடற்கரைச் சாலைகளில், மத்திய அரசின காவல் படை உட்பட பல செக்-போஸ்டுகள் இருக்கின்றன. அப்படியிருந்துமா இப்படி?

"கீழ்நிலை அதிகாரிகளின் ஒத்துழைப்பு அல்லது மெத்தனத்தால் சில அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படலாம். ஆனால் இது போன்ற கடத்தல்களுக்கு பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் தார்மீக ஆதரவும், ஒரு வலுவான காரணம்!" என்கிறார் மத்திய அரசின் அதிகாரி ஒருவர். "அப்பாவித் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதற்கும் புலிகள் ஆதரவுப் போக்குக்கும் இடையில் ஒரு மெல்லிய கோடுதான் இருக்கிறது. இந்தக் கோட்டைத் தாண்டும் வேலையைப் பல கட்சிகளும் அவ்வப்போது செய்து வந்துள்ளன" என்றும் தொடர்ந்து சொன்னார் அவர்.

"ஈழத் தமிழர்களுக்கும் தமிழக மக்களுக்கும் தொப்புள் கொடி உறவு இருக்கிறது. இலங்கையில் இருதரப்பினருமே ஆயுதம் எடுத்துப் போராடுகிற நிலையில், அப்பாவித் தமிழர்கள் மீது இலங்கை அரசு வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. இதன் காரணமாக நடத்தப்படும் மனித உரிமை மீறல்களைத்தான் பா.ம.க. கண்டிக்கிறது. ஈழத் தமிழர்களைக் காப்பாற்றப் போராடும் அமைப்புகளுக்கு ஆதரவு தெரிவிப்பதால் தவறேதும் இல்லை. ஆனால் எங்கள் அமைப்பு புலிகளுக்கு ஆதரவான அமைப்பு அல்ல. இந்தப் பிரச்னையை நாங்கள் எடுத்துப் பேசுவதன் மூலம் இந்தியாவின் இறையாண்மைக்கோ, கலைஞர் அரசுக்கோ எந்தவித நெருக்கடியும் – தலைவலியும் வராது. தமிழீழ விடுதலைக் கெதிரான சக்திகள்தான் 'புலிகள் ஆதரவு' என்று பிரச்னையை திசை திருப்பி விட்டுக் கொண்டிருக்கின்றன!" என்று கூறினார் பா.ம.க.வின் செய்தித் தொடர்பாளரும், துணைப் பொதுச் செயலாளருமான பாஸ்கரன்.

ஆனால், நெடுமாறன், மணியரசன், சுப. வீரபாண்டியன் ஆகியோர் தலைமையில் உள்ள சின்னச் சின்ன இயக்கங்கள் பா.ம.க. என்ற அரசியல் கட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்தி, புலிகள் ஆதரவுப் பிரசாரத்தை உசுப்பி விடப் பார்ப்பதை நாம் காண முடிகிறது. என்றாலும் "எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது, புலிகளுக்கு ஆதரவாக சட்டவிரோதமான காரியங்களில் இறங்கினார்கள் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்கிறார் பாஸ்கரன்.


"புலிகள் விவகாரத்தில் கலைஞர் அரசு மனத்தூய்மையுடன் செயல்படுகிறதா என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம், வோட்டு வங்கியில் செல்வாக்கு இழந்து விடுவோமோ என்கிற தயக்கமும், 'தி.மு.க., தமிழர்களுக்குத் துரோகம் செய்கிறது' என்ற குற்றச்சாட்டு வருமோ என்கிற பயமும் அவர்களைத் தடுமாற வைக்கிறது. ஆனால் கலைஞர், முன்பு செய்த தவறை மீண்டும் செய்ய மாட்டார் என்ற பலமான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது!" என்றார் முன்னர் நாம் குறிப்பிட்ட த.மா.கா. சட்டமன்ற உறுப்பினர்.

புலிகள் மற்றும் தீவிரவாத இயக்கங்களைக் கண்காணிக்கும் மாநில அரசின் கியூ பிராஞ்ச் மற்றும் ஸ்பெஷல் பிராஞ்ச் போலீஸ், கடுமையான வேலைப் பளுவின் காரணமாக, தங்களது கண்காணிப்பு வேலைகளைத் தொடர்ந்து செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்று காவல் துறை வட்டாரத்தில் சொல்லப்படுகிறது. பல சமயங்களில் வேறு பல அவசரப் பணிகளுக்கும் அவர்கள் பயன்படுத்தப்படுவதால், அவர்களது பணியில் தொய்வு உண்டாகிறதாம்.

தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் தங்களைப் பற்றிய விவரங்களை அருகில் உள்ள காவல் நிலையங்களில் பதிவுசெய்ய வேண்டும் என்ற உத்தரவு இருக்கிறது. அது ஒழுங்காக அமுல்படுத்தப்படுகிறதா என்பதை தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். கூடவே தொழிற்சாலை மற்றும் கல் குவாரிகளின் உபயோகங்களுக்காக வெடிமருந்து விற்கும் வியாபாரிகளையும் கண்காணிக்க வேண்டும்.

கலைஞர் அரசு சங்கடத்துக்கு உள்ளாவது தவிர்க்கப்பட வேண்டுமானால், போலீஸார் தங்களது பார்வையை கூர்மையாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு அரசும் போலீஸாருக்கு முழு சுதந்தரத்தைக் கொடுக்க வேண்டும்!

– தில்லப்பா



மணிக்கு

மட்டுமே செலவு ! ஆங்கிலத்தை எளிதில் கற்றுக்கொள்ளுங்கள்!



நாம் காலத்தையும் பணத்தையும் பெரிதும் மதிக்கிறோம்

கைமேல் நீங்கள் அடையும் லாபம்

ரூ. 99/-


விலை மதிப்புள்ள

இனி வெற்றிகளெல்லாம் உங்களதே எனக்கூறும் 7 வார கோர்ஸை இலவசமாக அடைவதன் வாயிலாக



பரிசுப்புத்தகங்களின்

1. கே.வி.ஆர். இங்கிலீஷ் டிக்ஷனரி (ஆங்கிலம்-தமிழில் உச்சரிப்பு-தமிழில் அர்த்தம்)
2. வேர்ட் பவர் (ஆங்கிலச்சொற்களின் அற்புத சக்தி)
3. லெட்டர் ரைட்டிங் ப்ராக்டிஸ் (ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதும் முறை)
4. அப்ரிவியேஷன்ஸ் டிக்ஷனரி
5. வெர்ப்ஸ் டிக்ஷனரி (வினைச்சொற்களும் அவற்றின் வடிவங்களும்)
6. சினோனிம்ஸ் & ஆண்டனிம்ஸ் டிக்ஷனரி (ஆங்கிலச்சொற்களும் அவற்றின் நேர் எதிர்ச்சொற்களும்)



ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் வீதம் ஐந்து மாதங்களில் நீங்கள் எளிதில் ஆங்கிலம் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ள முடியும். இதற்கு ஒரு மணிக்கு கால் ரூபாய் மட்டுமே செலவு. ஆச்சர்யப்படுகிறீர்களா ! ஆனால் இது உண்மை. முழுக்கோர்ஸில் 25 புத்தகங்களில் கிடைக்கும். எழுத்து முதல் சொற்களின் உச்சரிப்பு, வாக்கியம் அமைத்தல், இலக்கணம் இங்கிலீஷ் பேசுதல் போன்ற பல நிலைகளை மிகஎளிதாக மிகமிகக் குறைந்த செலவில் எந்த வயதினரும் வீட்டிலிருந்தபடியே சுலபமாக இங்கிலீஷைக் கற்றுக்கொள்ளப் பயன்படும் பாப்புலர் இங்கிலீஷ் கோர்ஸ் இதுவே. ஒவ்வொரு மாணவனும் மாணவியும் கண்டிப்பாகப் படிக்கவேண்டிய கோர்ஸ் இது. முழுக் கோர்ஸின் கட்டணம் ரூ.150/- (மணிக்குக் கால் ரூபாய் வீதம் தினமும் நான்கு மணிநேரம் படிக்க ஒரு ரூபாய். இப்படி 5 மாதங்களுக்கு ஆவது ரூ.150/- மட்டுமே)

உங்கள் பணத்திற்கு முழு உத்திரவாதம்

இந்தகோர்ஸ் உங்களுக்கு 100% சதவீதம் திருப்தியை அளிக்கும். உங்களுக்கு இந்தக் கோர்ஸ் முழுதிருப்தியை அளிக்கவில்லை என நீங்கள் கருதினால் இது வந்தடைந்த முப்பது நாட்களுள் இக்கோர்ஸின் புத்தகங்களைத் துண்டு துண்டுகளாகக் கிழித்து, எல்லாத்துண்டுகளையும் எங்களுக்குத் திருப்பி அனுப்பினால் உங்கள் பணத்தை நாம் செய்த தபால்ச் செலவைக் கழித்துக் கொண்டு உங்களுக்கு மணியாடர் செய்கிறோம். இது நாங்கள் அளிக்கும் உத்திரவாதம்.

இவ்வளவு நல்லகோர்ஸ் இருக்க விண்யோசனை எதற்கு? உடனே கூப் பனைப் பூர்ததி செய்து அனுப்புங்கள்

K.V.R INSTITUTE (Tamil Division)

P.B. NO. 1020, 77, Habibullah Road, T. Nagar, MADRAS - 600 017.


எனக்கு கோர்ஸின் எல்லா 25 புத்தகங்களும் மற்றும் 6 பரிசுப்புத்தகங்களும் & ஆண்டனம்ஸ் டிக்ஷனரி ஆகியவற்றுடன் ரூ.99/- விலைமதிப்புள்ள இனி வெற்றிகளெல்லாம் உங்களதே என்றகோர்ஸையும் சேர்த்து) உடனே எனக்கு ரூ.150/- க்கு வி.பி.பி வாயிலாக அனுப்புங்கள். நான் தபால்காரரிடம் பணத்தைச் செலுத்தி அதைப் பெற்றுக்கொள்கிறேன்.

முக்கிய செய்தி ☞ கம்ப்யூட்டரில் பத்திரப்படுத்திக்கொள்வதற்காக உங்கள் முழு விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

என் பெயர் : ....

என் முகவரி : ....

.... பின்கோடு



வடை அடேங்கப்பா!

ஷோபா, பிரியா என்று இரண்டு இளம்பெண்கள். மாணவிகளான இவர்கள் நட்சத்திர ஹோட்டல் சமையல்காரர் செட்-அப்பில்! மேடையில் கேஸ் அடுப்பு. அதில் பளிங்கு போன்ற சுத்தமான எண்ணெய் கொண்ட வாணலி. பிரியா மூடி வைக்கப்பட்டுள்ள தூக்கைத் திறந்து, மாவு எடுத்து, வடை தட்டி வாணலியில் போடுகிறார். பதம் பார்த்து, எடுத்து, வாழைப்பட்டை கொண்டு தயாரிக்கப்பட்ட வட்ட வடிவத் தட்டில், அதன் அளவுக்குக் கத்தரித்த வாழை இலை போட்டு, அதில் வடைகளை எடுத்து வைத்து, சட்டினி போட்டு சாப்பிட வருகிற வாடிக்கையாளர்களுக்குத் தருகிறார், ஷோபா.

அதேபோல, கோலிகுண்டு சைஸில் தயாரித்த மினி போண்டா. சுத்தமென்றால் அப்படி ஒரு சுத்தம். ஒரு நாள் உபயோகித்த எண்ணெயை மறுநாள் உபயோகிப்பதில்லை.

'நளா' என்ற பெயரில் மாலை நேரங்களில் மட்டும் இயங்கும் இந்தச் சிறு பலகாரக் கடையில், இரண்டு வடைகளின் விலை ரூபாய் பதினைந்து; சுமார் பத்துப் பன்னிரண்டு கொண்ட ஒரு பிளேட் மினி போண்டா விலை ரூபாய் 25. விலையைக் கேட்டு ஷாக் ஆகி நிற்கிற நமக்கு விளக்கம் தருகிறார் வெள்ளை பாண்ட், சட்டையில் நெற்றியில் விபூதி குங்குமம் சகிதம் கல்லாப் பெட்டியில் உட்கார்ந்திருக்கும் இளைஞர் சத்ய காமன்.

''முத்து கிருஷ்ணசுவாமி மிஷின் டிரஸ்ட்' என்ற அறக்கட்டளை சென்னை அண்ணா நகரில் இயங்கி வருகிறது. அதன் சார்பில், குடிநீர் பிரச்னை மிகுந்த கோயம்பேடு, நெற்குன்றம் போன்ற பகுதிகளில், லாரியின் மூலமாக தினமும் குடி தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. அது தவிர, வட பழனியில் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு இலவச மருத்துவ வசதி அளிக்கிறோம். டாக்டர்கள் ஏழை நோயாளிகளைப் பரிசோதித்து, அவர்களுக்குத் தேவையான மருந்துகளையும் இலவசமாகவே தருகிறார்கள்.''

தவிர, ஞாயிற்றுக் கிழமைகளில் பஜன் நிகழ்ச்சிகள். அறக்கட்டளையின் சேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள

குடும்பங்களிலிருக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கு தையல் வகுப்பு, சமையல் வகுப்புகள் என்று அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான விஷயங்களையும் சொல்லித் தருகிறார்கள். டிரஸ்ட்டின் சேவைக்காகத் தேவைப்படும் நிதியைச் சேர்க்கத்தான் இந்த வடை வியாபாரம்!"

இந்த டிரஸ்ட் எப்படித் துவங்கப்பட்டது? திருநெல்வேலியைச் சேர்ந்த மாணிக்கவாசகம் என்பவர் சென்னைக்கு வந்து வியாபாரம் செய்தார். சமூக சேவையிலும் அவருக்கு மிகுந்த அக்கறை. அதனால் தமது குருவான முத்துகிருஷ்ணசுவாமி பெயரில் ஒரு டிரஸ்ட் ஆரம்பித்து நெல்லை, கோவை, சென்னை போன்ற இடங்களில் ஏழைகளுக்கு இலவச மருத்துவ உதவி செய்ய ஆரம்பித்தார்.

இப்போது அவர் இறந்து போனாலும் அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் அந்த சேவையை விடாமல் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றனர். இதைக் கண்ட சென்னை நகரின் பல்வேறு இடங்களிலுள்ள ஐம்பது குடும்பத்தினரும் இணைந்து சேவையாற்றுகின்றனர்.

எழும்பூர் மாண்டியத் சாலையில் உள்ள அல்ஸாமால் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் முன்பு, தினமும் மாலை நாலு மணிக்கு ஆரம்பித்தால் ஆறு மணி வரை வடை தயாரித்து விற்பனை செய்கிறார்கள். இவர்களின் சேவை மனப்பான்மையை நன்கு புரிந்து கொண்ட ரெகுலர் கஸ்டமர்கள், இங்கே சாப்பிட்டு விட்டு, வீட்டுக்கும் பார்சல் வாங்கிக் கொண்டு போவதுண்டாம்.

ஒரு தடவை, ஒரு ஆட்டோ டிரைவர் இவர்களிடம் வடை வாங்கிச் சாப்பிட்டு விட்டு, பணம் கொடுக்கும் போது, விலை ரொம்ப அதிகம் என்று கருத்துச் சொன்னாராம். உடனே இவர்கள் தங்கள் சமூக சேவையைப் பற்றி விளக்கிவிட்டு, அவர் கொடுத்த பணத்தில் ஐந்து ரூபாயை திருப்பித் தர முன்வந்த போது, "பரவாயில்லை! நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். இன்றைக்குக் குடிக்க இருக்கிற இரண்டு டீயைக் குடிக்காமல் மிச்சப்படுத்தி, உங்களுக்குக் கொடுத்த அதிகப்படி ரூபாயை அட்ஜெஸ்ட் செய்து கொள்கிறேன். உங்கள் இலவச மருத்துவ சேவைக்கு என் பணமும் பயன்படுவதில் எனக்கு சந்தோஷம்!" என்று சொல்லிவிட்டுச் சென்றாராம்.

இதுபோல் வேறெங்கும் வடை சுட்டு விற்கிறார்களா?

"இல்லை. ஒரு வெள்ளோட்டம் மாதிரிதான் கடந்த மூன்று மாதங்களாக இங்கே விற்பனையை ஆரம்பித்திருக்கிறோம். மக்களும் விலையைப் பார்க்காமல், அதன் பின்னுள்ள சேவையை உணர்ந்து வாங்க ஆரம்பித்துள்ளார்கள். மக்களின் இந்த ஆதரவு இன்னும் பெருகுகிறபோது, சென்னை நகரின் மற்ற இடங்களிலும் இதுபோல் விற்பனை செய்யலாம் என்றிருக்கிறோம். பிறகு தமிழ்நாட்டிலுள்ள பிற நகரங்களிலும் ஆரம்பிக்க உள்ளோம்."

– கௌதம் ராம்

அட்டை வண்ணப்படமும் படமும்: **யோகா**



ரமணரும் அணிலும்!

ரமணர் தினமும் ஒரு அணிலுக்குத் தமது கைகளாலேயே கொட்டைகளைக் கொடுப்பது வழக்கம். ஒரு நாள் ரமணர் பேப்பர் படித்துக் கொண்டிருந்தபடியே கொட்டைகளை உள்ளங்கையில் வைத்து அணிலுக்காக நீட்டினார். அணில் பொறுக்க முடியாமல் ரமணரின் கைவிரலைக் கடித்து விட்டது.

மறுநாள் அதற்குத் தானே தீனியை அளிக்காமல் அதன் முன்னால் வைத்து விட்டார். ஆனால் அணில் அதைத் தொடவில்லை. அவர் மேல் ஏறி விளையாடியது. பிறகு அவரைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தது, ரமணர் அதற்குரிய உணவை தமது கைகளால் எடுத்துக் கொடுக்கும் வரை!

– தகவல்: ஆர்.எஸ். மூர்த்தி.

ஆதாரம் : எம்பி பண்டிட் எழுதிய Traditions in Sadhana.

கலா உலா:

சினிமாவில் மிக முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆர்ட் டைரக்டர்கள். ஆனாலும் உரிய பாராட்டு, சிறப்பிடம் பெறாமலே போய் விடுகிறார்கள். இக்குறை நீங்கும் விதமாக மூன்று முன்னணி ஆர்ட் டைரக்டர்களைச் சிறப்பித்தது வேல்யூஸ் ஆர்ட் காலரி. சினிமாவின் நூற்றாண்டையொட்டி கிருஷ்ணமூர்த்தி, தோட்டாதரணி, பவானிசங்கர் ஆகிய மூன்று ஆர்ட் டைரக்டர்களின் ஓவியக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தது. சுகாசினி இந்தக் கண்காட்சியைத் துவக்கி வைத்தார். தொடர்ந்து, பரதக் கலைஞர் மீனாட்சி சித்தரஞ்சன் சினிமா பாடல்களைக் கொண்ட பரதநாட்டிய நிகழ்ச்சி வழங்கினார்!

பாரத் கலாசார், மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் ஆகிய அமைப்புகளில் ஏற்கெனவே இதே போல் ஆடியது உண்டு என்கிறார்.

'எப்படித் துணிந்தீர்கள்...?' என்று கேட்டால் மீனாட்சியிடம் விளக்கம் உண்டு: "விமர்சகர் வி.ஏ.கே. ரங்காராவ் ஒருமுறை கிளாசிகல் நடனமும் சினிமாவும் என்ற தலைப்பில் பேசினார். அது மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. இப்படியொரு நிகழ்ச்சி நடத்தும் எண்ணம் அப்போதுதான் முதன் முதலில் தோன்றியது. சுத்தமான பந்தணைநல்லூர்ப் பாணியில் ஆடி வருகிறோமே இப்படிப் புதுமை முயற்சிகளில் ஈடுபடலாமா...? என்று கூடவே தயக்கமும் எழுந்தது. துணிவைத் தந்தவர் திருமதி ஒய்.ஜி.பி. (பாரத் கலாசார நிறுவனர்) 'தவறில்லை! முயன்று பார்' என்றார். மேடையும்

வெறும் 'ஜெனரேஷன் காப்' வாதமில்லை...!



• மீனாட்சி

கொடுத்தார். நிகழ்ச்சிக்கு நல்ல வரவேற்பும் கிடைத்தது."

அன்று மீனாட்சி வழங்கிய பாடல்கள் 'அந்தி மயங்குதடி ஆசை பெருகுதடி...', 'காத்திருப்பான் கமலக்கண்ணன்...', 'அறியாப் பருவமடா...', 'சிந்தையறிந்து வாழ...'

"இந்தப் பாடல்களுக்கு ஏற்கெனவே பத்மினி, கமலா போன்ற நடனக் கலைஞர்கள் சினிமாவில் கௌரவமாகவே ஆடியிருக்கிறார்கள் – ஜதிகளும் அடவுகளும் சுத்தமாகவே இருந்தன... வார்த்தைகளும் ஆபாசமில்லாமல் கர்நாடக சங்கீத மெட்டிலேயே அமைந்திருக்கின்றன... ரசிகர்கள் அளித்த வரவேற்பைப் பார்க்கையில் என் முடிவு சரியானதாகவே படுகிறது..." என்கிறார் மீனாட்சி.

சர்ச்சை விரும்பிகள் சிலிர்த்தெழுவார்களா...?!

சாஸ்த்ரீய கலைஞர்கள் சினிமாவைப் பயன்படுத்திக் கொள்வது குறித்த சர்ச்சை



• லால்குடி



• விஜய்சிவா

லால்குடி டிரஸ்ட் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியிலும் வலம் வந்தது.

நிகழ்ச்சி...? 'கர்நாடக சங்கீதம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?' என்ற கருத்தரங்கம்!

கலைஞர், விமர்சகர், சபா நிர்வாகி, ஸ்பான்ஸர், இசையாசிரியர் என அத்துறை சம்பந்தப்பட்ட பலருக்குக் கருத்துச் சொல்ல மேடை தரப்பட்டது.

கலைஞர்களின் பிரதிநிதியாகப் பேசிய விஜய் சிவா, "கர்நாடக இசைக் கலைஞர்களுக்குச் சமுதாயத்தில் ஒரு பொறுப்பு இருக்கிறது; வெறும் மூன்று சதவிகிதத்தினரே கேட்கும் இந்த இசையைப் பெரும்பான்மையினர் ரசிக்கச் செய்ய வேண்டும்; தரம் தாழாமலே இதைச் செய்யலாம்; அதற்கான ஒரு வழி சினிமாவில் பாடி வெகுஜன ஈர்ப்பு பெற்று, அதன் மூலம் கச்சேரி அரங்குகளுக்கும் கூட்டத்தை ஈர்ப்பது" என்றார்.



• தோட்டாதரணி

மிக மென்மையாக மாற்றுக் கருத்துச் சொன்னார் லால்குடி ஜெயராமன்.

"ரசிகர்கள் எண்ணிக்கை பெருகத்தான் வேண்டும். ஆனால் விஜய் சிவா குறிப்பிட்ட உதாரணங்களான எம்.எஸ்., டி.கே.பி. போன்றோரது காலத்தில் சினிமா இசையே கர்நாடக இசையைத்தான் அடிப்படையாகக் கொண்டிருந்தது. பாபநாசம் சிவன் போன்றோர் இசையமைத்தார்கள். இன்று திரையிசையின் நிலை வேறு. இந்தச் சூழலில் கர்நாடக இசைக் கலைஞர்கள் அத்துறைக்குள் நுழைவதன் மூலம் தங்கள் முதன்மைத் துறையை மேம்படுத்த முடியுமா...? ,சந்தேகம்தான்!"

– இது வெறும் generation gap வாதமில்லை என்பதை உறுதிசெய்வது போல் ஒரு மாற்று யோசனையும் முன்வைத்தார் லால்குடி.

"கண்ணுக்கும் காதுக்கும் ஒருசேர விருந்தளிக்கும் மற்றொரு வலுவான சாதனமான டி.வி.யை நாம் தேர்ந்தெடுக்கலாம்... எல்லோரும் இணைந்து முயற்சி செய்து, ஒரு முழு நேர மியூசிக் சானல் தோன்றுவதற்கு வழிசெய்யலாமே..."

கருத்தரங்கில் வெளிப்பட்ட வேறு சில நியாயமான கவலைகள்:

- காஸெட் உதவியோடு பாடக் கத்துக்கிட்டு கச்சேரி பண்ண வர்றாங்களே!
- இசைக் கருவிகள் விலை எட்டாத உயரத்தில் இருக்கிறதே!
- கச்சேரிக்கு வரும் கூட்டமே குறைவு. அதில் தான வாத்தியங்களை ரசிக்கத் தெரிந்தோர் இன்னும் குறைவாய் இருக்கிறார்களே!
- ஆர்டிஸ்டுகள் இன்னும்

• கிருஷ்ணமூர்த்தி





• பவானி சங்கர்

சிறப்பாக டிரெஸ் பண்ணிக் கொள்ளலாம்!

– சென்னை பாரதீய வித்யா பவனில், இரண்டு நாட்களுக்கு (மொத்தம் சுமார் ஆறு மணி நேரம்) நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு வந்திருந்த கூட்டத்தைப் பார்த்தபோது, 'கர்நாடக இசையின் எதிர்காலம் குறித்துக் கவலைப்பட இத்தனை பேர் இருக்கிறார்களா...? பிறகென்ன கவலை!' என்றே எண்ணத் தோன்றியது.

வெளியிடப்பட்ட நியாயமான கருத்துகள் ஏற்கப்பட்டால், நல்ல யோசனைகள் நடைமுறையானால்... அபாச்சே இண்டியன் பாடியிருப்பது போல்.... NO PROBLEM!

- நமது நிருபர்கள்

உண்மை நிகழ்ச்சி :

பிக்னிக்குக்காக ஒரு கொலை!

டில்லி மானசரோவர் பார்க்கில் உள்ள டி.டி.ஏ. பலமாடிக் கட்டடங்கள் ஒன்றில், இரண்டு வாரங்களுக்கு முன்பு நடந்த ஒரு கோரக் கொலை, 'இப்படியும் ஒரு பையன் கொலை செய்வானா?' என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது.

சாகர் சிங்குக்குப் பதினேழு வயது. படிப்பு சரியாக வரவில்லை என்று பாதியிலேயே விட்டு விட்டான். ஆனால் நண்பர்கள் பட்டாளம் ஒன்று, கூடவே சுற்றியது. அர்ஃபீன், ரஷீத், நதீம் என்று இந்த மூவரும் எப்போதும் சாகர் சிங்குடன்தான் கொட்டம் அடிப்பார்கள்.

நாலு பேரும் பிக்னிக் போகலாம் என்று தீர்மானித்த போது, 'பணத்துக்கு எங்கே போவது?' என்று யோசித்தார்கள்.

"கவலையே படாதீங்க! நான் பார்த்துக்கறேன்!" என்று முன்னால் வந்தான் சாகர் சிங்.

"மானசரோவர் பார்க் ஃப்ளாட்டுக்குப் போவோம். என் சித்தப்பா பெண் பிரகதி மட்டும்தான் வீட்டில் இருப்பாள். ஒரே குத்து கத்தியால். அப்புறம் இருக்கிறதை எல்லாம் அள்ளிக் கொண்டு, ஜாலியாக பிக்னிக் போய் விடுவோம்!" என்று ஆர்ப்பாட்டமாகச் சொன்னான்.



"அந்த ஆளு பயங்கர ஃப்ராடு பேர்வழி!"

"என்ன விஷயம்?"

"'இருவர்' படம் தன்னோட வாழ்க்கைக் கதைன்னு மணிரத்னம் மேல கேஸ் போடப் போறாராம்!"



"நம்ம தலைவர் பலே பேர்வழி"

"என்ன சேதி?"

"ஜெயில்ல இருக்கறப்ப நாடாளுமன்றத் தேர்தல் வந்தா நாமினேசன் பண்றதுக்குப் பதிலா வேற ஆள வச்சு 'பினாமினேசன்' பண்ண முடியுமான்னு கேட்கறார்!"

— அம்பை தேவா

பிரகதி சேத்துக்குப் பன்னிரண்டு வயதுதான். வண்ணத்துப் பூச்சி போன்ற அழகான பெண். முகர்ஜி மெமோரியல் சீனியர் செகண்டரி பள்ளியில் எட்டாவது வகுப்புப் படிக்கிறாள். கூடவே அவள் ஐந்து வயதுத் தம்பி கௌரவ், வேறு அறையில் தூங்கிக் கொண்டிருந்தான். மாலை மூன்றுமணி தான் ஆகியிருந்தது.

அப்பா சிரஞ்சிவ்லால் சேத், காஷ்மீரி கேட்டில் ஆட்டோமொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் கடையில் வியாபார மும்முரத்தில் இருந்தார். அம்மா பாவ்னா சேத், தில்லி முனிசிபல் கார்ப்பரேஷன் தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக வோட்டுக் கேட்கப் போயிருந்தாள். அண்ணா அமான் சேத் வீட்டில் இல்லை. அக்கவுண்டன்ஸி பள்ளியில் இருந்தான்.



காலிங்பெல் சத்தம் கேட்டு, பிரகதி கதவைத் திறந்தாள்.

எதிரே சாகர் சிங்.

"சாகர் அண்ணா!" என்று ஆசையுடன் அவள் அழைத்ததுதான் கடைசி வார்த்தைகள்.

சாகர் அவளை அப்படியே இழுத்துக் கொண்டு போய், சமையலறை அருகே, ஒரு நீண்ட கத்தியால் அவள் கழுத்தை ஒரு வெட்டு வெட்டினான். குரல்வளை துண்டிக்கப்பட்டு, மூச்சுக்குப் போராடிக் கொண்டு, மெல்ல மெல்ல நகர்ந்து, அவள் பால்கனிக்கு வந்த போது –

சாகர் சிங் வீடு மொத்தத்தையும் அலசி, சகல நகைகளையும், இருக்கிற பணத்தையும் அள்ளிப் போட்டுக் கொண்டு நண்பர்கள் அர்ஷீன், ரஷீத் பின்தொடர ஒரே ஓட்டமாக ஓடி விட்டான்.

ஆனால் தற்செயலாக எதிர் ஃப்ளாட்காரர் ராஜேஷ் குப்தா, ரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்த பிரகதியைப் பார்த்து விட்டார்.

சிரஞ்சிவ்லால் சேத்துக்குத் தகவல் தெரிவித்துவிட்டு, பிரகதியைத் தூக்கிக் கொண்டு ஜி.டி.பி. மருத்துவமனைக்கு ஓடினார். காற்றுப் போய் வரும் மூச்சுக் குழல் அறுபட்டிருப்பதால், அவள் நிலைமை 72 மணி நேரத்துக்குப் பிறகே எப்படி இருக்கும் என்று சொல்ல முடியும் என்று டாக்டர்கள் சொல்லி விட்டனர்.

"சாகர் சிங் எங்களுக்கு உறவு மட்டும் அல்ல. ரொம்ப நல்ல நண்பனும் கூட. பிக்னிக் போகப் போகிறேன் என்று அவன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான். இப்படி என் தங்கையைக் கொலை செய்து, வீட்டில் உள்ளதை எல்லாம் கொள்ளை அடித்து, பிக்னிக் போக எப்படி மனசு வந்தது அவனுக்கு?" என்று அண்ணா அமான்சேத் கதறினான்.

சாகர் சிங்கும் அவன் நண்பர்களும் பிடிபட்டு விட்டார்கள்.

பன்னிரண்டு வயது பிரகதியின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

- சித்தார்த்



• எம்.ஸி.ஸி... அன்றும்...

எம்.ஸி.ஸிக்கு 150-ம் ஆண்டு :

வரப்போகிறது பரபரப்பான ஒன்டே மாட்ச்!

சென்னையில் கிரிக்கெட்டை அறிமுகப்படுத்திய பெருமை எம்.ஸி.ஸி. எனப்படும் மெட்ராஸ் கிரிக்கெட் கிளப்புக்குத்தான் உண்டு. சீட்டுக்கட்டு ஆடும் சௌகரியத்திலிருந்து ஐந்து நட்சத்திரத் தரம் கொண்ட மதுவகம் வரை, ஒரு 'கிளப்'புக்குண்டான சகல இலக்கணங்களும் இதற்கும் உண்டு. ஆனால் மற்ற பல கிளப்புகளிலிருந்து இது ஒரு விஷயத்தில் வித்தியாசப்படுகிறது. அதுதான், விளையாட்டுத் துறையில் இது காட்டும் அக்கறை; சிறந்த விளையாட்டு வீரர்களைத் தன் உறுப்பினர்களாக சேர்க்கக் காட்டும் ஆர்வம். கிரிக்கெட் மட்டுமல்ல, வேறு பல விளையாட்டுகளுக்குத் தேவைப்படும் தளமும், சாதனங்களும் கூட இங்கே அமைந்திருக்கின்றன. 1846-ல் ஸர் அர்பத்நாட் என்பவர் தொடங்கிய இந்த கிளப் தனது நூற்றி ஐம்பதாவது பிறந்த நாளை இவ்வருடம் கொண்டாடுகிறது.

அடையாறு போட் கிளப்புக்கு மாற்றாகத் (போட்டியாக?) தொடங்கப்பட்டது எம்.ஸி.ஸி. என்று சிலர் கூறினாலும் கிரிக்கெட் வளர்ச்சியில் இந்த கிளப் ஆற்றியுள்ள பங்கு மறுக்க முடியாதது. சொல்லப் போனால் கிரிக்கெட்டை பெரிய அளவில் ஆடுவதற்காக உருவானதுதான் இந்த கிளப்.

கிரிக்கெட்டை நம் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள்தான். அதே போல் அதைத் தீவிரமாக இங்கு தொடக்க காலத்தில் ஆடியவர்கள் பிரிட்டிஷ் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள்.

தொடக்கத்தில் ஆங்கிலேயர்களுக்கு மட்டும்தான் இந்த கிளப்பில் அனுமதி என்பது சற்று சங்கடமான உண்மையாக இருக்கலாம். என்றாலும் நகரின் மையப் பகுதியில், மெரீனா கடற்கரையிலிருந்து குறைந்த தூரமே உள்ள இந்த இடத்தில் இவ்வளவு அற்புதமான கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைத்துக் கொடுத்ததை நாம் மகிழ்வோடு நினைப்பது தான் நியாயம். இந்தியர்களையும், ஐரோப்பியர்களையும் கிரிக்கெட்டில் மோதவிட்ட 'பிரசி

டென்னிஸ் மேட்ச்' என்றழைக்கப்பட்ட பந்தயங்கள் அந்நாளில் வெகு பிரபலம். அவற்றை நடத்தியது எம்.ஸி.ஸி.தான். ரங்கசாமி, ரங்காச்சாரி, ராமாசிங், பாலையா நாயுடு போன்ற பல கிரிக்கெட் பிரபலங்கள் இந்தியாவுக்காக ஆடியிருக்கிறார்கள்.

தொடக்க காலத்தில் இந்த மைதானத்தைச் சுற்றிலும் வட்ட வடிவில் அகன்ற நிழல் தரும் மரங்கள். காலப்போக்கில் இந்த மரங்கள் அழிந்து விட்டன.

தமிழ்நாடு கிரிக்கெட் அஸோஸியேஷன் அமைக்கப்பட்டு, அதுதான் இந்தியாவின் அங்கீகாரம் பெற்ற கிரிக்கெட் பந்தயங்களை தமிழகத்தில் நடத்தும் என்ற நிலை தோன்றிய பிறகு, எம்.ஸி.ஸிக்கு மவுசு கொஞ்சம் குறைந்து விட்டது. இந்த கிளப்பின் பரப்பளவு சுருங்கிப் போய், கிரிக்கெட் மைதானத்தின் ஓரப்

•... இன்றும்



பகுதியில் இப்போது செயல்படுகிறது.

என்றாலும் இந்தக் கிளப்பின் வாசலிலிருந்து பார்த்தால் கணிக்க முடியாத அளவுக்கு உள்ளே பல விந்தைகள்.

அருமையான நீச்சல் குளம், அதை ஒட்டி ஒரு 'ஜிம்', நான்கு டென்னிஸ் கோர்ட்டுகள் – அவற்றில் இரண்டு சர்வதேசத் தரம் வாய்ந்த அளவில் ஒளிவிளக்குகள் பொருத்தப்பட்டவை, இரண்டு ஸ்னூக்கர் மேஜைகள், நன்கு பராமரிக்கப்படும் மூன்று ஸ்குவாஷ் விளையாட்டு மேடைகள் (இவற்றில் ஒன்றில்தான் சமீபத்தில் ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் பந்தயங்கள் நடைபெற்றன) தவிர கிரிக்கெட், ஹாக்கி ஆகியவற்றிற்கும் வசதிகள்.


உறுப்பினர் தொகை கீழ்-நடுத்தர மக்களால் தர முடியாத ஒன்று. அது பற்றி இவர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. காரணம் பெரும் பதவியில் உள்ளவர்களா என்பதும் உறுப்பினராவதற்கு ஒரு முக்கிய அளவீடாகக் கருதப்படுகிறது. என்றாலும் சிறந்த விளையாட்டு வீரர்களை கௌரவ உறுப்பினர்களாக இவர்கள் சேர்த்துக் கொள்ள முன்வருகிறார்கள்.

“கிளப் என்றாலே நமக்குத் தோன்றுவது குறிப்பிட்ட சில விஷயங்கள்தான். ஆனால் இந்த கிளப்பில் விளையாட்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட ஊக்கத்தால் ஈர்க்கப்பட்டு நான் இதில் உறுப்பினரானேன். கடந்த முப்பது வருடங்களாக இது என் இரண்டாவது வீடாகவே விளங்குகிறது. ஸ்குவாஷ், ஹாக்கி, டென்னிஸ் இவற்றில் ஏதாவது ஒன்றை ஒவ்வொரு மாலையிலும் ஆடுகிறேன். குறைந்த பட்சம் இங்கு வாக்கிங்காவது செல்வேன்” என்றார் முனீர் சேட். 1968-ல் மெக்ஸிகோவில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸில் கலந்து கொண்ட இந்திய ஹாக்கி குழுவில் இடம் பெற்றவர் இவர். பின்னர் நான்கு ஒலிம்பிக்ஸுக்கு அங்கீகாரம் பெற்ற அதிகாரியாக இந்திய ஹாக்கி குழுவுடன் சென்றிருக்கிறார்.

“இங்கு வந்துதான் நான் ஸ்குவாஷ் ஆடவே கற்றுக் கொண்டேன். 'டோர்னமெண்ட்'டுகளில் கலந்து கொள்ளும் அளவுக்கும் உயர்ந்தேன். ஷட்டில், நீச்சல், ஸ்னூக்கர் போன்ற பல பிரிவுகளைக் கொண்ட கிளப் இது. ஆனால் அதைவிட பெரிய சிறப்பு இத்தனை பிரிவுகளிலும் தேசிய அளவில் இந்த கிளப் பந்தயங்கள் ஏற்பாடு செய்ததுதான்” என்றார்.


இப்போது எம்.ஸி.ஸி

• சாத்தப்பா




• முனீர் சேட்





• சாரி



• துரை

யின் செயலாளராக விளங்கும் சாத்தப்பன் 1952லேயே இதில் உறுப்பினராகியிருக்கிறார். பாலு அழகண்ணன், கோபிநாத், கண்ணாயிரம், சூரியநாராயணா போன்ற அக்கால கிரிக்கெட் வி.ஐ.பி.க்களுடன் சேர்ந்து ஆடியவர்.

"நான் உறுப்பினரான மூன்றாவது வருடமே என்னை குழுவின் உறுப்பினராக நியமித்தார்கள். மொத்த குழு (13) உறுப்பினர்களில் பதினோரு பேர் ஆங்கிலேயர்கள். இருவர் மட்டுமே இந்தியர்கள். அப்போது கிளப்பின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையே 150தான் இருக்கும்.

"தொடக்கத்தில் தீவுத் திடல் பகுதியில் ஜிம்கானா அருகே இயங்கி வந்தோம். ஆர்க்காடு நவாப்தான் இந்த இடத்தை எம்.ஸி.ஸி.க்காக வழங்கினார். ஆரம்ப காலத்தில் மேற்கத்திய உடைகளை மட்டுமே அணிந்துவர வேண்டும் என்பதைக் கண்டிப்புடன் மேற்பார்வையிடுவார்கள். கிரிக்கெட் டென்னிஸ் ஆகியவற்றை ஆடும்போது - வெறும் பிராக்டிஸ்தான் என்றாலும் வெள்ளை உடைதான் அணிய வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார்கள். இந்தக் கிளப்பின் முதல் இந்திய உறுப்பினர் செட்டிநாடு அரசர்தான்!

"1952-வில் நான் உறுப்பினரான போது டென்னிஸ், கிரிக்கெட், ஹாக்கி ஆகிய மூன்று விளையாட்டுகள் மட்டுமே இருந்தன!" எனும் சாத்தப்பன் விளையாட்டு மட்டுமின்றி, பலவித சமூகத் தொடர்புள்ள செயல்களைச் செய்யவும் கிளப் முன்வர வேண்டும் என இளைஞர்கள் விரும்புவதாகச் சொல்கிறார்.

எம்.ஸி.ஸி. ஏற்பாடு செய்த முதல் சர்வ தேசப் பந்தயத்தில் இந்திய அணியுடன் மேற்கிந்திய அணி மோதியது. இதை 'இந்து' நாளிதழுக்காக 'கவர்' செய்த மூத்த புகைப் படக் கலைஞரான சாரி தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

"அப்போதெல்லாம் கிரிக்கெட் மைதானம் உண்டே தவிர, பார்வையாளர்களுக்கான ஸ்டேடியம் கிடையாது. புகைப்படம் எடுக்கவும் போதிய வசதிகள் இல்லை. மரத்தின் மேல் ஏறிக் கொண்டு கூட புகைப்படங்களை எடுத்தேன்.

"இப்போது ரஞ்சி பந்தயங்களுக்குக் கூட பார்வையாளர்கள் கணிசமாக வருவதில்லை. அப்போது எம்.ஸி.ஸி. நடத்திய ப்ராக்டீஸ் மேட்ச்களைப் பார்க்கக் கூட நிறைய கூட்டம் வரும்.

"கிளப்பின் நிர்வாகியாக விளங்கிய சி.பி. ஜான்சனைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். மைதானத்தை வெல்வெட் போல வைத்திருந்தார். கிரிக்கெட்டைத் தவிர, ஜாகிங், ஓட்டம் ஆகிய எதற்கும் அங்கு அனுமதியில்லை. அவர் காலத்தில் நாய் போன்ற மிருகங்களையெல்லாம் கிளப்பின் பக்கமே அனுமதித்ததில்லை. அப்படிக் கண்போல் பார்த்துக் கொண்டார்."

ஐந்தாவது வயதிலேயே இந்தக் கிளப்பின் டென்னிஸ் கோர்டில் பந்து எடுத்து கொடுப்பவராக (Ball picker) வேலைக்குச் சேர்ந்தவர் துரை. நாற்பத்தி நான்கு வயதான இவர் இப்போது இதே கோர்டில் "மார்க்கர்" ஆக பணிபுரிகிறார். டென்னிஸ் விளையாட வருபவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வது இவர் கடமை. புதியவர்கள் கேட்டுக் கொண்டால் டென்னிஸ் விளையாடும் ஆரம்ப முறையைச் சொல்லித் தருவது, ஒரு கை குறைந்தால் தாமும் டென்னிஸ் விளையாடுவது ஆகியவையும் இந்த உதவிகளில் அடக்கம்.

பதினெட்டு ரூபாய் மாதச் சம்பளத்தில் இங்கு வாழ்க்கையைத் தொடங்கிய இவர், மூவாயிரம் ரூபாயையும் தாண்டி விட்டதைக் குறிப்பிடுகிறார்.

"இங்கிலீஷ்காரங்க எல்லாம் ரொம்ப ஸ்டிரிக்டா இருப்பாங்க. எல்லா மீட்டிங்குகளுக்கும் அத்தனை பேரும் கோட், டையோட தான் வருவாங்க. உட்கார்ந்தால் கூட எங்கே உட்காரணும், எப்படி உட்காரணும்னு கண்டிப்புடன் சொல்லிக் கொடுத்தாங்க. டைட்டா வேலை வாங்கிப்பாங்க. ஆனா குறிப்பிட்ட வேலை நேரம் முடிஞ்ச உடனேயே வீட்டுக்குப் போகச் சொல்லிடுவாங்க'' என்கிறார். எம்.ஸி.ஸி., ஜிம்கானா, காஸ்மோபாலிடன் கிளப், எம்.யு.ஸி., வேப்பேரி ஒய்.எம்.ஸி.ஏ. ஆகியவற்றின் "மார்க்கர்"களுக்கிடையே ஆண்டு தோறும் நடைபெற்று வந்த டென்னிஸ் பந்தயங்கள் பற்றி மகிழ்ச்சியுடன் நினைவு கூர்கிறார்.

"அரையிறுதிப் போட்டி வரை கூட நான் ஜெயிச்சதுண்டு" என்றார் பெருமையுடன்.

1998 ஜனவரி வரை தனது 150 ஆவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாட தீர்மானித்திருக்கிறது இந்த கிளப். பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தவிருக்கிறது. இவற்றின் சிகரமாக இந்தியாவுக்கும் மற்றொரு சர்வதேச கிரிக்கெட் அணிக்குமிடையே ஒரே ஒருநாள் பந்தயத்தை நடத்தவும் தீர்மானித்திருக்கிறது. அந்த சர்வதேச அணி ஸ்ரீலங்காவாக இருக்க வாய்ப்புகள் அதிகம் என்கிறார்கள்.

- குல்லூ


TV மார்சனம்:

●● எதிர்பாராத திருப்பமாகப் பெரியார் தாசன்! எங்கே? விஜய் டீவியின் 'மெல்லப் பேசுங்க'ளில்! 'நாராயணன்' கான்ஸ்டண்ட் என்றாலும் வழக்கமாக வருகிற 'அண்ணே!'வுக்கு என்னவானதோ தெரிய வில்லை; பெரியார்தாசன் அந்த இடத்தில் தலைவராகி விட்டார். 'அண்ணே'வின் காது கிழியும் சப்தத்தை விட பெரியார் தாசனின் மென்மையான பேச்சு நல்ல மாறுதல்தான்!

●● ஏ.டி. என்னில் ஒருநாள் பஞ்சாபி நாட்டுப்புறப் பாடல்கள். காதல், பிரிவு, சோகம் என்று பல்வேறு விதமான பாடல்கள். நம்மூர் நாகூர் அனீபா மாதிரியான குரலில் கேட்கக் கேட்க இனிமையாக இருந்தன. அந்தப் பாடல்களை மேடை போட்டுப் பாடாமல் அதன் பாவங்களை நடிக்க வைத்துப் படம் பிடித்திருந்த விதம் கூடுதல் இனிமை! அது சரி, அதுபோல் நமது நாட்டுப்புறப் பாடல்களையும் ஒலி – ஒளி பரப்புகிற எண்ணம் ஏன் யாருக்குமே வரவில்லை? சினிமா சப்தங்களைக் கேட்டுக் கேட்டுப் புளித்து விட்டது போங்கள்!

●● 'பிரம்மச்சாரியாக இருப்பவர்கள் அதிர்ஷ்டக்காரர்கள் என்று பதில் சொல்கிறீர்களே? மனைவி பக்கத்தில் இல்லாத தைரியத்தில்தானே இப்படிச் சொல்கிறீர்கள்?' – விஜய் டீவி துக்ளக் தர்பாரில் எம்.என்.ராஜும் சோவிடம் கேட்டார். 'ஆக, பெண்கள் பக்கத்தில் இல்லாமல் போனால் ஆண்கள் தைரியசாலிகளாக இருப்பார்கள் என்பதை நீங்களே சொல்லி விட்டீர்கள்!' என்று அப்படியே தமாஷாகத் திருப்பி விட்டார் சோ. அவருடைய தர்பாரில் அவரையே மடக்க முடியுமா என்ன!

●● மனிதர்கள் மட்டும்தான் நடக்கிறார்களா என்ன! எறும்பு, கரப்பான்பூச்சி, தேள், அட்டை எட்டுக்கால் பூச்சி என்று எல்லா உயிரினங்களும்தான் நடக்கின்றன. அவற்றின் நடையை எப்போதாவது நாம் பார்த்து ரசிக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறோமா? ரசிக்க வைத்து விட்டார்கள் டிஸ்கவரிகாரர்கள். ஒவ்வொன்றின் நடையையும் குளோசப்பில் பார்க்கிறபோது ஆச்சரியமாய் இருந்தது. கம்பீரமான நடைக்குச் சொந்தக்காரர்கள் நாம் மட்டும் தான் என்று யாராவது நினைத்திருந்தால் அதை உடனடியாக மாற்றிக் கொள்ளுங்கள். ஒவ்வோர் உயிரும் அதனளவில் கம்பீரம்தான்!



நேரில் போவானேன்? மணியார்டர் செய்யலாமே!

●● 'வீடு தேடி வரும் விஜய்'யில் இப்போது மெட்ரோ பிரியா. வீடு வீடாகப் போய் ஆயிரம் ரூபாய் தருகிறார். பிரியாவின் பிளஸ் பாயின்டே அவரது 'லொடலொட பேச்சுத்தான். அது இப்போது சுத்தமாக அவரிடம் இல்லையென்பதால் நிகழ்ச்சி போரடிக்கிறது. ஒவ்வொரு வீட்டுக்கும் படப்பிடிப்புக் குழுவினர் சகிதமாகப் போய் போரடித்து ஆயிரம் ரூபாய் தருவதை விட, பேசாமல் அந்தத் தொகையை மணியார்டர் செய்து விடலாமே!

●● கணவனுக்கு இன்னொரு பெண்ணுடன் கள்ளத் தொடர்பு. இது தெரியவந்ததும் மனைவி மனமுடைகிறாள். திடீரென்று ஒருநாள் காணாமல் போகிறாள்! காவல் துறை வேட்டையாடுகிறது. தம்பதியின் படுக்கையில் வெறும் கண்ணுக்குப் புலப் படாத சில அழுக்குப் பொட்டுகள் கண்டுபிடிக்கப்பட, தடய அறிவியல் நிபுணர்கள் அழைக்கப்படுகிறார்கள். படிப்படியாக புதிர் அவிழ்ந்து கணவனே கொலைகாரன் என்பதை ஊர்ஜிதப் படுத்துகிறார்கள். கொலை செய்து மனைவியின் உடலை ஹாக்ஸாவால் கூறுபோட்டு நதிக்குள் தள்ளிய அவன் கிரிமினல் மூளையைக் காட்டிலும் அதிக மூளை துப்பறியும் துறைக்கு.. அத்தனையையும் ஒரு திகில் பட சுவாரஸ்யத்துடன் அரைமணி நேர டீ.வி. படமாக்கிய டிஸ்கவரிக்கு அதை விட, அதைவிட, அதைவிட அதிக மூளை!

– 'டிஷ்'

P.R.C. கார்மெண்ட்ஸ், கரூர்.

இந்நிறுவனம் "பாரதப்பிரதமரின் படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்" கீழ், 1984 ம் ஆண்டு கரூர் கிளை கனரா வங்கியின் பொருளாதார உதவியுடன் துவக்கப்பட்டு 1984 ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

மீண்டும் புதுமைத் திட்டம் No. 2

சில மாற்றங்களுடன் 07-02-1997 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வங்கி ஒன்றின் நீண்டகால டெபாசிட் ரசீது பெறப்பட்டு 'சிறு சேமிப்பு' ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்தின் உறுப்பினர்களின் அன்றாட தேவைப் பொருட்கள் அனுப்பப்படுவதின் மூலம், அவர்களுடைய சிறிய அளவு தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது.

ஒரே ஒருமுறை ரூபாய் 500/- செலுத்துங்கள். உடனடியாக ரூபாய் 905/-க்கான வங்கி ஒன்றின் டெபாசிட் ரசீதை பெற்றுக் கொள்ளுங்கள். இத்துடன் ஆண்டுக்கு ஒருமுறை வீதம் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு ரூபாய் 140/- மதிப்பிற்கு கீழ்கண்ட பொருள்களில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு பெற்றுக் கொள்ளுங்கள்.

திட்ட விபரம் :

1. இத்திட்டத்திற்காக ஒரே ஒருமுறை ரூபாய் 500/-ஐ D.D. (or) M.O. மூலமாக எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துங்கள்.
2. உங்கள் பணம் கிடைக்கப் பெற்றவுடன், உங்கள் பெயரில் வங்கி ஒன்றில் டெபாசிட் கணக்கு துவக்கப்படும். இதற்கான வங்கியின் விண்ணப்பப் படிவம் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் கிடைக்கப் பெற்றவுடன் உங்கள் பெயரில் ரூபாய் 905/- க்கான டெபாசிட் ரசீது ஒன்று பெறப்பட்டு உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த டெபாசிட் ரசீதின் முதிர்வு காலம் 90 மாதங்களாக இருக்கும்.
3. ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு தேவைப்படும் பொருட்களை பற்றிய விபரங்கள் உங்களிடமிருந்து கேட்டறியப்படும். இதற்கான விலைப்பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் அனுப்பி வைக்கப்படும். இதற்கான பதில் கிடைக்கப் பெற்றவுடன் ரூபாய் 140/- மதிப்புக்குரிய பொருட்களை தபால் அல்லது கூரியர் சர்வீஸ் மூலம் எங்கள் நிறுவனத்தின் செலவில் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு ஏழு ஆண்டுகள், ஆண்டுக்கு ஒருமுறை வீதம், (140 X 7 X 980/-) தொடர்ந்து அனுப்பி வைக்கப்படும். முதல் தவணை பொருட்கள் நீங்கள் பணம் செலுத்திய தேதியிலிருந்து ஓராண்டு கழித்து அனுப்பி வைக்கப்படும்.

பொருட்கள் விவரம்

1. "வில்லி" உள்பாவாடைகள்
2. நைட்டீஸ்
3. கரூர் நிட்டிங் கம்பெனியாரின் ISI முத்திரைபெற்ற PRESTIGE பனியன்கள்
4. லுங்கிகள் (கைலிகள்)
5. பெட்சீட்

இதற்கான விலை மதிப்பு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பிவைக்கப்படும்.

இத்திட்டத்தில் சேர்ந்து அனைவரும் பயன்பெற வேண்டுகிறோம்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :


P.R.C. கார்மெண்ட்ஸ், ☎ 04324 - 61946

2/12, A.N.R. காம்ப்ளக்ஸ் 11-வது மாடி,

முருகநாதபுரம், கரூர் - 639 002.

குறிப்பு :

நீண்ட கால டெபாசிட்களுக்கு வங்கிகள் அளித்து வரும் வட்டி விகிதங்களில் வங்கிகளுக்கிடையே மிகுந்த அளவு ஏற்றத்தாழ்வு இருப்பதாலும், வட்டி விகிதங்கள் அடிக்கடி மாறுதலுக்கு உட்படுத்தப்படுவதாலும் எந்த வங்கியில் டெபாசிட் செய்யப்படுகிறது என்பது இத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.





1997 மார்ச் 2
தாது மாசி 19
மலர் : 55
இதழ் : 31

கல்கி
தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




கவிழும் அபாயத்தில் கௌடா அரசு!

பஞ்சாப் தேர்தல்களில் காங்கிரஸ் அடைந்த தோல்விக்குத் தார்மீகப் பொறுப்பேற்றதன் மூலம், கட்சிக்குள் எதிர்ப்பாளர்களின் குரலை அடக்கி விட்டார் சீதாராம் கேசரி! பல்வேறு மாநில இடைத் தேர்தல்களிலும் அக்கட்சி பலத்த அடியே வாங்கியிருக்கிறது. இந்தத் தோல்விகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில், காங்கிரஸ் புதிய பல்லவி ஒன்றைப் பாட ஆரம்பித்திருக்கிறது :

'ஐக்கிய முன்னணி அரசுக்கு இனி நிபந்தனையற்ற ஆதரவு தரமாட்டோம்; கொள்கை அடிப்படையிலான ஆதரவே வழங்குவோம்' என்பதே அந்தப் பல்லவி.

காங்கிரஸின் ஆதரவு குறித்து தேவேகௌடா போட்ட கணக்குகளையெல்லாம் முறியடிக்கும் விதமாக ஒலிக்கிறது இந்த அறிவிப்பு. காங்கிரஸ் செயற்குழுவின் இந்த முடிவை, காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியும் ஆமோதித்து விட்டது.

சர்க்கரை, அரிசி, கோதுமை தொடங்கி, பல்வேறு பெட்ரோலியப் பொருள்கள், மின்சாரம், ரயில் கட்டணம் வரை அனைத்தும் விலை ஏறவிருக்கின்றன. இதற்குக் காரணம், மக்கள் நலனை உத்தேசித்து அரசாங்கம் இவற்றையெல்லாம் மானிய விலைக்கு வழங்கி வந்தமைதான். பல்லாயிரக் கோடிக்கணக்கான ரூபாய் மானியச் சுமையைத் தொடர்ந்து தாங்க அரசுக்குப்



பொருளாதார வலிமை இல்லை. உற்பத்திக்கு உதவாத அரசாங்கத்தின் செலவினங்களைக் குறைத்து, பொருளாதாரத்தை மேம்படுத்துகிற ஆற்றலும் அரசுக்கு இல்லை.

1994 முதல், தானிய கொள்முதல் விலை பலமுறை உயர்ந்திருந்தாலும், அரசின் பொது வினியோகப் பிரிவில் அவற்றின் விலை ஏற்றப்படாமலே இருந்திருக்கிறது.

இனியும் தாங்க முடியாத நிலையில்தான் 'விலை உயர்வு' என்கிற முடிவுக்கு வந்திருக்கிறது அரசு.


இந்தியாவின் இன்றைய அபாயகரமான பொருளாதாரச் சூழ்நிலையில், எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இதே முடிவுக்குத்தான் தள்ளப்படும். இதை அனைத்துக் கட்சிகளும் நன்றாகவே உணர்ந்துள்ளன.

மானியங்களை நீக்கக்கூடாது என்று வற்புறுத்தும் தோழமைக் கட்சியான சி.பி.ஐ. (எம்) கூட, அதற்கு மாற்று வழி எதுவும் வழங்க முடியாத நிலையில் இருக்கிறது.

ஆட்சியில் இல்லாத காங்கிரஸ், பி.ஜே.பி. போன்ற கட்சிகளுக்கோ இது மிகவும் சௌகரியமான சூழலை உருவாக்கியிருக்கிறது.

எதிர்க்கட்சியான பி.ஜே.பி., விலையுயர்வு முடிவுகளைக் கடுமையாக எதிர்க்கிறது. ஆதரவுக் கட்சியான காங்கிரஸோ, 'எங்களுக்கு இந்தக் கொள்கைகளில் உடன்பாடில்லை; எனவே அரசின் இந்த முடிவை நாங்கள் ஆதரிக்கவில்லை. ஏதோ, பெருந்தன்மை காரணமாக ஆதரவு விலக்காமல் இருக்கிறோம்...' என்று நல்ல பெயர் தட்டிக் கொள்ளப் பார்க்கும்.

விலையேற்றங்கள், மானியங்கள் குறைப்பு, தொடர்ந்து பொது பட்ஜெட்டில் கடுமையான வரிகள் போன்ற கசப்பான நடவடிக்கைகளை கௌடா அரசு நிறைவேற்றி முடிக்கும்வரை



காத்திருந்து, பிறகு காங்கிரஸ் செயல்படும்.

வெகுஜன ஆதரவு பெற முடியாத, பொருளாதார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபின், வேறு ஏதேனும் சிறிய காரணம் காட்டி, காங்கிரஸ் தனது ஆதரவை விலக்கிக் கொள்ளக்கூடும்.

நேரம் கனியும்போது அவ்வாறு செய்தால், 'மீண்டும் வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணி நிச்சயம் படுதோல்வி அடைய, நாம் ஜெயித்து ஆட்சியைப் பிடித்து விடலாம்' என்பது காங்கிரஸின் கணக்கு. ஆனால் இந்தக் கணக்குப் பிசகிப் போவதற்கான சாத்தியக்கூறுகளே அதிகம்.

மக்களின் பேராதரவைப் பெற்று, மீண்டும் மத்தியில் ஆட்சி அமைக்கும் தகுதியில் இன்று காங்கிரஸ் இல்லை. சமீபத்திய இடைத் தேர்தல் முடிவுகளே இதற்குச் சான்று.

பொதுத் தேர்தலில் காங்கிரஸுக்கும் பி.ஜே.பிக்கும் நேரடிப் போட்டி என்று அமைந்தால் கூட, புதிய ஆட்சி அமைக்கும் வாய்ப்பு பி.ஜே.பிக்கே அதிகம்.

அந்தப் பெரும் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலையில் உள்ள பி.ஜே.பி., ஹிந்துத்வா கோஷங்களை மூட்டைகட்டி விட்டு, ஹிந்து அடிப்படைவாதிகளுடனான தொடர்புகளையும் துண்டித்து விட்டு, அனைவருக்கும் பொதுவாக, சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

சீரான பொருளாதாரக் கொள்கைகளையுடைய ஒரு கட்சி, உணர்ச்சி அடிப்படையில் மக்களைக் கவர முயற்சி செய்யாமல், நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபட முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும்.

இது மட்டும் நடக்குமானால், கௌடா அரசு திட்டமிட்டுள்ள விலை ஏற்றங்களைக் கூட மக்கள் விரும்பி ஏற்பார்கள் - அது ஒரு சிறந்த, நிலையான ஆட்சி மலரக் காரணமாக இருக்கும் என்பதால்!

நெக்லஸ் கேட்ட உடன்

வேண்டாமே இனியொரு யுத்தம்!

●● 'அணு ஆயுதப் போர்' பற்றி வகுப்பில் விளக்குவதற்காக அது பற்றிய கட்டுரையைத் தயார் செய்து விட்டு உறங்கினேன். கனவு... தெருவில் நான் நடந்து கொண்டிருக்கும்போது வானத்தில் நான்கு போர் விமானங்கள். அதிலிருப்பவர்கள் ஏதோவொரு பெரிய பொருளை எடுத்து வீச, அது பெருஞ்சப்தத்துடன் வெடிக்கிறது. எங்கும் புகை மண்டலம்; கட்டடங்களின் இடிபாடுகளுக்கிடையில் மனிதர்கள்; குழந்தைகளின் கருகிய உடல்கள். என்னை நோக்கியும் ஓர் அணுகுண்டு வருகிறது. நான் கண்களை மூடிக் கொண்டு 'ஆ' என்று கத்திக் கொண்டே விழித்தேன். அம்மாடி! அந்தக் கோரம் நிஜத்தில் இல்லை. வேண்டாமே இனியொரு போர்!

வே. ராதா, விஷ்ணுபுரம்.

யானை வரும் பின்னே...

●● நான் இறந்து போகிறேன். கூடத்தில் கிடத்தப்பட்டிருக்கிறது எனது உடல். சுற்றிலும் கதறியழும் சொந்த பந்தங்கள். என் தாய்



சோகமே வடிவாக அமர்ந்திருக்கிறார். இறுதிப் பயணத்துக்காக எனது உடலை எடுக்க வருகின்றனர். என் தாயார் எடுக்க விடாமல் தடுத்துக் கதறுகிறார்... நான் திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறேன். அதிகாலையில் கண்ட இந்தக் கனவு ஒரு சோகத்திற்கான அறிகுறி என்பதை



நான் அப்போது அறியவில்லை. ஆம்; ரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த எனது தாயார் அதே நாளில் காலமானார். முப்பது ஆண்டுகளாக அந்தக் கனவை மறக்க முடியவில்லை.

சி.பி. சம்பத், சென்னை – 63.

நெக்லஸ் கேட்ட உ.பி.ச.

●● சில மாதங்களுக்கு முன் ஒரு முத்து நெக்லஸ் வாங்கினேன்; நிஜத்தில்தான்! அனைவரும் அதன் அழகைப் பாராட்டினார்கள். சமீபத்தில் ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் நான் பங்கேற்ற போது அதை அணிந்திருந்தேன். பிறகு அதை லாக்கரில் வைத்து விட்டேன். இந்த நிலையில் ஒருநாள் என் கனவில் உடன்பிறவா சகோதரி தோன்றினார். அவரை வரவேற்று அமரவைத்து, "என்ன சாப்பிடு

இணைந்து வழங்கும் வாரம் ஒரு சவரன்!

பிறவா சகோதரி!

கிறீர்கள்?" என்றேன். "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்; சமீபத்தில் நீங்கள் தொலைக் காட்சியில் அணிந்திருந்த நெக்லஸ் மிகவும் அழகாக இருந்தது. அதைக் காண்பியுங்கள்!" என்று அவர் கூற நான் அலறியடித்துக் கொண்டு எழுந்தேன். கணவரிடம் சொல்ல, அந்த நள்ளிரவிலும் விழுந்து விழுந்து சிரித் தோம்.

ஆர். இந்திரா, சென்னை - 33.

ஒரு சவரன் பரிசு பெறுபவர் :
ஜி. செல்லத்துரை,
புஷ்பம் இல்லம்,
பாரதிபுரம் 5-வது தெரு,
எஸ். ஆலங்குளம்,
ஆனையூர் (அஞ்சல்),
மதுரை - 625 014.

ஓவியம் நிஜமான சோகம்!

●● நான் வழக்கமாகச் செல்லும் சலூனில் ஓர் ஓவியம். அது கப்பல்கள் எரிந்து கொண் டிருக்கும் கடல் போர் ஓவியம். என் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்ட அந்தக் காட்சி, தீபா வளிக்கு முதல் நாள் என் கனவில் வந்தது. திருச்செந்தூர்தான் என் சொந்த ஊர் என்ப தால், தீபாவளியன்று அதிகாலை முருகனை வழிபடச் செல்வது வழக்கம். அப்படிச் சென்ற போது, கடலில் பல படகுகள் எரிந்து கொண் டிருந்தன. கட்டு மர மீனவருக்கும் விசைப் படகு மீனவருக்குமிடையிலான பிரச்னையால் அப்படியொரு போர்க் கோலம். நான் கண்ட கனவு சில மணி நேரங்களிலேயே நிஜமாக மாறிய அந்தக் கனவைக் கடந்த இருபதாண் டுகளாக மறக்க முடியவில்லை.

ஜி. சரவணன், திருச்சி - 5.

ஃபிரிட்ஜை துரத்தினேன்!

●● எங்கள் வீட்டில் ஃபிரிட்ஜ் வாங்கிய புதிது. எல்லோரும் அது பற்றியே பேசிக் கொண்டிருந்தோம். ஒருநாள் என் கனவில் ஃபிரிட்ஜ் ரிப்பேராகி விட்டது. வீட்டில் யாருமே இல்லை. எப்படி ரிப்பேரானது என்று மற்றவர்கள் கேட்டால் என்ன பதில் சொல் வது என்று நான் யோசித்துக் கொண்டிருக் கும்போதே, ஃபிரிட்ஜ் தானாகவே நடந்து ரோட்டுக்குச் சென்று ஓட ஆரம்பிக்கிறது. நானும் அலறியடித்துக் கொண்டு அதைத் துரத்திக் கொண்டு ஓடுகிறேன். அது நிற்காமல்



ஓடி ஒரு கட்டடத்துக்குள் செல்ல, நானும் போகிறேன். அது ஃபிரிட்ஜ் ரிப்பேர் செய்கிற இடம்! இந்தக் கனவை மற்றவரிடம் சொன்ன போது, ஒரே 'சிரிப்புமயம். இன்றும் கூட என் பிள்ளைகள் அதைச் சொல்லி கேலி பேசுவார்கள்.

ஆர். பட்டு ராசேந்திரன், சென்னை - 11.

போட்டி — 5; முடிவு!



முத்தமிட்ட அத்தை மகன்!

●● என் அத்தை வீட்டுக்கும் எங்களுக்கும் போக்குவரத்துக் கூட இல்லாத அளவுக்குப் பகை. இந்த நிலையில்தான் ஒருநாள் கனவில் என் அத்தை மகன் வந்து நான் திமிறத் திமிற என்னை முத்தமிட்டு விட்டார். நான் வேர்த்து விறு விறுத்து விழித்த நிலையில், அன்று காலையே என் அத்தை வீட்டார் என்னைப் பெண் கேட்டு வர, பகை மறந்து உறவானது. அந்தக் கனவை எப்படி மறக்க முடியும்?

திராவிடமணி மேகநாதன், திருபுவனம்.

ஏக்கம் போக்கிய கனவு

●● எனது நினைவு தெரிந்த நாள் முதல் தஞ்சாவூர் பங்காரு காமாக்ஷியம்மனின் விஸ்வரூப தரிசனத்துக்குப் போவது வழக்கம். கோயிலுக்கு எதிரில்தான் வீடு என்பதால் தனுர் மாதம் முழுவதும் செல்வோம். இந்த ஆண்டு நான் புக்ககம் வந்து விட்டதால் முடியாத ஏக்கம். சரியாக ஜனவரி 1-ல் அந்தக் கனவு. ஆம்; காமாக்ஷியம்மன் சந்நிதியில் நான் விஸ்வரூப தரிசனம் பார்க்கிறேன், ஒரே விநாடிதான்! திடுக்கிட்டு எழுந்தேன். தூக்கத்தோடு அந்த ஏக்கமும் போனது.

வசந்தி ராமச்சந்திரன், திருப்பாதிரிப்புலியூர்.

முதல்வராக்கிய கனவு!

●● நான் முதல்வர். நண்பர்கள், அமைச்சர்கள். சட்டமன்றத்தில் நான் பேசுகிறேன். ஏழைகளுக்கு உதவுகிறேன்... சட்டசபை நிகழ்ச்சிகளை விடாமல் படிப்பதால் இப்படியொரு கனவு வந்தது எனக்கு. கனவிலாவது முதல்வரானேனே! எப்படி அதை மறக்க முடியும்?

ஜி. செல்லத்துரை, எஸ். ஆலங்குளம்.

கணவரைத் திருத்திய கனவு

●● என் கணவர் செயின் ஸ்மோக்கர். ஒரு நாளைக்கு எழுபது சிகரெட்டுகள் புகைப்பார். கூடாது என்று யாராவது சொன்னால் கோபம் பொத்துக் கொண்டு வரும் அவருக்கு. இந்த நிலையில் ஒருநாள், அவர் சிகரெட்டை விட்டு விட்டு தாடியும் சந்தனப் பொட்டுமாக ஆன்மீகவாதியாகி விட்டதாக ஒரு கனவு எனக்கு. கனவை நனவாக்க, அவருக்கு தாடி அழகாக இருக்குமென்று நான் கூற, நண்பர்களும் ஆமோதிக்க, அவரும் தாடியும் பொட்டுமாகக் காட்சியளிக்க ஆரம்பித்தார். அந்த மாற்றம் அவரது புகைப்பழக்கத்தையும் குறைத்து இப்போது ஒருநாளைக்கு ஒரு சிகரெட்தான் என்கிற நிலைக்கும் வந்து விட்டார்!

திருமதி கருணாம்பாள், அம்பாத்துறை.

கனவில் வந்த கேள்வித்தாள்!

●● பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு. வரலாறு - புவியியல் தேர்வுக்கு முதல் நாள் இரவு கையில் புத்தகம் வைத்தபடியே தூங்கிப் போனேன். திடீரென என் கனவில் விரிவான விடையளி என்கிற தலைப்பில் ஐந்து கேள்விகள் கண்முன் தெரிய, நிஜமாகவே கேள்வித்தாள் கொடுக்கப்பட்டிருக்கிறதோ என்று திடுக்கிட்டு விழித்தேன். பார்த்தால் காலை ஆறு மணி. அவசரமாக அந்த ஐந்து கேள்விகளுக்குமான விடைகளையும் படித்து விட்டுத் தேர்வெழுதச் சென்றால், என்ன அதிசயம்! அதே ஐந்து கேள்விகள். நான் அதில் 94 மார்க் வாங்கிப் பள்ளியிலேயே முதலாவதாக வந்தேன். அந்தக் கனவை எப்படி மறக்க முடியும்?



ஜோதி,

மதுரை - 20

"எல்லாம் நியாயமான முறையிலேயே நடந்தன!"

• வீ.கி. இராசகோபாலன்

தங்களின் 16.2.1997 தேதியிட்ட கல்கி இதழில் 'மீண்டும் எட்டிப் பார்க்கிறதா ஊழல் பூதம்' என்ற செய்திக்கு எனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு அளிக்க விரும்புகின்றேன்.

தங்களின் வார இதழில் வெளிவந்துள்ள தவறான தகவலைப் போன்றே ஒரு செய்தி 14.1.1997 நாளிட்ட இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது. அதற்கு நான் அளித்த விளக்கமும் மறுப்பும் அதே நாளிதழில் 4.2.1997 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

காவல் துறையில் உள்ள உதவி ஆய்வாளர் பதவிகள் இரண்டு வகையான பணி நியமனங்கள் மூலம் நிரப்பப்படுகின்றன. ஒன்று இளங்கலை பட்டம் பெற்ற இளைஞர்களை நேரடித் தேர்வுகளின் மூலம் தேர்வு செய்வது. இரண்டாவது வகை காவல் துறையில் பணியாற்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளையுடைய தலைமைக் காவலர்களை, நிர்ணயிக்கப்படும் தேர்வுகளில் ஈடுபடுத்தி, அந்த தேர்வுகளில் அவர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்தல். நேரடி நியமனத்திற்கும் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படுவதற்கும் உள்ள விகிதாசாரம் 60:40 ஆகும். தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பின் காரணமாக, கடந்த காலங்களில் 1000க்கும் அதிகமான உதவி ஆய்வாளர்கள் பதவி உயர்வின் மூலமாக நிரப்பப்பட்டார்கள். இந்த நிரப்புதலைத் தொடர்ந்து இன்னும் 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு எவருக்கும் பதவி உயர்வு கிடைக்காது என்ற நிலை அறியப்பட்டது. எனவே பதவி உயர்வின் பலன் தற்போது காவல் துறையில் பணியாற்றும் தலைமைக் காவலர்களுக்குத் தடைபடாது கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நடைமுறையில் இருக்கும் விதிமுறைகளைத் தளர்த்தி (one-time exemption), மாநிலத்தில் 600 தலைமைக் காவலர்கள் உதவி ஆய்வாளர் ஆக அரசு வழிவகுத்தது. மாநிலம் மொத்தத்திற்கும் வழங்கப்பட்ட 600 பதவிகளில் 60 பதவிகள் சென்னை நகருக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

மேற்கண்ட 60 பதவிகளை நிரப்ப, கடந்த ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் எழுத்துத் தேர்வு, டிரில், நேர்காணல் போன்ற தேர்வுகள் நடத்தப்பட்டன. எழுத்துத் தேர்வில் 412 தலைமைக் காவலர்கள் கலந்து கொண்டனர். சென்னை நகரில் தேர்வு எழுதியவர்களின் விடைத் தாள்களும் மற்ற மாவட்டங்களில் தேர்வு எழுதியவர்களின் விடைத் தாள்களும் காவல் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டு, அங்கு டம்மி எண்கள் இடப்பட்டு காவல் பயிற்சி கல்லூரியில் திருத்தப்பட்டது. இதில் விடைத்தாளைத் திருத்தியவருக்கு எந்த தலைமைக் காவலரின் விடைத்தாளைத் திருத்துகிறோம் என்று தெரியாமல் பாதுகாக்கப்பட்டது.

சென்னை நகரில் பங்கேற்ற 412 தலைமைக் காவலர்களில் 175 பேர்கள் எழுத்துத் தேர்வில் மட்டும் தேர்ச்சி பெற்றனர். இந்த 175 பேரில் 173 தலைமைக் காவலர்கள் டிரில் மற்றும் நேர்காணலில் பங்கேற்றனர். மேற்கண்ட 173 நபர்களும் டிரில் மற்றும் நேர்காணலில் பங்கேற்க அழைக்கப்பட்டார்களே தவிர இவர்கள் அனைவரும் பதவி உயர்வு பெற்று விட்டனர் என்று எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.



டிரில் மற்றும் நேர்காணல் தேர்வுகளை மூத்த துணை ஆணையாளரின் தலைமையின் கீழ் மற்ற 7 துணை ஆணையாளர்களைக் கொண்ட குழு நடத்தியது. இந்தத் தேர்வுகளை ஒரு குழு நடத்தியதால் தன் திறமையின் மூலமே மதிப்பெண் பெற முடியும் என்ற நிலை உருவானது. மேலும் வெகுமதி, தண்டனை இல்லாமை மற்றும் ஒருவரின்

முந்தைய அலுவலக செயல்பாடுகள் போன்றவை அன்னாரின் ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டதால் இதில் தவறு நடக்க வாய்ப்பேதும் இல்லாமல் செய்யப்பட்டது.

மேற்கண்ட தேர்வுகளில் பெறப்பட்ட மதிப்பெண்கள் அனைத்தும் கூட்டப்பட்டு, சென்னை நகருக்கு ஒதுக்கப்பட்ட 60 இடங்களுக்கு 60 நபர்கள் அவர்கள் பெற்ற அதிக மதிப்பெண் அடிப்படையில் முதலில் பட்டியல் வெளியிடப்பட்டது. தங்களின் வெளியீட்டில் கூட இந்தப் பட்டியல் நியாயமாகப் பதவி உயர்வு பெற, தகுதியானவர்கள் இடம்பெற்று இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பட்டியல், நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி தயார் செய்யப்படவில்லை என்று காவல்துறை இயக்குநரால் சுட்டிக்காட்டப்பட்டது. மேற்படி அறிவுரையின்படி இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருந்தவர்களே பின்னர் தலைமைக் காவலர் பதவியில் அவர்களின் முதுநிலை அடிப்படை வரிசையில் வெளியிடப்பட்டது. முதல் மற்றும் இரண்டாம் பட்டியல்களில் சம்பந்தப்பட்டவர்களின் வரிசை எண்தான் மாறியதே தவிர, புதிதான நபர் சேர்க்கப்படவோ அல்லது இருந்த நபர் எடுக்கப்படவோ இல்லை என்பதே உண்மை. இரண்டாம் பட்டியலின் நோக்கம் இத்தேர்வு முடிவுகள் மதிப்பெண் அடிப்படையில் அமைந்தாலும் தேர்வு செய்யப்பட்ட பின் அவர்களின் பணி முதுநிலையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே.

இத் தேர்வுகளில் வெற்றி பெற்றோர் அவர்களின் தகுதி காரணமாக இடம்பெற்றார்களே தவிர, அதிகாரிகளிடம் ஓட்டுநர்களாகவும் ஆடர்லிகளாகவும் பணியாற்றியதற்காக அல்ல என தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பான மதிப்பெண் பெற்றவர்கள் யார் வேண்டுமானாலும் இடம்பெறலாம் எனும் பட்சத்தில் ஓட்டுநர் போன்றோர் சிறப்பான மதிப்பெண் பெற இயலாது என்பது நியாயமானது அல்ல. தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆனந்தப்படுவதும் தேர்ச்சி அடையாதவர் தூற்றுவதும் இயல்பே. அந்த வகையில் தேர்ச்சி பெறாத நபர்களின் வெளிப்பாடே தங்களின் வெளியீட்டில் வந்துள்ளது என கருதுகிறேன். அனைவரையும் திருப்திப்படுத்துவது என்பது இயலாத காரியம். எனினும் தேர்வுகள் அனைத்தும் நேர்மையான நியாயமான முறையில் நடந்தேறியது என்பதனை ந ்நெஞ்சம் கொண்டோர் மறுக்க இயலாது.

- வீ.கி. இராசகோபாலன்,
காவல் துறை கூடுதல் இயக்குநர் மற்றும் காவல் ஆணையர், சென்னை மாநகரம்.

“வாலிதான் என்னைக் கவிஞனாக்கினார்!”

- டைரக்டர் அகத்தியன் பேட்டி

பல வருடங்களுக்கு முன் பாரதிராஜா செய்த சாதனையை இப்போது அகத்தியன் மீண்டும் செய்திருக்கிறார். அவருடைய முந்தைய படமான 'காதல் கோட்டை' இன்றும் ஓடிக் கொண்டிருக்க, அடுத்த படம் வெளியாகி அதுவும் நூறு நாட்களை நோக்கி சிரமமில்லாமல் நகர்ந்து கொண்டிருக்கிறது. 'காதல்' என்ற கருவின் மீது 'மகத்தான காதல்' கொண்டுள்ள அகத்தியன், காதல் கோட்டையின் ஹிந்திப் பதிப்புக்காகத் தீவிரமான பணிகளில் இருந்தார். அவர், கல்கிக்கென அளித்த பேட்டியிலிருந்து:

“மிகுந்த எதிர்பார்ப்புகளோடு வந்த 'கோகுலத்தில் சீதை' படத்திற்குக் கிடைத்துள்ள மிதமான வெற்றி உங்களுக்குத் திருப்திகரமாக உள்ளதா?”

'கோகுலத்தில் சீதை', 'காதல் கோட்டை' அளவிற்கு ஓடும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. இன்னும் சொல்லப் போனால் நான் அது 'காதல் கோட்டை' அளவிற்கு ஓடாது என்பதில் உறுதியாக இருந்தேன். 'காதல் கோட்டை' படத்தில் 'வெள்ளரிக்கா பிஞ்சு வெள்ளரிக்கா', 'மொட்டு மலராத மொட்டு' போன்ற கமர்ஷியலான பாடல்களைச் சேர்த்திருந்தேன். ஆனால் அவை எதுவும் 'கோகுலத்தில் சீதை'யில் கிடையாது. நான் எந்த விதமான காம்பரமைஸூம் இதில் செய்து கொள்ளவில்லை. ஏனென்றால் ஒரு மாபெரும் வெற்றிப் படத்திற்குப் பின்தான் ஏதாவது புதுமைகளை முயற்சி செய்து பார்க்க வேண்டும். அதைத்தான் இதில் நான் முயன்றிருக்கிறேன்.

''இந்தப் படத்தில் என்னுடைய கதாநாயகன் 'ரிஷி' ஒரு முழுமையான அயோக்கியனும் இல்லை; நாம் வழக்கமாகப் படங்களில் பார்க்கும் நற்குணங்களின் உறைவிடமான உத்தமக் கதாநாயகனும் இல்லை. இதை நான் தெளிவாகத் திரையில் காட்ட வேண்டியது மிகவும் அவசியம். கொஞ்சம் அசந்தாலும், ரசிகர்கள், குறிப்பாகப் பெண்கள் - 'ரிஷி'யை வில்லனாக ஒதுக்கிவிடக் கூடிய அபாயம் உள்ளது என்பதை நான் உணர்ந்தேன். என்னுடைய ரிஷி எல்லோரையும்போல் பலவீனங்கள் உள்ள சராசரி மனிதன். ஒருவன் தவறு செய்யாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்கள்தாம். ஒன்று, அவனுக்குச் சந்தர்ப்பம் வாய்க்காமல் இருந்திருக்க வேண்டும். அல்லது சந்தர்ப்பம்



கிடைத்தும் அவனுக்குப் போதுமான தைரியம் இல்லாதிருந்திருக்கும். நம்மிடையே இன்று எத்தனை 'ரிஷி'க்கள் இல்லை? 'ரிஷி' தினமும் 'தண்ணி' சாப்பிட்டால், பலர் வாரத்திற்கு இரண்டு நாட்கள் சாப்பிடுகின்றனர். 'ரிஷி'க்குத் தினமும் ஒரு பெண் தேவைப்பட்டால் பலருக்கு பணமும் வாய்ப்பும் சேரும்போது தேவைப்படுகிறது. ஆகவே 'ரிஷி'யின் கதாபாத்திரத்தை சரியான கண்ணோட்டத்தில் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதனாலேயே நான் வேறு வழியின்றி நிறைய வசனங்களைச் சேர்க்க வேண்டியதாகி விட்டது.

''உங்களுடைய 'காதல் கோட்டை'யும் சரி, இப்போதைய 'கோகுலத்தில் சீதை'யும் சரி மிகவும் மெள்ளத்தான் பாக்ஸ் ஆபிஸில் ஏறுகிறது. ஏன்?''

''நான் முன்பே சொன்னதுபோல் என்னுடைய கதைகள் சற்று வித்தியாசமானவை. இந்தக் கட்டத்தில் நான் ஒரு பழைய சம்பவத்தை நினைவு கூர விரும்புகிறேன். நான் உதவி இயக்குநராக இருந்த நாட்களில் ரேஷன் கடைக்கு எதிராக இருந்த கடையில் 'டீ' சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது சர்க்கரை விலையைக் குறைக்கச் சொல்லி ரேஷன் கடையின் முன்னால் ஓர் ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருந்தது. ஆர்ப்பாட்டம் முடிந்தவுடன் அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவன் 'டீ' கடைக்கு வந்து என்னிடம், ''சார், நாங்க இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணியிருக்கோம். நாளைக்கே சர்க்கரை விலை குறைந்து விடுமா?' என்று அப்பாவித்தனமாகக் கேட்டான். அப்போதுதான் அவனை மாதிரி இருப்பவர்களுக்கும் நான் 'சினிமா பண்ண வேண்டும்' என்று மனத்தினுள் நிச்சயித்துக் கொண்டேன். சராசரிக்கும் கீழே உள்ள 'mass audience, என் படத்தைப் பார்த்து, அதிலுள்ள வித்தியாசமான விஷயங்களைக் கிரகித்துக் கொண்டு போய் பின் வெளியில் 'நல்ல படம்' என்று சொல்லச் சொல்ல, பின் மெள்ள மெள்ள கூட்டம் அதிகரிக்கிறது.''

''கோகுலத்தில் சீதை' கதை தமிழ் சினிமாவுக்குப் புதிது இல்லையே?''

''உண்மைதான். ஏற்கெனவே வந்த 'இருவர் உள்ளம்', 'வசந்தமாளிகை' கதையின் கருதான் இதுவும். என்னைப் பொறுத்தவரையில் சினிமா என்பது புதுமையான கதை மட்டும் அன்று. புதுமையே அதைச் சொல்லும் விதத்தில்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். என்னுடைய நாயகன் 'ரிஷி'யும், நாயகி 'நிலா'வும் இதே போன்ற கதையம்சம் கொண்ட கதைகளின் நாயகன், நாயகியைவிட வித்தியாசமானவர்களா இல்லையா, நீங்களே சொல்லுங்கள்''

'''காதல் கோட்டை' க்ளைமாக்ஸில் அஜீத்தை 'டம்மி' ஆக்கினீர்கள். 'கோகுலத்தில் சீதை'யில் சுவலட்சுமியை 'டம்மி' ஆக்கி விட்டீர்கள். இதுவே இனி தொடருமா?''

''நட்சத்திரங்களுக்காகக் காட்சிகளை அமைக்கும் பழக்கம் என்னிடம் இல்லை. கதையின் தன்மையைப் பொறுத்துத்தான் க்ளைமாக்ஸே தவிர... ஆர்டிஸ்டுக்காக அல்ல. 'காதல் கோட்டை'யில் கதாநாயகிக்குத் தன் வீட்டில் திருமணம் பேசுவதால் கதாநாயகனைத் தேட வேண்டிய நிர்ப்பந்தம். கதாநாயகனுக்கு அப்படி எதுவும் இல்லை. கடைசியில் ரெயில்வே ஸ்டேஷனில் திடீரென்று கதாநாயகி, கதாநாயகனை நோக்கி ஓடி வரும்போது அவனால் அந்தக் கட்டத்தில் அதிர்ந்து நிற்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? அவன் அப்போது எதாவது 'ஓவர் ரியாக்ஷன்' காண்பிப்பதுபோல நான் செய்திருந்தால் படமே ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டிருக்கும்.''

''கோகுலத்தில் சீதை'யிலும் சுவலட்சுமி 'டம்மி' இல்லை. தன்மானம் மிகுந்த எந்தப் பெண்ணும் அந்தக் கட்டத்தில் எப்படி நடந்து கொள்வாளோ அப்படியே நிலாவும் நடந்து கொண்டாள். இங்கு பாதிப்புக்கு உள்ளானது ரிஷி. எனவே ரிஷியே காட்சியை ஆக்ரமித்துக் கொள்வது அவசியமாகிறது.''

'' 'காதல் கோட்டை' படத்தின் வெற்றி முழுமையாக உங்களுக்குக் கிடைத்த வெற்றி என்று நினைக்கிறீர்களா அல்லது அஜீத்தும் அந்தப் படத்தின் வெற்றிக்கு மிகப் பெரிய காரணம் என்று நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?''

''சமையல் என்பது ருசிக்க வேண்டுமானால் உப்பு, புளி, காரம் எல்லாம் சரியான அளவிலிருந்தால்தானே முடியும். அதுபோல்தான் ஒரு சினிமாவின் வெற்றிக்கான காரணங்களும்.''

'' 'வான்மதி, 'காதல் கோட்டை' படங்களின் வெற்றியில், கதாநாயகன் அஜீத்தும், சினிமாட்டோகிராஃபர் தங்கர் பச்சானும் அதிகப் பங்கு வகித்தார்கள். உங்கள் 'கோகுலத்தில் சீதை'யில் அவர்களிருவரையுமே தவிர்த்து விட்டீர்கள். மற்றவர்கள் தயவில்லாமல் என்னாலும் தனித்தே ஒரு வெற்றிப் படத்தைக் கொடுக்க முடியும் என்ற முயற்சியா இது?''

''முதலில் சினிமா என்பது ஒரு கூட்டுப் பணி. இதில் 'தயவு' என்ற சொல்லுக்கே இடமில்லை. என் முந்தைய இரண்டு படங்களின் வெற்றிகளில் அஜீத்திற்கும் தங்கர்பச்சானுக்கும் பெரும் பங்குண்டு என்பதை நான் என்றுமே மறுத்ததில்லை. அஜீத்திற்குக் 'காதல் கோட்டை'க்குப் பிறகு நிறைய படங்கள் வரவே, அவர் தேதிகள் கிடைப்பது சிரமமாகிவிட்டது. அதோடு லக்ஷ்மி மூவி மேக்கர்ஸுக்காக நான்

படம் செய்வதென்று முடிவு ஆனவுடன் அவர்கள் தங்களிடம் ஏற்கெனவே கார்த்திக் கின் கால்ஷீட் இருப்பதாகவும் அவருக்காகப் படம் பண்ண வேண்டும் என்றும் சொன்னார்கள். அவ்வளவுதான்.

"அதேபோல்தான் தங்கர் பச்சான் விஷயமும். தங்கர் பச்சான் இந்தி 'காதல் கோட்டை'யை ஒளிப்பதிவு செய்கிறார். "கோகுலத்தில் சீதை'யின் சினிமாட்டோகிராஃபர் சூரியன் பல ஆண்டுகளுக்கு முன்பு நான் இயக்கி, பாதியில் நின்று போன 'அதிகாலை சுபவேளை' படத்தை ஒளிப்பதிவு செய்தவர். இன்று நான் இயக்குநராகி முன்னுக்கு வந்த பிறகு அன்று எனக்கு ஒளிப்பதிவு செய்தவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். அது தவறா?

ஒரே டெக்னீஷியன்கள் தொடர்ந்து பணியாற்றுவதைவிட கொஞ்சம் விலகி மீண்டும் சேருவதுதான் சிறந்தது. இதில் பிரச்னை எதுவும் இல்லை. என் கதாபாத்திரங்களைப் போல் நானும் 'பாஸிடிவ்'வாகவே எதையும் பார்ப்பேன்."


"உங்கள் படங்களில் நீங்களே பாடல் எழுதுகிறீர்கள். நீண்ட நாட்களுக்கு இதை உங்களால் தொடர முடியும் என்று நினைக்கிறீர்களா?"

"கவிதைகள் எழுவதென்பது எனக்குப் புதிதன்று. கல்லூரி நாட்களில் நான் மாநில அளவில் பல பரிசுகளும் வாங்கியிருக்கிறேன். ஆனால் நான் திரைப்படங்களுக்குப் பாடல் எழுதியதற்குக் காரணம் வாலி சார்தான். 'வான்மதி' பாடல் ரிகார்டிங்கின்போது ஒரு பிறந்த நாள் காட்சிக்கான பாடல் வரிகளை வாலி எழுதிக் கொடுத்தார். அதில் 'லைட்டா மேலே டீ ஷர்ட்டும் போட்டா, டைட்டா கீழே கால்ஷர்ட்டும் போட்டா' என்றெழுதினார். நான் இது 'பிறந்த நாள் காட்சி. எனவே என் நாயகி ஆடம்பரமாக உடை அணிந்திருப்பாள்' என்றபோது 'உனக்கு பாடல் எழுதுவது பற்றி என்ன தெரியும்' என்று கூறி எழுந்து சென்றுவிட்டார். தேவா சாரோ, இங்கே காத்துக் கொண்டிருக்கிறார். மிகுந்த கஷ்டத்திற்குப் பிறகு கிடைத்த வாய்ப்பும் கை நழுவி விடுமோ என்ற பயத்தில் கெஞ்சிக் கூத்தாடி வாலியிடம் பாடலை வாங்கி, பின் மிக்ஸிங்கின்போது எனக்கு வேண்டிய வரிகளைப் போட்டு மாற்றி விட்டேன். அதன் பிறகு 'காதல் கோட்டை'யின் தயாரிப்பாளர் கேட்டதற்கிணங்க 'கவலைப்படாதே சகோதரா' பாடலை எழுதி, ஜெய்பூர் சென்று விட்டேன். வாலி சாரரையே மற்ற பாடல்களை எழுதச் சொல்லலாம் என்ற எண்ணத்தில். ஆனால் வாலி சாரோ "நான் ஒரு சீன் டைரக்ட் பண்ணால் அவர் ஒத்துக்குவாரா? அவரே முடிந்தால் எல்லாப் பாடல்களையும் எழுதட்டும்" என்றார். இப்படித்தான் நான் பாடலாசிரியர் ஆனது. ஆனால் தயாரிப்பாளர்களிடம் நான்தான் பாடல்கள் எழுதுவேன் என்று நான் வற்புறுத்துவதில்லை. இப்போது கவிதாலயா நிறுவனத்திற்காக நான் இயக்கும் 'விடுகதை' படத்திற்கு என்னோடு வேறொருவரும் பாடல்கள் எழுதுகிறார். மற்றபடி எடிட்டிங், போட்டோகிராஃபியிலெல்லாம் தலையிடும் எண்ணம் எனக்கு இல்லை. எனக்குத் தெரிந்த டைரக்ஷனை உருப்படியாகச் செய்ய வேண்டும் என்பது தான் என் நோக்கம்."

"கே. பாலசந்தரின் 'விடுகதை' படத்தை இயக்க வாய்ப்பு வந்தது எப்படி? அதுவும் காதல் கதைதானா?"

"ஒரு விஷயம் சொன்னால் நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள். கே.பி. சார் இன்றும் என் 'காதல் கோட்டை'யைப் பார்க்கவே இல்லை. 'காதல் கோட்டை' படத்தின் முதல் பிரதி தயாரான உடனேயே அவர் நான் ஒரு படம் செய்து கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். 'விடுகதை' ஒரு வித்தியாசமான காதல் கதை. இதில் பிரகாஷ்ராஜ் நடுத்தர வயதுள்ளவராகத் தோன்றுகிறார். காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டு காமத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் கதாபாத்திரம். காம வயப்பட்டு காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்பதே இந்தப் படத்தின் கரு. காதலுக்கு வயது தடையில்லை என்பதையே இந்தப் படத்தில் சொல்லப் போகிறேன்."

சந்திப்பு : **கிரிஜா ஜின்னா**



முதுகுவலிக்கு ஒரு காரணம்: காலுக்குக் கால், கால் அங்குலம் வித்தியாசப்பட்டாலே, முதுகுவலி வருகிறதாம். குட்டைக்காலின் காலணியை கால் அங்குலம் உயர்த்தி விட்டதும் அவர்களுக்கு முதுகுவலி அடியோடு தீர்ந்து விட்டது. காலுக்குக் கால் நீளவித்தியாசம் பிறவியிலேயே ஏற்படுவது என்றாலும் 30 அல்லது 35 வயதிற்குப் பிறகு தான் அதனால் முதுகுவலி தோன்றுகிறது.

– பொது அறிவுக் களஞ்சியம் என்ற நூலிலிருந்து: சுந்தர். அழகேசன்

வி.கே.ராமசாமி

8

வாடகை தர முடியாமல் கன்னையா நாயுடுவின் செட்டுகளைத் திருப்பித் தந்து விட வேண்டியதாயிற்று.

வேலூரிலிருந்து புறப்பட்டு சோழிங்கபுரம் சென்றோம். அங்கே ஒரு மாதம். பிறகு செய்யாறு.

செய்யாறில், கந்தசாமி முதலியார் என்கிற ஜவுளிக்கடை முதலாளி ஒருவர் எங்களை ஆதரிக்க முன் வந்தார். அவர் பெரிய கலா ரசிகர். கலைஞர்கள் யாராவது அந்த ஊருக்கு வந்துவிட்டால் போதும். அவருக்குக் குஷி பிறந்து விடும். நாளெல்லாம் அவர்கள் கூடவே இருப்பார். சாப்பாடு, தங்கும் இடம் பிற வசதிகள் அனைத்தையும் அவரே செய்து தருவார். அந்த நல்ல மனிதரின் உதவியால் செய்யாறில் நாங்கள் சாப்பாட்டுப் பிரச்னை இல்லாமல் நாடகங்கள் போட முடிந்தது. அது மட்டுமல்ல; எங்கள் குழுவினருக்கு அவர் தம் ஜவுளிக் கடையிலிருந்து அன்பளிப்பாக வழங்கிய ஆடைகள் கணக்கிலடங்காதவை! அவற்றை வைத்தே ஒரு கடைபோட்டு விடலாம் என்று நாங்கள் பேசிக் கொண்டோம்.

அந்த கந்தசாமி முதலியார்தான் ஒரு யோசனையை முன் வைத்தார்: "உங்கள் நாடகங்கள் சிறப்பாகத்தான் இருக்கின்றன. ஆனால் மக்கள் கூட்டம் நிரம்பி வழிய வேண்டுமென்றால் ஒரு ஸ்டார் வேல்யூ வேண்டும். நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள்.



பேசாமல் அண்ணாவை உங்கள் நாடகத்துக்குத் தலைமை தாங்கக் கூப்பிட்டுப் பாருங்களேன்!"

அப்போது திராவிடர் கழகத்துக்கு மக்களிடம் அமோக மதிப்பும் வரவேற்பும் ஏற்படத் தொடங்கியிருந்தது. பெரியார், அண்ணா இவர்களின் பேச்சுக்கள் என்றால் பல மைல்கள் நடந்து வந்து கேட்டுப் போவார்கள்.

கந்தசாமி முதலியாரின் கருத்து டி.கே. ஆருக்குப் பிடித்திருந்தது. "அண்ணாவைச் சந்திக்க நீங்கள்தான் உதவ வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அவரும் ஒப்புக் கொள்ள, மறு நாளே முதலியாருடன் டி.கே.ஆர். கிளம்ப, நானும் உடன் சென்றேன்.

அண்ணாவைப் பார்த்து விஷயத்தைச் சொன்னோம். இளம் கலைஞர்களை ஊக்கப்படுத்துவதில் அவருக்கிருந்த ஆர்வம் கொஞ்சநஞ்சமல்ல. துளியும் யோசிக்காமல் உடனே செய்யாறு வர ஒப்புக் கொண்டார்.

நாங்கள் மகிழ்ச்சியுடன் ஊர் திரும்பி, எங்களது 'ஸ்பெஷல்' நாடகமான விமலா அல்லது விதவையின் கண்ணீரையே போடுவது என்று முடிவு செய்தோம்.

அதற்கு வேறொரு முக்கியமான காரணமும் உண்டு. அந்த நாடகம், அந்தக் காலத்திலேயே பல புரட்சிகரமான கருத்துக்களைத் துணிந்து முன் வைத்த ஒன்று. பொதுவுடைமைக் கருத்துக்கள், மூட நம்பிக்கை ஒழிப்பு, முதலாளித்துவ மனப்பான்மையைச் சாடுவது என்று இப்படியான பல தீவிர சங்கதிகள் அந்த நாடகத்தில் உண்டு. அண்ணா வரும்போது அந்த நாடகத்தைப் போட்டால் அவர் வாயால் பாராட்டுப் பெற சுலப வழியாக அமையுமே என்பது தான் முக்கியமான நோக்கம்.

'விமலா' நாடகத்தில் எனக்கு முருகன் என்கிற வேலைக்காரன் பாத்திரம். தமாஷாக வசனங்கள் பேசி, சிரிக்க வைப்பது என் வேலை.

ஆனால் அண்ணா அவர்கள் வந்தபோது நான் ஒரு முடிவு செய்து கொண்டேன். ரெடிமேட் வசனங்கள் தவிர டைமிங் வசனங்களை நானே புகுத்தி, அனைவரையும் திகைக்க வைப்பது என்பதே அது.

என் காட்சி வந்தது. நாடகத்தில் என் முதலாளியாக நடித்தவர், "முருகா! நீ சரியில்லை, வீட்டுல ஒரு வேலையையும் ஒழுங்கா செய்யலை! இதுக்கு என்ன அர்த்தம்?" என்று

வசனம் பேச, நான் உடனே, "ஆமா. நீங்க மட்டும் ஒழுங்கா சம்பளம் தர்றீங்களா?"

அவர் இந்த ஸ்கிரிப்டில் இல்லாத வசனத்தைக் கேட்டு ஆடிப்போய் விட்டார். நான் விடாமல், "வேலைக்காரன்னா இளப்பமா? கருவேப்பிலை மாதிரி ஒதுக்கிவெக்கற சோலியெல்லாம் இனிமே எடுபடாது! முதல்ல மனுஷனா மதிக்கக் கத்துக்கங்க!" என்றெல்லாம் வீரமாகப் பேசி நிறுத்தினேன்.

"அடேய், நீ ரொம்பப் பேசறே. யாருடா உனக்கு இதெல்லாம் கத்துக்குடுத்தது?" என்றார்.

"முச்சந்திக் கூட்டங்களுக்குப் போனா தெரியும். பெரியார், அண்ணா பேச்செல்லாம் கேட்டுப்பாருங்க!" என்று நான் பதில் சொல்ல, சபை கிளர்ந்து எழுந்தது! பலமான கைதட்டல்! தலைக்குத்தலை என்னைப் பாராட்ட, எனக்கு உற்சாகம் பொங்கி, மேலும் வீரமாகப் பேசிக் கொண்டே போனேன்.

அன்றைய தினத்தை என்னால் மறக்கவே முடியாது. நாடகத்தைப் பாராட்ட வந்த அண்ணா, சுமார் முக்கால் மணி நேரம் என் நடிப்பை மட்டுமே பாராட்டிக் கொண்டிருந்தார்.

"இந்தப் பையனின் 'டைமிங்' நகைச்சுவை எனக்கு வியப்பாக இருக்கிறது. எல்லோராலும் எளிதில் செய்யக் கூடியதல்ல இது. உலகமே 'டைமிங்'கில்தான் இருக்கு..." எனப் பலவாறாக அவர் பேசிப் போக, என் விழிகள் நிறைந்துவிட்டன.

ஒரு கலைஞனுக்கு, உளமார்ந்த பாராட்டு எத்தகைய பலம் தரக் கூடியது என்பது அன்றைய தினம் எனக்குப் புரிந்தது.

வெகு நாட்கள் கழித்து, 'காவல்காரன்' படத்தில் நடித்ததற்காகக் கலைஞர்களுக்கு மோதிரம் போட்டார்கள். அந்த விழா மேடையில் அண்ணாவை நான் மீண்டும் சந்தித்த போது, "உன்னை முன்பே எங்கோ பார்த்திருக்கிறனே?" என்று ஞாபகங்களில் தேடினார். நான் செய்யாறு நாடக தினத்தை நினைவுபடுத்த, கட்டிப் பிடித்துப் பாராட்டியதை மறக்கவே முடியாது!

செய்யாறிலிருந்து மூட்டை கட்டிக் கொண்டு சேத்துப்பட்டு, போளூர் என்று ஊர் ஊராகச் சுற்றி, சென்னைக்கு அருகே குன்றத்தூருக்கு வந்து சேர்ந்தோம். இடைப்பட்ட காலத்தில் பசியும் பட்டினியும் தான் நாங்கள் அதிகம் சந்தித்தவையாக இருந்தன. ஆனாலும் திடீர் திடீரென்று யாராவது ஒருவர் எங்களுக்கு உதவுவதற்கென்றே பிறந்தாற்போல ஆங்காங்கே உதித்து ஆச்சர்யப்படும்விதமாக உதவிவிட்டுப் போய்விடுவார்கள்.



அப்படித்தான் சேத்துப்பட்டில் ஒரு நாள் விடிய விடிய நாடகம் போட்டுவிட்டு அதிகாலை ஐந்து மணிக்கு நல்ல பசியுடன் ஊரைச் சுற்றி வந்து கொண்டிருந்தேன். கையில் நயாபைசா கிடையாது. எங்கள் நாடகம் பார்க்க வந்திருந்த ஒரு ஓட்டல்காரர் தற்செயலாக என்னைப் பார்த்து, "அடடே, என்னங்க இந்த நேரத்துல ஊரை சுத்தி வரீங்க?" என்று கேட்டார். நான் தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொல்ல, துடித்துப் போய் விட்டார்.

"நாடகத்துக்கு வசூல் ஆவலீங்களா?"

"ஆச்சு ஆச்சு, ஆளவரைக்கும் இடவாடகை, கரெண்ட்டு, மேக்-அப் சாமான் இதுக்கெல்லாமே சரியாப் போச்சு!" என்றேன்.

"உள்ள வாங்க. சாப்பிட்டுப் போகலாம்" என்றவரை மறுத்தேன். "நான் மட்டும் சாப்பிட விரும்பலை. எங்க ட்ரூப்புல முப்பது பேரும் பசியோட இருக்காங்க" என்றது தான் தாமதம். உடனே முப்பது டிபன் பொட்டலங்கள் கட்டச் சொல்லி, ஓர் ஆளை விட்டுக் கொடுத்தனுப்பினார்.

பாவாடை என்கிற

தேரோட்டம்



அந்த நல்ல மனிதர். அன்று பிற்பகல் உணவும் அவர் ஓட்டலில் இருந்தேதான் வந்தது.

இது ஓர் உதாரணம்தான். அநேகமாக ஒவ்வொரு ஊரிலும் இப்படி யாராவது முன்பின் தெரியாதவர்கள் தான் எங்களுக்கு உதவி வந்தார்கள்.

குன்றத்தூருக்கு நாங்கள் நாடகம் போட வந்தபோது மேக்-அப் சாமான்கள் பல வாங்க வேண்டி இருந்தது. கைவசம் ஸ்டாக் தீர்ந்து விட்டதுதான் காரணம்.

டி.கே.ஆர். என்னிடம் பணம் கொடுத்து, சென்னைக்குப் போய், சைனாபஜாரில் வாங்கிவரச் சொல்லி அனுப்பினார். நான், ஒரு நண்பருடன் கிளம்பினேன். பஸ்ஸிலோ வேறு வண்டியிலோ போகிற அளவுக்கு வசதியில்லை.

குன்றத்தூரிலிருந்து நடந்தே சைனாபஜார் போனோம்.

அப்போது தான் சென்னையில், எங்களின் பழைய நாடகக் குழு 'மதுரை பாலகானசபா' கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்ததைக் கண்டோம்.

அமர்க்களமான விளம்பரங்களும் கற்பனைக்கெட்டாத செட், சீன் வசதிகளும் நல்ல நிதி நிலைமையும் வளமையான புகழுமாக எங்களின் பழைய நாடகக் கம்பெனி, அப்போது என்.எஸ்.கே. அவர்களின் தலைமையில் 'என்.எஸ்.கே. நாடக சபா' என்றே பெயர் மாறி, புத்துருவம் பெற்றிருந்தது.

தன்னால் தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால், கம்பெனியை என்.எஸ்.கே. அவர்களின் பொறுப்பில் விட்டு, அவ்வப்போது கருத்தளவில் உதவி புரிந்து வந்தார் பொன்னுசாமிப் பிள்ளை.

ஆவல் உந்த, நானும் என் நண்பனும் வால்டாக்ஸ் ரோடில் என்.எஸ்.கே.நாடகசபா இயங்கி வந்த இடத்துக்குள் நுழைந்தோம்.

அன்று கிருஷ்ணலீலா நாடகம். நாங்கள் மட்டுமல்ல; எத்தனையோ குழுவினர் அடிக்கடி நடிக்கிற நாடகம்தான் அது. ஆனால் என்.எஸ்.கே. அவர்களின் கைவண்ணத்தில் அந்த நாடகத்துக்கே ஒரு புது உருவம் கிடைத்திருப்பது போல எனக்குத் தோன்றியது. பணத்தைக் கொட்டி, பிரும்மாண்டம் காட்டியிருந்தார்கள். பாம்பின் கால் பாம்பறியுமல்லவா? எங்களால் சாதிக்க முடியாததை என்.எஸ்.கே. எப்படி சாதித்திருக்கிறார் என்று எண்ணி வியந்தேன்.

மனம் ஒரு நிலையில் இல்லை. தாய்க் குழுவை விட்டுப் பிரிந்து வந்தது எத்தனை பெரிய தவறு என்று எண்ணி எண்ணி வெதும்பினேன். ஆனால் மறுபடி அதிலேயே போய்ச்சேர மனம் இடம் தரவில்லை.

பெருமூச்சுடன் குன்றத்தூர் திரும்பினேன்.

குன்றத்தூரில் நாடகம் முடித்து விட்டு, போரூர் சென்று, அங்கிருந்து பனப்பாக்கம் என்ற ஊருக்குப் போனோம்.

கிட்டதட்ட ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. நான் மூன்றாவது முறையாக வீட்டை விட்டு ஓடி வந்து, நாடகக் குழுவில் சேர்ந்து.

அவ்வப்போது வீட்டு ஞாபகம் வரும் என்றாலும் 'நாலுபேர் மதிக்கும்படியான நல்ல நிலைக்கு உயராமல் வீடு திரும்புவதில்லை' என்கிற வைராக்கியத்தில் இருந்தேன்.

வெகு விரைவில் என்னை அரவணைக்கவிருந்த சினிமாத்துறை அப்போது எனக்கு மிக அருகில் காத்துக் கொண்டிருந்ததை நான் அறியவில்லை. அது பற்றி யோசிக்கக் கூடத் தொடங்கியிருக்கவில்லை.



எங்கே மறுபடி ஊருக்குப் போய்விட வேண்டி வருமோ என்று பயந்து கொண்டிருந்தேன். காரணம்–

பனப்பாக்கத்துக்கு, என்னைப் பார்க்க என் அப்பா வந்திருந்தது தான்!

–தொடரும்

மீண்டும் மத்யமர் கதைகள் 8

கொள்ளை

உலகத்தோடு கோபித்துக் கொண்டு விட்டதுபோல தன்னந்தனியாக நரிக நில மத்தியில் ஒரே ஒரு தைரிய முன்னோடியாக நின்றது அந்த வீடு எனும் கான்க்ரீட் பெட்டி. யாரோ ஒரு சாமர்த்தியசாலி மஞ்சள் கற்கள் பதித்து. மைசூர்பாகு போல் ப்ளாட் கீறி விற்றுவிட்டுப் போய் விட்டான். ரயில் பாதைக்கும் நெடுஞ் சாலைக்கும் இடையே அபத்திரமான 'நேரு நகர்'.

இரவில் மின்சார ரயிலில் போகும்போது. இந்த வீட்டின் ஹாலில் உள்ள டெலிவிஷன் கண் ஒளிர்வதைப் பார்க்கலாம். பகலில் ஒரு கணவன் மனைவியின் துவைத்த துணிகள் காற்றில் ஆடுவதைப் பார்க்கலாம்.

ஜெயராமனும் சுசிலாவும் அங்கு குடிபுகுந்த போது அத்துவானமாக இருந்தது. இப்பவும் விஸ்தாரம் இல்லை. அடுத்த வீடு அரை கி.மீ. போன் பேச ரயில் நிலையத்தைச் சுற்றிப் படர்ந்துள்ள மார்க்கெட்டில் உள்ள இரும்பு 'ஜாமான்' கடைக்குப் போக வேண்டும். இருமல் மருந்து கூட நாலு கிலோ மீட்டர்.

ஜெயராமன் தினம் தினம் ஏறக்குறைய குழந்தை சைக்கிள் போல இருக்கும் மோப்பெடு வண்டியில் ரயில் நிலையத்துக்குச் சென்று, 7:40 பாசஞ்சர் பிடித்து, மாம்பலத்தில் இறங்கி 11-ம் நம்பர் பிடித்து, அண்ணாசாலை காங்கிரஸ் கட்டடத்தருகில் இறங்கி, பைத்தியம் பிடித்த வாகனங்களின் ஊடே நடந்து பார்சன் காம்ப்ளெக்ஸ் வந்து, அதன் முதல் மாடியில் ஒரு கூரியர் கம்பெனியில் அசிஸ்டெண்ட் மானேஜராக உட்கார்கிறான்.

முதலாளி முஸ்லிம். 'காட்டாங்குளத்தூரில் கிளை ஆரம்பித்து, அதில் உன்னை மானேஜராகப் போடுகிறேன்' என்று சத்தியம் பண்ணிக் கொடுத்திருப்பதால், நாட்களை எண்ணிக் கொண்டு தினம் தினம் இந்த சிந்துபாத் பயணம்.

மனைவி சுசிலா அவன் புறப்பட்டதும் ஒரு செட்டு பாத்திரம் தேய்த்துக் கொள்வாள், டீவியில் 'விழுதுகள்' பார்த்துக் கொண்டே வீட்டைப் பெருக்கித் துடைத்து, துணி துவைத்து வெயிலில் உலர்த்துவாள்.

இதைப் பற்றித்தான் அடிக்கடி வாக்குவாதம் : ''எந்தப் பக்கத்





தில் உலர்த்தி னாலும் தினம் ஆயிரம் ஜனங்கள் என் உள்பாவாடையையும் உங்க பட்டா - பட்டி அண்டர்வேரையும் தரிசனம் பண்ணியாறது. என்ன மாதிரி வீட்டைக் கட்டிருக்கீங்க?"

"ஒரு வருஷம் கழிச்சுப் பாரு. ப்ளாட் வாங்கினவா எல்லாரும் வரப் போறா!"

"போன வருஷமும் இதையேதான் சொன்னீங்க."

"இங்க ஒரு கார் பாக்டரி வரப் போறதா பேச்சு. அப்புறம் லேண்ட் வால்யு எகிறிப் போய்டும்."

''ஒரு வருஷத்துக்குள்ள எனக்கு எகிறாம இருந்தா சரி. என்ன ஒரு அத்துவானம், தனிமை. எனக்குச் சில வேளையில 'சுயமரியாதை'யில வர்றவ மாதிரி முடியைப் பிச்சுக்கலாமான்னு தோண்றது.

"கொஞ்சம் சமாளிச்சுக்கோ. பாரு சுசி, இது நம்ம வீடு. இப்ப வித்தா விலை போகாது. ஏரியா டெவலப் ஆற வரைக்குமாவது காத்திருக்கணும்."

"பேசாம வாடகைக்கு விட்டுட்டு, பழைய மாம்பலத்தில் எங்க சித்தி பொண்ணு பாத்துக் கொடுக்கறேன்னிருக்கா..."

"கொஞ்சம் பொறுமையா இரும்மா."

"சேப்ட்டி வேற குறைச்சல். ஒரு நாயையாவது கொண்டு வாங்கோ. அதுக்கு பேன் பார்த்துண்டு பொழுது போகும்."

"கேலி பண்றயா?" என்று அவளை முறைத்தான்.

"இல்லை. நிஜமாவே சீரியசாவே சொல்றேன்" என்று சிரித்தாள் சுசீலா.

"இல்லை, கேலி பண்றே!"

''புருஷனை மனைவி கேலி பண்ணுவாளோ! மனுதர்மம் என்ன சொல்லியிருக்கு?"

சுசீலா வசீகரமான பெண். எப்போதுமே

சுஜாதா

இது சரியா?

குர்ஆனின் குரல் ஜனவரி '97 இதழில் வந்த கேள்வி-பதிலில் –

எங்களூரில் கட்டும் பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளுக்காக மாற்று மதத்தினர்கள் பணமாகவும் சிமிண்ட் மூட்டைகளாகவும் தருகின்றனர். இவர்கள் கொடுக்கும் பணத்தையும், சிமிண்ட்டையும் பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளுக்காகப் பயன்படுத்தலாமா?

திருச்சி 17, ஆர். அப்துல் கஃபார்

மாற்றார்கள் பணத்தையும், சிமிண்ட்டையும் பெற்று பள்ளிவாசலில் கக்கூஸ் கட்டுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

– மதவெறிக்கு தினமொரு உயிர் பலியாகிற இந்நாளில் துவேஷங்களை வளர்க்கும் இது போன்ற கருத்துக்களைப் பரப்புவது சரியா?

– அண்ணா அன்பழகன்.

கொஞ்சம் வேடிக்கையாகப் பேசுவாள். பஸ்ஸில் ஆண்களை 'ஏம்பா இத்தனை இடம் இருக்கே... இடிச்சுண்டே நிக்கறியே, உங்களுக்கெல்லாம் கூடப் பொறந்த அக்கா, தங்கை இல்லையா?' போன்ற கேள்விகளையெல்லாம் கேட்டுத் திகைக்க வைப்பாள்.

ஜெயராமன் குன்றிப் போய், 'சுசி சும்மாரு. அவங்கள்ளாம் ரௌடிப் பசங்க. எங்கயாவது கழுத்திலே கைலே இருக்கறதை உருவிடுவான்.'

'உருவிப்புடுவானோ பார்க்கலாமே. போலீஸ் எதுக்கு இருக்கு?' என்பாள்.

மூன்று வருடக் கல்யாணம் அவள் பொலிவைப் போக்கவில்லை. கல்யாண ஆல்பத்தில் போலவே இப்பவும் இருக்கிறாள். வசதியுள்ள குடும்பத்தில் பிறந்திருந்தால் அமெரிக்க மாப்பிள்ளை கிடைத்து, இன்னேரம் கலிபோர்னியாவில் கார் ஓட்டி அங்கே யாரையாவது அதட்டிக் கொண்டிருப்பாள். நான்கு பெண்கள் உள்ள ஒரு ஆசிரியர் குடும்பம். ஜெயராமன் சம்பளத்தை அவர்கள் மிகைப்படுத்தி 'பெரிய ப்ரைவேட் கம்பெனியில மானேஜரா இருக்கார். எட்டாயிரம் ரூபாய் சம்பளம்' என்றெல்லாம் புளுகித்தான் கல்யாணம் நடந்திருக்கிறது.

இதெல்லாம் சுசீலாவுக்கு பொருட்டில்லை. கணவனைப் பேணுவதில் சந்தோஷி. காலையில் இரண்டு ரவா இட்லி வைத்து, டிபன் பாக்ஸின் தலையில் கைதுடைக்க துணியும் காய்ச்சின தண்ணீரும் கூடையில் வைப்பதில் அலாதி ஆனந்தி. வீட்டு வாசலுக்கு அழகழகாகக் கோலம் போடுவாள். விதம்விதமாக பூவேலை செய்து தலையணை உறை மாற்றுவாள். பொழுதைத் தள்ள வேண்டுமே!

வீடுதான் சரிப்படவில்லை. எப்பவோ இரு நூறு ரூபாய்க்கு என்று ப்ளாட் வாங்கிப் போட்டு, லோன் எடுத்து, செங்கல் செங்கலாகக் கட்டின வீடு. அதன் மேல் ஜெயராமனுக்கு ப்ரேமை!

"என்ன ஒரு காத்தோட்டம்! கார்த்தால எழுந்தா பட்சிகள் கேக்கலை?"

"எனக்கென்னவோ லாரிகள்தான் கேக்கறது."

"இன்னும் ஒரு வருஷம் கழிச்சுப் பாரு, இந்த தெரு நகர்ங்கறது மாம்பலம் ரங்கநாதன் தெரு மாதிரி டெவலப் ஆய்டும்" என்றான்.

அந்தப் பொன்னாள் வரத்தான் இருவருக்குமே ஏக்கம்.

நிற்க.

ஊருக்கு வெளியே இருக்கும் தனியான வீடுகளில் திருடவென்றே ஒரு 'ஸ்பெஷலிஸ்ட்' கொள்ளைக் கூட்டம் உண்டு. இதுவரை முப்பத்து நாலு கொள்ளைகளை நிறைவேற்றியவர்கள். அதன் தலைவன் பெயர் அனந்தா. அவனுக்கு சகா பீட்டர், பக்கிரி, முஸ்தாக் என்று எல்லா மதத்துக்கும் உதாரண புருஷர்கள்.

குறிக்கோள் இந்த மாதிரி தனியான வீடுகள்தான். முதலில் பழைய பேப்பர்காரன் போல வந்து விசாரிப்பார்கள். ஒருநாள் தேர்ந்தெடுப்பார்கள். வீட்டில் உள்ளவர்களை முடிந்தால் அறையில் அடைத்து விட்டு தலையணைக்கு அடியில், சாமி படத்தருகில், அரிசிப் பானைக்குள் சாவி இருக்கிறதா என்று துழாவிப் பார்த்துவிட்டு, சாவி கிடைத்தால் சரி, இல்லை ஒரு ஜமக்காளத்தை விரித்து, இரும்பு அலமாரியைக் குப்புறப்படுக்கப் போட்டு (பின் பக்கத்தில் எப்பவுமே தகடு பத்தலா இருக்கும்) நெம்புவான். திறக்காத அலமாரிகள் இல்லை. நகைகளை மட்டும் எடுத்துக் கொள்வார்கள். ரூபாய் இருந்தால் ரூபாய். டீவி, பிரிட்ஜ், வி.சி.ஆர். எல்லாம் தொட மாட்டார்கள். வீடு காலியாக இருந்தால் குளித்து விட்டுப் போவார்கள். டீ போட்டுக் கொள்வார்கள். அவசரப்படாமல் திருடுவார்கள். பல்லுக்கு நடுவில் பழைய எம்.ஜி.ஆர். பாடல்களை விசிலடித்துக் கொண்டு. பெரிய சாமான்கள் எடுத்துப் போக தொந்தரவு. டெம்போ வேண்டும். நகை, நோட்டு வெள்ளிப் பாத்திரம் என்றால் ஒரு சைக்கிள் போதும். அல்லது நெடுஞ்சாலை வரை நடந்து போய் லாரி ஏறி அடுத்த அச்சரப்பாக்கமோ, மறைமலை நகரோ சென்று அங்

“பரிசை மாமியாருக்குத் தரப் போகிறேன்!”

பன்னிரண்டாயிரம்; அதுவும் நகை! இத்தனை பெரிய அதிர்ஷ்டம் தம் வீட்டுக் கதவைத் தட்டி, ''உள்ளே வரலாமா'' என்று கேட்டதும், திருமதி ராஜீவி நரசிம்மன் ஏகமாக சந்தோஷித்தார். கணவர் மகாராஷ்டிராவின் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல்.

இந்தப் பரிசை இவர் என்ன செய்யப் போகிறார் தெரியுமா? சாதாரணமாக எல்லோரும் தமக்கென்றோ, அல்லது மகளுக்கோ, தாய்க்கோ, மிஞ்சிப் போனால் மருமகளுக்கோ தானே கொடுப்பார்கள்? ஆனால் இவர், மாமியாருக்குக் கொடுக்கப் போகிறாராம்!

''என் மாமனார் - மாமியாருக்கு வருகின்ற ஜூலையில் சதாபிஷேகம் நடக்க இருக்கிறது. என் மீது தாயைப் போல் அன்பு செலுத்தும் மாமியாருக்கே இந்தப் பரிசை அன்புக் காணிக்கையாக்க விரும்புகிறேன். கூப்பன் முறையில் பரிசு வழங்கப்பட்டால், சிறு தொகையை திருப்பதி சுவாமிக்குக் காணிக்கையாக்கி விட்டு, மீதத்தில் மாமியாருக்கு வளையல்கள் வாங்க விருப்பம்; இறையருளால் எண்ணம் ஈடேற வேண்டும்!'' என்கிறார் உணர்ச்சிப்பெருக்குடன்.

முன்னொரு காலத்தில் மதுரை காலேஜில் லெக்சரராக இருந்த ராஜீவியின் எம்.ஏ. சைக்காலஜி படிப்பு, போட்டியில் வெற்றி பெற உதவியிருக்கிறது. ''ஒரு பெண்ணின் மனதை இவ்வளவு தத்ரூபமாக படம்பிடித்துக் காட்ட ஒரு பெண்ணால் தான் முடியும் என்பதை நானும் என் மாமியாரும் ஊகித்து விட்டோம். கதையுடன் அப்படியே ஒன்றி விட்டோம். அனுராதா ரமணனை என் மாமியார் கரைத்துக் குடித்திருக்கிறார். சிவசங்கரி, வாஸந்தி போன்றோரின் எழுத்துக்களும் எங்களுக்கு நிரம்பப் பரிச்சயமானவை; இவர்கள் யாருடைய நடையையும் ஒத்துவராத புதுமையான நடைதான் சீதாரவியை அடையாளம் காட்டியது'' என்கிறார்.



• ராஜீவி நரசிம்மன்

மும்பையிலிருந்து :
ஜெயஸ்ரீ ராஜ்

இருந்து ஆவியாகி விடலாம். அடுத்த கொள்ளை வரை.

“ரெண்டு பேர் போதும் குரு. பகல்லயே முட்கரலாமா? சின்ன வூடுதான்.”

“முஸ்தாக் எப்பனாச்சியும் பகல்ல திருடியிருக்கானா, புச்சா சொல்றியே?”

“ராத்திரிலன்னா அவுங்க தனி ரூம்ல தூங்கிட்டுருப்பாங்கடா. அப்படியே கதவு சாத்திரலாம். சத்தம் போட மாட்டாங்க. ரத்த சேதம் வேண்டாம்.”

“சரி சரி வூடு எப்படி?”

''சரியா...ன முளுக்கோளிம்மா. புருசம் பெஞ்சாதி இரண்டு பேர்தான்.”

''தினம் மொபெட் குதிச்சுக் குதிச்சு போறான். போன் எதும் கெடையாது. வேலைக்காரங்க கெடையாது. ராத்திரி பூரா துணி தொங்குது. பத்தரை மணிக்கு வெளக்கு அணைச்சுர்றாங்க. என்ன இன்னி ராத்ரி முட்ச்கரலாமா?''

“ஆளு எப்படி இருக்குறான்?''

“பாத்தேன். வத்தக் குச்சி மாதிரி இருக்குறான்.”

''நாய்?''

“பூச்சி நாய் ஒன்னு கத்துது. எதும் ப்ராப்ளம் இல்லை. ஒரு லேக்கா உருண்டை போதும்.”

“பொண்ணு?”

“சிவப்பா இருக்குது.”

“சிவப்பா, அழகாவா?”

''இதான வாணாங்கறது. திருட்டையும் மத்த சமாசாரத்தையும் ஜாயின் பண்ணாதேன்னு குருநாதர் சொல்லிருக்காரு. அதுக்கி தெண்டனை தனியா குடுப்பாங்க.”

“ராத்திரி டீக்கடையாண்டை வா.”

“இன்னிக்கு பேப்பர் போடறீங்களான்னு ஒருத்தன் வந்து விசாரிச்சுட்டு போனான். ரொம்ப நாளைக்கப்புறம் ஒரு வேத்து மனுசன். ஆனா அவனைப் பாத்தா பேப்பர்காரனா தோணலை. எதுக்கும் ஞாயிற்றுகிழமை வான்னு சொன்னேன்.”

“நான் இல்லாத போது யாராவது வந்தா, கதவைத் திறக்கவே திறக்காதே சுசி.”

இங்க யாரும் வரதே இல்லை. கடவுளே மறந்து போன இடம் இது.”

''சும்மா சும்மா அதையே சொல்லிண்டு

இருக்காதே. ஒரு வருஷத்தில இம்ப்ரூவ் ஆய்டும்னு சொன்னா நம்பு. எல்லா காலனியும் இப்படித்தான் ஆரம்பிச்சது. வெள்ளைக் காரன் காலத்தில சிந்தாதிரிப்பேட்டையில நரி ஓடுமாம்."

"நரி இல்லை, எலி ஓடறது."

"போலீஸ் அவுட்போஸ்ட் கூட வந்திருக்கு."

"அங்கதான் சாராயம் காச்சறாளாம், பத்திரமா."

"எதாவது சொல்லாதே."

அன்று இரவு வழக்கம் போல நியூஸ் பார்த்துவிட்டு விளக்கணைத்துப் படுத்தார்கள். நெடுஞ்சாலை லாரிகள் இரவுப் பயண உறுமல்களைத் தொடங்கியிருந்தன. லாரி சப்தம் பழகிப் போன ஜெயராமன் ஓரிருமுறை சுசீலாவை சீண்ட முயற்சித்து விட்டு ("இன்னிக்கு வேண்டாமே. ரதசப்தமி") படுத்த பத்தாவது நிமிஷம் முழு நித்திரையில் ஆழ்ந்தான். சுசீலாவும் திரும்பிப் படுத்துக் கொண்டு விட்டாள்.

அவர்கள் உறங்கிய பெட்ரும் என்று சொல்லப்பட்ட பத்துக்குப் பன்னிரெண்டு அறையின் ஒரு பகுதியை இடைஞ்சலாக அலமாரி அடைத்துக் கொண்டிருந்தது. அருகே சுவருடன் பதிந்த அலமாரியில் சுவாமி படம், இயற்கை மருந்து புத்தகங்கள், சுருட்டி வைக்கப்பட்ட தையல் கிளாஸ் சான்றிதழ் போன்றவை இருந்தன.

சுசீலாவுக்கு அந்தச் சப்தம் தெளிவாகக் கேட்டது. காலடி சப்தம். வெளியே சரளைக் கற்களில் செருப்பு உரசும் சப்தம்.

மெல்ல தன் கணவனை எழுப்பினாள்.

"என்ன சுசி?"

"ஷ்ஷ், கேக்கறதோ உங்களுக்கு?"

"என்ன?"

மெதுவா பேசுங்கோ. யாரோ வீட்டுக்கு வெளில நடக்கறா."

இப்பொழுது கதவை மெல்ல முயற்சிக்கும் சப்தம் கேட்டது.

"போய்ப் பாருங்கோ."

"இருடி."

"யாரு? யார்றாது" என்று அதட்டலாகக் கேட்டாள்.

ஜெயராமன் மருண்டான். "சும்மாரு. கத்தி கவடா வெச்சிருப்பான்."

"என் பேரு பீட்டர்! கதவைத் திறங்க."

"என்ன வேணும்?"

"குடிக்கத் தண்ணி."

இவர்கள் பேசிக் கொண்டிருக்க, கதவு இன்னும் தீவிரமாக அசைக்கப்படுவது கேட்டது.

"திறக்காதீங்கோ."

"இப்ப கதவைத் திறக்கப் போறியா உடைக்கட்டுமா?"

"போலீசுக்கு போன் பண்ணிருக்கேன் வந்துருவா" என்றான் ஜெயராமன்.

"போனும் இல்லை ஒரு.... ம் இல்லை. தெரியும்."

"கெட்ட வார்த்தை பேசறான்" என்று கணவனை பீதியுடன் பார்த்தாள். "இவன் குரல் கேட்ட மாதிரி இருக்கு."

அருகே இருந்த கிரிக்கெட் மட்டையை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"இது எதுக்கு?"

"உள்ள வந்ததும் மடேல்னு ஒண்ணு போடறதுக்கு. இருங்கோ. உள்ள போய் இரும்பு கரண்டியை எடுத்துக் கொண்டு வருகிறேன்."

"பைத்தியம் மாதிரி ஏதாவது பண்ணாதே. செவிட்டுல அறைஞ்சான்னா நமக்கெல்லாம் தாங்காது. முரட்டுப் பசங்க."

"பாரும்மா, உங்கய்யா பேர் என்ன?"

"ஜெயராமன்."

"பேர் சொல்லாதரி முண்டம்!"

"செயராமா, மண்டையில எதாவது மசாலா இருந்தா திற! தொச்கட்டுன்னு விழுந்தா பத்து மணி நேரம் ஆகும். முழு நெனைப்பு வர. இப்படி அடி வாங்க இஷ்டமா, தொறக்க இஷ்டமா?"

"சுசி நீ போய் அந்த ரூம்ல கதவைச் சாத்திக்கோ, இல்லை கொல்லைப்புறமா ஓடிப் போய்டு. எங்கயாவது எக்குத்தக்கா வீசிடுவான்!"

"எதுக்கு?"

"திறக்கப் போறேன்!"

"திறங்கோ. யாருன்னு பார்க்கலாம்!"

அவர்கள் திறப்பதற்குத் தேவையின்றி கதவு உடைந்து தாழ்ப்பாள் பிய்த்துக்கொண்டு விழுந்தது.

உள்ளே முதலில் நுழைந்தவன் தன்



"முட்டை போடும் உயிரினங்கள் மூன்று கூறு?"

"கோழி, வாத்து, வாத்தியார்."

- நீடா. சி. இளஞ்செழியன்



கனடாவில் ஓர் ஏரியில் தூண்டிலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தார் ஒருவர். மிகப் பெரிய மீன் அகப்பட்டது. தூண்டிலை கஷ்டப்பட்டு வெளியே இழுத்து, மீனைக் கரையில் போட்டார். அதன் அருகிலேயே அவருடைய துப்பாக்கி இருந்தது.

மீன் முற்றும் சாகாததால் இப்படியும் அப்படியும் துள்ள, அதன் வால் துப்பாக்கி விசையைத் தட்டி விட்டது. தோட்டா நேரே அந்த மனிதரின் மீது பாய்ந்து அவரை எமலோகத்துக்கு அனுப்பி விட்டது!

தகவல் : நெல்லை. வி. சிவா

சகாவை அனுமதித்துவிட்டு கதவைச் சாத்தினான்.

"நீ பேப்பர்காரன் இல்லையோ?"

"இல்லை" என்று சிரித்தான் அவன். 'மான் ஹாட்டன்' என்று எழுதியிருந்த பனியன் அணிந்திருந்தான். தலையில் கர்ச்சீப் கட்டியிருந்தான். மொசமொசவென்று ரோமங்கள், கரடி மாதிரி சகல இடங்களிலும். தோள் பட்டையில் கூட ரோமங்கள்.

"அடப்பாவி, பேப்பர்காரன்னு சொல்லி... நாசமாப் போறவனே..."

"ஏய் அவனோட என்னடி பேச்சு! என்னப்பா, என்ன வேணும்? வாட் டூ யூ வாண்ட்?"

பின்னால் வந்தவன் ஆகிருதியாக இருந்தான். பெல்ட்டிலிருந்து அரை கடப்பாரை போன்ற வஸ்துவை எடுத்தான்.

சுசீலா கூக்குரலிட்டாள்.

"கூவாத கண்ணு. எதும் செய்ய மாட்டோம். பீரோ சாவி எடுத்துக் கொடுத்துரு."

"பீரோ சாவி எங்கருக்கு? எடுத்துக் கொடுத்துரு" என்றான், இரண்டாமவன்.

மார்முடியன் கிச்சன் பக்கம் சென்று உருட்டினான். வெளியே வந்தான். "உங்க அம்மா வெள்ளியில எதும் செய்து போடலையா கண்ணு?"

"ஒரே ஒரு தம்ளர்தான் இருக்கு" என்றான் ஜெயராமன்.

"இந்த வீட்டில உங்களுக்குத் திருடறதுக்கு எதுமே இல்லைப்பா."

"அதான வேணாங்கறது. பீரோல என்ன வச்சிருக்கே?"

"ஒண்ணு ரெண்டு டாக்குமெண்ட்ஸ்."

"துணி, புடைவை" என்றாள் சுசீலா.

"தெறந்து காட்டிரேன்."

"எதுக்காகத் திறக்கணும். நாங்க கஷ்டப்பட்டு சம்பாதிச்ச பொருள்கள் இது. உனக்கு எதுக்காகக் கொடுக்கணும்?"

"சுசி சும்மாரு. அவனோட பேச்சே வேண்டாம். எல்லாரும் பாதகங்க."

"நீங்க சும்மாருங்க."

"அசட்டு தைரியமா எதாவது பேசாதே. சாவியைக் கொடுத்துரு."

"கொடுக்க மாட்டேன்" என்றாள்.

"ஏம்மா வொள்ளு பண்ற? அடி வாங்கணுமா?"

"கொடுக்காட்டா என்ன, தெறக்கத் தெரியாதுன்னு நெனைச்சியா? என்ன கொஞ்சம் பத்து நிமிஷம் அதிகமாகும்."

"நீங்க பண்றது அநியாயம். பகவானுக்கே பொறுக்காது."

"இத பார்றா டைலாகு. இந்தாம்மா, ரத்தம் சிந்தாம திருட வந்திருக்கோம். எதுக்கு டென்ஷன் பண்றீங்க எங்களை?"

"சுசி" என்று அவளைக் கடுமையாக அதட்டினான். "இத பாருப்பா... நீங்க என்ன வேணா எதை வேணா எடுத்துக்கங்க. எங்க ரெண்டு பேரையும் சேதப்படுத்தாம!"

"அதான் உத்தமம். பாருங்க ரெண்டு பேரும், அது என்ன ரூம் சமையக்கட்டா. உள்ள போய்க் கதவைச் சாத்திக்கங்க. உள் பக்கத்தால சாத்திக்கங்க. எதையும் கண்டுக்காதீங்க. பதினஞ்சு நிமிஷத்தில வேலையை முடிச்சுட்டோம்."

"தலைவலி மாத்திரை இருக்குதாம்மா, பொளக்குது."

"உன் தலை" என்றாள்.

அவள் அவனை முறைத்தாள்.

"சுசி அவன் கூட ஆர்க்யூ பண்ணாதே. தே ஆர் ரூத்லஸ். எதாவது செஞ்சா உயிருக்கு ஆபத்து வந்துரும். அலமாரிலயே அனாசின் இருக்குப்பா. எடுத்துக்கங்க."

"இந்தாளுதாம்பா கரிஷ்டானவரு. நெல்லவரு. புத்திசாலி!"

அவனை விரோதமாகப் பார்த்தாள்.

"உள்ள போங்கறேன், சும்மா சும்மா முறைச்சுக்கிட்டு" என்று அவள் தலையில் லேசாக தன்னிடம் இருந்த ஸ்க்ரூ ட்ரைவரால் தட்டினான்.

"பாவி" என்று தலையைப் பிடித்துக் கொண்டாள்.

"சொன்னேன் பாத்தியா. முரட்டுப்பசங்க, கொலைபாதகங்க. அவங்களோட போய் பைத்தியம் மாதிரி வாக்குவாதம் பண்ணின்டு.

நீ பண்றதே ரொம்ப ரொம்ப ரிஸ்க்கு. நீ வான்னா."

சமையல் அறைக் கதவைத் திறந்து, அவளுடன் உள்ளே சென்று, கதவை சாத்திக் கொண்டான். சுசி தலையைப் பிடித்துக் கொண்டாள்.

"அசட்டு தைரியத்தில் எதாவது செஞ்சா அடிச்சு நொறுக்கிடுவான். எதை வேணா எடுத்துண்டு போகட்டும் சனியன் நம்ம ரெண்டு பேரையும் உயிரோட விட்டா சரி. பெருமாளை வேண்டிக்கோ."

"பொட்டக் காட்டில கொண்டு வீட்டைக் கட்டினா இப்படித்தான்."

"அலமாரில என்ன இருக்கு?" என்றான் ரகசியமாக.

"என் நகை எதும் இல்லை" என்றாள் இன்னும் மெல்ல.

"எங்க வெச்சிருக்கே?" என்றான் இன்னும் ரகசியமாக. அவன் சகல பாகங்களும் தனித் தனியே நடுங்கின.

"இருக்கறதெல்லாம் பச்சைக் கல் செட் ஒண்ணுதான். அதும் டெம்பிள் ஜெவல்ரி."

"மத்ததெல்லாம்?"

"எல்லாம் அரிசிப் பானைக்குள்ளயும் மொளகா டப்பிக்குள்ளயும். கொஞ்சம் கொஞ்சம் அழுக்குக் கூடைல வெச்சிருக்கேன். இந்த மாதிரி ஏதாவது திருட்டு வரும்னு எனக்குத் தெரியும்."

வெளியே பீரோ கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது.

"ஏன் பிரதர், இவ்வளவுதான் நகைங்களா?" என்று இரைந்து கேட்டான்.

"ஆமாம்பா. மத்ததெல்லாம் லாக்கர்ல வெச்சிருக்கோம்.

"இந்த ஜுஜ்பி நகைங்களுக்காகவா பஸ்ஸைப் பிடிச்சு, ரயில புடிச்சு வந்தோம்... ஒரு லிட்டர் சாராயம் கூட வாங்க முடியாது போலிருக்கு!"

"பாரு பீட்டர், ஐயருங்கல்லாம் சாமர்த்தியக்காரவங்க. இப்பலாம் அலமாரில நகைங்களை வெக்கறதில்லை. அரிசிப் பானை, அழுக்கு கூடை, இப்படித்தான் வெப்பாங்களாம். பத்திரிகைல போட்டிருந்தது!"

அவர்கள் அரிசி டிரம்மை உருட்டும் சப்தம் கேட்டது. சுசீலாவின் முகம் சுருங்கியது. "கண்டுபிடிச்சுருவா. என் கல்யாணத்துக்குப் போட்ட அத்தனை நகையும்... வைரத்தோடு எட்டுக்கல் பேசரி, மூக்குத்தி..."

"போனாப் போறதுரி முண்டம்! புலம்பாம இரு. புதுசா வாங்கி கொடுத்துர்றேன்."

"கிழிச்சேள்" என்று கண்ணீர் விட்டாள்.

"லாக்கர் வாங்குங்கோன்னு அடிச்சுண்டேன்."

"பேசாம இரு: இப்ப நகை முக்கியமில்லை. உயிர்தான் முக்கியம்."

அப்போதுதான் அவன் அதைப் பார்த்தான்.

மிளகாய்ப் பொடி இடிப்பதற்காக உரலும் இரும்பு உலக்கையும் இருந்தது.

மொத்தமாக வலுவாக இருந்தது.

"என்னடி பார்க்கறே?" என்றான் ஜெயராமன் பதற்றத்துடன்.

அவன் 'ஏய்ஏய்' என்று தடுத்ததைப் பொருட்படுத்தாமல் அவள் அந்த உலக்கையை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள்.

"பைத்தியம் சுசி! சுசி பைத்தியம்!"

ஜெயராமன் அந்தக் காட்சியைப் பார்க்க விரும்பவில்லை. அவன் அறைக்கு வெளியே என்ன செய்தான் என்று பார்க்க தைரியமில்லாமல், "போச்சு போச்சு, ரெண்டு பேரையும் வெட்டி சாய்க்கப் போறான்!" என கட்டிலடியில் ஒளிந்து கொண்டான்.

மௌனம்... மிக மிக நீண்ட மௌனம். ஒரு வாரம் போல் இருந்தது.

பாதி திறந்த கதவு வழியே திடும் திடும் என்று சப்தம் கேட்டது. மேசை உருளும் சப்தம் கேட்டது. கண்ணாடி உடையும் சப்தம். பாத்திரம், தட்டு விழும் சப்தம்.

மறுபடி மௌனம். ஜெயராமன் சர்வநாடியும் அடங்கிப் போய், கட்டிலுக்கடியில் மார்பைப் பிடித்துக் கொண்டு மூச்சு விடக் கூட தயங்கிக் காத்திருந்தான்.

மெல்ல மெல்ல காலடி கீழே இருந்து தெரிந்தது. சுசீலாவின் அழுகுரல் கேட்டது.

"எங்க ஒளிஞ்சுண்டிருக்கீங்க! வெளில வாங்கோ!"

"என்னடி?"

"என்னது, இப்படி போய்ப் பயந்துண்டு!" என்றாள் விசும்பல்களுக்கு இடையே. அவன் மார்பு படபடத்து வேர்வையில் குளித்திருந்தான்.

அவள் தலை கலைந்திருந்தது. கையில் உலக்கை இன்னும் பாக்கியிருந்தது. அதன் முனையில் ரத்தக்கறை தெரிந்தது.

"ப்ளாஸ்டிக் வாளில கோதுமையை ரொப்பியிருந்தேன். ரெண்டு பேரும் மும்முரமா அதைத் துழாவிண்டிருந்தா. பின்னால போய் இவன் மண்டைல ஒண்ணு, அவன் மண்டைல ஒண்ணு. அப்படியே சப்தநாடியும் ஒடுங்கிப் போய் கீழே விழுந்துட்டான்! அவன் நான் அடிப்பேன்னு எதிர்பார்க்கவே இல்லை. என்னைப் பார்த்துச் சிரிச்சான்!"

ஜெயராமன் வெளியே வந்தான்.

"அய்யய்யோ செத்துப் போய்ட்டானா?"

"மயக்கமா இருக்கான். புஸ்ஸுன்னு மூச்சு கேக்கறது பாம்புக்குட்டியாட்டம். நீங்க என்ன பண்றீங்க, வேகமா மொபெட்டை எடுத்துண்டு பக்கத்தில் இருக்கானே, அவாத்தில முரளின்னு

ஒரு காலேஜ் பையன் இருக்கான். அவன்கிட்ட சொல்லி, போலீஸ் அவுட் போஸ்டுக்கு தகவல் சொல்ல ஏற்பாடு பண்ணிட்டு வாங்கோ!"

"அதுக்குள்ள எழுந்துட்டானா?"

"பாத்துண்டே இருக்கேன். இன்னொண்ணு போடறேன்" என்றான்.



ஓடாத கடிகாரம்!

ரஷ்யப் பிரதமராக இருந்த குருசேவ் கோபம் வரும்போதெல்லாம் தம் கைக் கடிகாரத்தைக் கழற்றி மேஜை மீது ஓங்கி அடித்துக் கூச்சலிடுவாராம். அதிகாரிகள் வெலவெலத்துப் போவார்களாம்.

ஒருமுறை பிரெஞ்சு அதிகாரி ஒருவர் குருசேவுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது, அந்தக் கைக்கடிகாரத்தை வாங்கிப் பார்த்தார். அடடா, என்ன வியப்பு! இயந்திரமே பொருத்தப்படாத – ஓடாத கடிகாரமே அது! குருசேவ் தம் ஆத்திரத்தின் கடுமையைக் காட்டுவதற்காகத் தந்திரமாய் அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்.

– உவகையூட்டும் உலக நிகழ்ச்சிகள் நூலிலிருந்து : கே. ஏ. காளிமுத்து

காலை பத்து மணிக்கு அந்த வீட்டில் கூட்டமாக நிருபர்கள் நிரம்பியிருந்தார்கள். நடுவே தகர நாற்காலிகள் போட்டு இன்ஸ்பெக்டரும் ஜெயராமனும் உட்கார்ந்திருக்க, சுசிலா நிலைப்படியருகில் நின்று கொண்டிருந்தாள். தனியார் டீவிகாரர்கள் விளக்குக்குக் கனெக்ஷன் தேடிக் கொண்டிருக்க, புகைப்படர்கள் வீட்டை வெளியேயும் உள்ளேயும் அத்தனை கோணத்திலும் படம்பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

"முப்பத்து நாலு கொள்ளை செஞ்சவங்களை பிடிச்சுட்டமா, டிஜிபியே போன் பண்ணி எங்களுக்கு வாழ்த்துக்கள், சொன்னாருங்க."

"நல்ல அடியாமே அவங்களுக்கு?"

"ஆமாம்! தாலுக்கா ஆஸ்பத்திரில சேர்த்திருக்கோம். உயிருக்கு ஆபத்தில்லை. குணமானதும் நாலு... இன்டராகேஷன் பண்ணா காங்ல மத்த பேரையும் புடிச்சுருவோம். எத்தனை தண்ணி காட்டிருக்காங்க தெரியுமா, இந்த ஆனந்தன் காங்கு?"

"எப்படிங்க அகப்பட்டாங்க?"

"எல்லாம் இவங்க சமயோசிதமா நடந்துக்கிட்டதால!"

அனைவரும் ஜெயராமனைப் பார்த்தார்கள். "மிஸ்டர் ஜெயராம் என்ன நடந்ததுன்னு உங்க கோணத்திலருந்து சொல்ல முடியுமா?"

ஜெயராமன் இரண்டு முழங்காலிலும் இரண்டு கை பதித்து நிதானமாகப் பேசினான்.

"ராத்திரி பத்து மணிக்கு விளக்கணைச்சுப் படுத்துட்டோம். பத்துப் பதினஞ்சு நிமிஷத்துல சரளைல நடக்கற மாதிரி சப்தம் கேட்குது. கதவைத் தட்டினாங்க. யாருன்னு கேட்டா குடிக்க தண்ணி வேணுங்கறான். அப்புறம் அதட்டலா கதவைத் திற. இல்லாட்டி உடைப்பேன்னாங்க."

"உடச்சிருக்காங்க" என்றார் இன்ஸ்பெக்டர். "இதோ பாருங்க!"

"உள்ளே வந்ததும் பீரோ சாவி கேட்டான். நான் எதும் ஆர்க்யூ பண்ணாம கொடுக்கச் சொல்லிட்டேன். ஆயுதம் வெச்சிருந்தாங்க பாருங்க! ரெண்டு பேத்தையும் சமையலறையில் தள்ளி உள்ள கதவைச் சாத்திக்கச் சொன்னாங்க."

"அதான் அவங்க பண்ண ஒரே தப்பு."

"அவங்க பீரோவை திறந்து தேடிப் பார்த்திருக்காங்க. அதிகம் நகை கிடைக்கலை. அப்புறம் ப்ளாஸ்டிக் பக்கெட்ல 'தனியா' கொட்டிருந்தோம். அதைத் துழாவினாங்க.

"அப்பதான், இவ வந்து மிளகா, இடிக்க உரலும் உலக்கையும் இச்சன்ல வெச்சிருந்ததைப் பார்த்தா. உடனே என்ன பண்ணா..."

சுசிலா அவசரமாகக் குறுக்கிட்டு, "உடனே இவர் என்ன பண்ணார், உலக்கையை எடுத்துண்டார். ஏதோ சூரசம்ஹாரம் மாதிரி, நான் வேண்டாம் வேண்டாம்... கிட்ட போகாதிங்கோ. அவாள்ளாம் முரடான்னு சொல்லச் சொல்ல கேக்காம, கதவைப் படோர்னு திறந்துண்டு மடேர்னு அவா ரெண்டு பேரும் திரும்பிப் பார்க்கறதுக்குள்ளேயே இவன் தலைல ஒண்ணு, அவன் தலைல ஒண்ணுன்னு போட்டார் பாருங்கோ, ரெண்டு பேரும் ஸ்தம்பிச்சுப் போய் அப்படியே சுருண்டு விழுந்துட்டா!"

"அவன் இந்த மாதிரி மிடில் கிளாஸ் ஆசாமி எதிர்ப்புத் தெரிவிப்பான்னு எதிர் பார்க்கவே இல்லைங்க. அதான் அசால்ட்டா இருந்துட்டான். இருந்தாலும் உயிரைத் துச்சமா மதிச்சுச் செஞ்சது மிக தைரியமான காரியம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ரிமார்க்கபிள். கை குடுங்க!"

அந்த நிருபர்கள் அனைவரும் ஜெயராமனைக் கைகுலுக்க, அவன் இடுப்பு வேஷ்டியைச் சரிபண்ணிக் கொண்டு, சுசிலாவைப் பார்த்த பார்வையை எந்த எழுத்தாளனாலும் வருணிக்க முடியாது.

குறையொன்றுமில்லை

சீதா பிராட்டி ராமனைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னாள்:

''என்னைக் காட்டுக்கு அழைத்துக் கொண்டு போக மாட்டேன் என்கிறீர்களே... காட்டிலே சிங்கம் இருக்கும், புலி இருக்கும் - வேண்டாம் என்கிறீர்களே? சிங்கத்திடமிருந்தும் புலியிடமிருந்தும் என்னைக் காப்பாற்ற முடியாத அல்ப வீரியரா நீங்கள்...? சரி. போகட்டும்! அதனால் நானொன்றும் உங்களைத் தவறாக எண்ண மாட்டேன். என் தந்தைதான் உங்களைத் தப்பாகப் புரிந்து கொள்வார்...''

மாமனார் எதிரில் கௌரவமாக, பிரகாசமாக இருக்க வேண்டும் என்கிற எண்ணம் மாப்பிள்ளைக்கும் இருக்காதா! மாப்பிள்ளை உயர்வாய் இருக்க வேணும் என்கிற எதிர்





பார்ப்பு மாமனாருக்கும் இருக்கும் அல்லவா?

அதை மனத்தில் கொண்டு சீதா பிராட்டி பேசிவிட்டாள்.



உடனே பரமாத்மா அவளிடம் சண்டை போட வேண்டாமோ...? ஆனால் போடவில்லை... ராமாயணம் கற்றுத் தருகிற தர்மம் என்னவென்றால், புருஷன் மனைவிக்குள்ளே சண்டை வந்து விட்டதென்றால், ஒருத்தர் குரல் கொஞ்சம் உயர்ந்து விட்டதென்றால், மற்றவர் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருக்க வேண்டும். அவரும் கூச்சல் போட்டால் சண்டை அதிகமாகி விடும்!

ஆகவே ராமன் எதுவும் பேசவில்லை. சீதா பிராட்டியை அழைத்துக்கொண்டு போகத் தயாராகி விட்டான்.

குடும்பத்தில் சண்டை கூடாது என்கிற தினசரி வாழ்க்கை தர்மத்தையும் இப்படி ராமாயணம் எடுத்துச் சொல்கிறது.

நிவாஸம் என்பதும் ஒரு தர்மம். ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்தோமானால் அந்த க்ஷேத்திர விசேஷத்தைப் பெரியவர்கள் கொண்டாடுகிறார்கள். அந்த ரங்கநாதரை தினமும் சேவிக்கலாம் இல்லையா! நித்தியம் கோவிலுக்குப் போக முடியவில்லையென்றாலும் வீதியிலே அவன் வரும்போது சேவிக்கலாமே!

கோவில் இருக்கும்படியான தெருவில் நாம் இருப்பதுகூட விசேஷம். பெரியோர்களை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அண்டி நாம் இருக்க வேண்டும். நல்ல விஷயங்கள் காதில் விழுந்து கொண்டேயிருக்கும்.

ராமபிரான் எப்போதும் பெரியோர்களை நாடிச் செல்வான். மகான்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிச் செல்வானாம். இது உத்தமமான ஒரு விஷயம்.

நிவாஸம் என்பதை உறுதிப்படுத்த இப்படி ராமனைப் பற்றி நான்கு சுலோகங்கள் சொல்கிறான் பரதன்.

அந்த சித்ரகூட பர்வதத்தில் லக்ஷ்மியோடு நாராயணன் இருக்கிறான். ஆதிசேஷனாகிய லக்ஷ்மணன் இருக்கிறான். வைகுண்டத்தில் பரமாத்மா இருப்பதைப் போல் இருக்கிறது! வைகுண்டத்துக்குத் துல்லியமானது சித்ர கூடம்.

பரதன் சொல்கிறான்: "ராமனைக் கிட்டே நெருங்கிச் சேவிக்கிற வரையில் எனக்கு சாந்தி ஏற்படாது. ராமனுடைய திருமுக மண்டலத்தை நெருங்கிச் சேவிக்கிற வரை எனக்குத் திருப்தி ஏற்படாது. ராமனை அபிஷேகம் செய்கிறவரை எனக்குத் திருப்தி உண்டாகாது. அந்த அபிஷேக தீர்த்தத்தை சிரஸிலே புரோக்ஷிக்கிற வரையில் சாந்தி ஏற்படாது..."

மோக்ஷ நிலையில் நான்கு சொல்லப்படுகிறது. சாலோக்யம்: உரிய இடத்தை அடைவது. ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தை அடைந்து அங்கே இருந்தால் சாலோக்யம். சாமீப்யம் : அப்படியென்றால் அருகாமை. கோவிலுக்குள்ளேயே கைங்கர்யம் செய்வது என்று கொள்ளலாம். பகவானுக்கு சமீபத்தில் வந்து விட்டாலும் அவரை சேவிக்கிற நிலை இன்னும் வரவில்லை. அவரைச் சுற்றிச் சுற்றி வர முடிகிறது. சாரூப்யம் - இது பகவானுக்கே கைங்கர்யம் செய்தல். அர்ச்சகர் இருக்கிறார். அவருடைய காரியம் இது. ஆனால் அவர் உருகி, பகவானை சேவிக்க ஆரம்பித்தால் கோவிலுக்கு வருகிறவர்களுக்கு யார் சேவை பண்ணி வைப்பார்கள்! ஆதலால் அவர் ரங்க நாதரை மறக்க வேண்டியவராகிறார். நெருங்கி இருந்தாலும் பார்க்க முடியவில்லை. அடுத்தது சாயுஜ்யம்- அவனைப் பூரணமாக அனுபவித்தல் என்பது அந்த சாயுஜ்ய பதவி.

சாயுஜ்யம் என்றால் பகவானை பக்தன் அனுபவித்தல், பக்தனை பகவான் அனுபவித்தல் என்பது இரண்டுமே அளவிலும் அனுபவித்தலிலும் சமமாயிருக்கும் என்று பெரியவர்கள் பணித்துள்ளார்கள்.

இது நன்றாகப் புரிய வேண்டுமானால் ஓர் உவமை சொல்லலாம். லௌகிக உதாரணம்!

ஒருத்தர் அரைப்படி புளியோதரை சாப்பிடுகிறார்; இன்னொருத்தர் ஒரு படி சாப்பிடுகிறார். புளியோதரை என்கிற ருசியிலே இரண்டு பேர் சாப்பிட்டதும் சமமாக இருந்தாலும் அளவில் வித்தியாசம் இருக்கிறது.

ஒருத்தர் அரைப்படி புளியோதரையும் இன்னொருத்தர் அரைப்படி சர்க்கரைப் பொங்கலும் சாப்பிடுகிறார்கள்... இரண்டுமே அரைப்படி என்று அளவிலே சமானமாய இருந்தாலும் ருசியிலே வித்தியாசம் இருக்கின்றது.

இருவர் தலா அரைப்படி சர்க்கரைப் பொங்கல் சாப்பிட்டால்...? அளவு, ருசி இரண்டுமே சமமாகிறது அல்லவா? இதுதான் சாயுஜ்யம்! பக்தனும் பகவானும் சமமான அனுபவம் பெறுதல்.

நிவாஸம், சாமீப்யம், சாலோக்யம், சாயுஜ்யம் என்கிற நான்கு நிலைகளும் பரதனுக்கு ஏற்பட்டன. வனவாசத்தில் ராமன் இருந்த இடத்துக்கு (நிவாஸம்) ஓடோடி வந்தானாம் பரதன். அயோத்தி இருந்த திக்கைத் திரும்பிக்கூடப் பாராமல் வந்தானாம்.

'மீண்டும் அயோத்திக்கே திரும்பினானே?' என்று கேட்டால், அது பாரதந்த்ரியம்- பகவானுடைய ஆக்ஞைப்படி நடந்தான். தன்னுடைய விருப்பத்தினால் அவன் திரும்பவில்லை அயோத்திக்கு.

இவ்வாறு ராமாயணத்திலே எங்கு தொட்டாலும் சாஸ்திரப் பேச்சேயொழிய வேதத்துக்குப் புறம்பான விஷயம் எங்கேயும் கிடையாது.

வியஸனம் (மனத்துன்பம்) என்றுகூட ஒரு தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது.

எல்லோரும் வியஸனப்பட்டே ஆக வேண்டும் என்பது நியதி. வியஸனத்தைக் கொடுத்துத்தான் நம்மைத் திருத்துகிறான் பரமாத்மா.

துக்கம் வரும்போது, 'நமக்கு வராமல் வேறு யாருக்கு வரும்?' பகவான் அந்த துக்கத்தை அனுபவிக்க நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறான்' என அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். சுகம் வரும்போது துள்ளிக் குதிக்கவும் கூடாது; துக்கம் வரும்போது துன்புற்று அழவும் கூடாது. துக்கத்தையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். சுகத்தையும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

துக்கத்தைப் பொறுத்துக் கொள்ளலாம் சரி-சுகத்தை...? சுகத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் - சுகம், துக்கம் இரண்டையும் சமமாக பாவிக்க வேண்டும் என்று பொருள். ராமபிரான் அப்படித்தான் அனுபவித்தான். காட்டுக்குப் போ என்ற போதும் சரி, இருந்து அரசாட்சி செய் என்ற போதும் சரி, ஒரேமாதிரிதான் இருந்தான்.

ராமன் சீதையைப் பிரிந்து 'ஹா சீதே!' என்று அரற்றினானே, அதெல்லாமும் மகான்களுக்கும் வியஸனம் உண்டு என்பதையே காட்டுகிறது. அப்பேர்ப்பட்ட ராமபிரானுக்கே வியஸனம் வந்ததென்றால் நாம் எந்த மூலைக்கு...!? நமக்கு வராமல் வேறு யாருக்கு வியஸனம் வரும்?

பகவானின் வியஸனத்துக்கு இன்னொரு கதைகூட சொல்வதுண்டு. பூரி நகரத்திலே மட்

டும் பகவான் ஜகன்னாத பெருமாள், சிலா ரூபமாக இல்லாமல் ஒரு கட்டை வடிவத்திலே இருக்கிறார். இதற்கு ஒரு கதை:

பகவானுக்கு முதலில் பூமாதாவோடுதான் கல்யாணம் ஆயிற்று. பரமசிவன் பார்வதியோடு வந்து தம்பதியை விருந்துக்கு அழைத்தாராம்.

கல்யாணமானவுடன் விருந்துக்கு அழைக்கும் பழக்கம் அப்போது ஆரம்பித்ததுதான்!

பூமாதேவியைப் பார்த்து, "போகலாமா?" என்கிறார் பகவான். அவள் சொல்கிறாள்: "நீங்கள் போகும் இடத்துக்கெல்லாம் என்னால் கூடவே வர முடியாது! அசலா (அசையாதவள்) என்று பெயர் அல்லவா எனக்கு! உங்களோடு நான் வந்தால் இந்த சராசரங்கள் அத்தனையும் என்னாவது! நீங்கள் போய் வாருங்கள். என்னால் வர முடியாது!"

பரமாத்மா எல்லா இடங்களுக்கும் தனியாகவே போய் வருகிறான். அவனுக்கு அது ரொம்பவும் வெட்கத்தை அளித்ததாம். போகும் இடத்திலெல்லாம் 'பத்னி எங்கே?' என்று கேட்டால் பதில் சொல்ல முடியவில்லை.

அதனால் சமுத்திர ராஜனின் மகளான லக்ஷ்மியை இரண்டாம் கல்யாணம் செய்து கொண்டான் பரமாத்மா.

என்ன ஆயிற்று...? மஹாலக்ஷ்மி ஓர் இடத்தில் தங்காமல் ஓடிக்கொண்டேயிருந்தாள். பகவானால் அவளோடு சேர்ந்து ஓடமுடியவில்லை. மூச்சு வாங்கியதாம்.

'போதும் கல்யாணம்' என்று தீர்மானத்துக்கு வந்து, பிள்ளையினிடத்திலே சில நாள் போய் இருக்கலாம் என்று கிளம்பினானாம். பிள்ளை என்றால் மன்மதன்.

மன்மதனிடத்திலே போகும்போது எதிரே ஒருத்தர் வந்தாராம். 'இப்போதுதான் மன்மதன் பரமசிவனிடத்திலே அபசாரப்பட்டு, அவனுடைய நெற்றிக்கண்ணுக்கு ஆளாகி பஸ்மமாகிப் போனான்!' என்று செய்தி சொன்னாராம்.

பகவானுக்குப் புத்ர சோகம் தாள முடியாமல் போய் விட்டதாம். மாமனார் கிரஹத்தில் போய் ஆறுதல் தேடலாம் என்று பார்த்தாராம். மாமனார் கிரஹத்துக்குப் பத்தினியை அழைத்துக் கொண்டு போனால் கௌரவம்... ஆனால் இவன் நிலை வேறாக இருந்தது. இருந்தாலும் பரவாயில்லை என்று புறப்பட்டுப் போனானாம்.

சமுத்திர ராஜனிடம் போனால், பெரிய அலை ஒன்று அடித்து பகவானைத் தூக்கித் தள்ளி விட்டதாம். 'உள்ளே நுழையும் முன்பே இந்த மரியாதை! இன்னும் உள்ளே போனால் என்ன நடக்கும்' என்று வருத்தப்பட்டுப் பின் வாங்கினான் பகவான்.

சற்று படுத்து ஓய்வெடுக்கலாம் என்று



''தலைவரே, உங்களுக்கு டாக்டர் பட்டம் தருவாங்கன்னு எதிர்பார்த்தீங்களா...?''

''முட்டாள்! என்னடா கேள்வி கேட்கற?... ஆயிரக்கணக்குல இதுக்குன்னு பணம் கொடுத்துட்டு எதிர்பாக்காம இருக்க முடியுமா?''

— எஸ்.எஸ். பூங்கதிர்

முடிவு பண்ணி, ஆதிசேஷனைப் படுக்கையாக்கி சயனித்தான். படுத்தால்... ஆதிசேஷன் 'புஸ்! புஸ்!' என்று விஷத்தைக் கக்குகிறான்.

பார்த்தான் பகவான். 'சரி நமக்கு இனி உதவுவார் ஒருத்தரும் இல்லை. காசிக்குப் போக வேண்டியதுதான்' என்று புறப்பட்டான். கருடாழ்வாரின் மேல் ஏறிப் போய்க் கொண்டிருந்தபோதே, பூரி என்கிற ஊரின் மேல் பறக்கையில் கீழே பூமியில் ஒரு பாம்பு ஊர்வது தெரிந்ததாம். அதைப் பார்த்த கருடன் "நாராயணா! கீழே என் ஆகாரம் போகிறது... அதைச் சாப்பிட நான் போகிறேன்... உன்னை இங்கே இறக்கி விடுகிறேன். நீ நடந்து போய்க் கொண்டேயிரு, நான் சாப்பிட்டு முடித்துவிட்டு வருகிறேன்..." என்று பகவானை அப்படியே கைவிட்டு விட்டுப் போய்விட்டான்!

பகவானும் கருடாழ்வாரின் அந்த வார்த்தையைக் கேட்டு 'நம் நிலை இப்படி ஆகிவிட்டதே!' என்று தலையில் கை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டானாம்.

அப்படியே தன் வீட்டுக் கஷ்டத்தை நினைத்து நினைத்து பகவான் கட்டையாகவே போய்விட்டானாம்!

- இதுதான் பூரியிலே அவன் அப்படிக் காட்சியளிப்பதன் பின்னணிக் கதை.

இப்படியொரு கதை உருவானதே, வியஸனம் என்பது யாரையும் விட்டு வைக்காது என்பதை நமக்கு உணர்த்தி சமாதானம் செய்யத்தான். பகவத் சரித்திரங்களும் இதிகாசங்களும் 'வியஸனம் வந்தால் சிரமப்படாதே' என்று சொல்கின்றன. இந்த தர்மத்தையும் ராமாயணம் சொல்கிறது. அதற்கும் மேலே, அறுபத்து நான்கு வகைக் கலைகளையும் அது சொல்கிறது!

இவை அத்தனையையும் பெரிய திருமலை நம்பிகள் திருமலை க்ஷேத்திரத்தில் வைத்து ராமானுஜருக்கு உபதேசம் பண்ணினார். விச்வமூர்த்தியாகிய - விச்வ சப்தத்தை உணர்த்துகிற - ரகுநந்தன் காட்டியவைதான் ராமாயணத்திலே சொல்லப்பட்ட தர்மங்கள்.

(தொடரும்)



"அம்மா, ஹேமமாலினி படம்மா இன்னிக்கு. இங்கே வாயேன்!"

ப்ரியா ஆரம்பித்து விட்டாள். சதிஷுக்கு எரிச்சலாக இருந்தது. அக்கா வெராண்டாவுக்கு வர, இரண்டு பேரும் இந்தியில் பேசிக் கொண்டார்கள். எதுவும் நடக்காதவர் மாதிரி அப்பா, தமிழ் பேப்பரில் மூழ்கியிருந்தார்.

இந்த சனியன் இங்கே வந்ததிலிருந்தே ஒரே கும்மாளம்தான். காலை எழுந்தவுடன் பேப்பருக்குப் போட்டி வந்து விடுகிறது. சதிஷுக்கு பேப்பர் அத்தனையையும் ஒன்றாக வைத்துப் படிக்க வேண்டும். ப்ரியா வந்ததிலிருந்து நடுநடுவே ஷீட்டை உருவி விடுகிறாள்.

எல்லாம் எத்தனை நாளைக்கு? இன்னும் ஒரு மாசமோ என்னவோ? லீவு முடியட்டும். திரும்பிப் பார்க்காமல் ஓடு நாயே பாம்பேக்கு என்று துரத்தி விட வேண்டியதுதான்.

ப்ரியாவையே முறைத்தான். அது ஏதோ இந்திப் பாடலை ஹம்மிங் பண்ணிக் காட்டிக் கொண்டிருந்தது. பெரிய லதா மங்கேஷ்கர் என்று நினைப்பு. அக்காவைத்தான் சொல்ல

அப்பா

வேண்டும். ஒரே சினிமா பைத்தியமாய் வளர்ந்திருக்கிறாள்.

அதுவும் பெரிய ஹேமமாலினி விசிறி. மூஞ்சியைப் பாரு. வெள்ளைப் பன்னி.

"அந்தப் பேப்பர் குடுக்கறாயா?"

ப்ரியா சட்டை பண்ணவேயில்லை. சதிஷ் பொறுமை காத்தான். இல்லையென்றால் அம்மாவிடம் சொல்லி விடுவாள். அக்காவும், ப்ரியாவும் மெட்ராஸ் வருகிறேன் என்று லெட்டர் வந்தவுடனே அம்மா, அவனைக் கண்டித்து விட்டாள்.

சதிஷுக்குக் கோபமாக இருந்தது. என்னத்துக்குக் கண்டிப்பானேன்? நானென்ன குழந்தையா? பத்தாம் கிளாஸ் போகப் போகிறேன். எனக்குத் தெரியாது. எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று?

ஆனால் அம்மாவுக்கும் புரியவில்லை, அப்பாவுக்கு அதற்கு மேல் புரியவில்லை. இன்னும் எல்லோர் எதிரிலும் மிரட்டுகிறார். அவமானம் போல் என்னவோ ஒன்று சதிஷுக்குத் தோன்றியது. அப்பாவுக்கு இங்கிதமே தெரியவில்லை.

இன்னும் சொல்லப் போனால், ஊரிலிருந்து வந்த பெரியப்பாதான், அவனுக்கு நான்கு முழம் வேஷ்டிகள் வாங்கித் தந்தது. அதுவரை நிஜார்தான்.

"நெடுநெடுனு வளர்ந்திருக்கான். இன்னும் வேஷ்டி வாங்கித் தராம இருக்கேளே?" என்று அப்பாவைக் கடிந்து கொண்டபோதும், அப்பா லேசாய் நிமிர்ந்து பார்த்துக் கொண்டார், அவ்வளவுதான்.

"அம்மா நான் டீ.வி. பார்க்கப் போறேன்மா. நல்ல படம்மா? ப்ரியா கெஞ்ச, பரிதாபத் தோற்றம். கள்ளி.

"எங்கடி டீ.வி. இருக்கு? அதெல்லாம் ஊருக்குப் போய்ப் பார்த்துக்கலாம்."

"சதிஷுக்குத் தெரியும்மா. அவன் ப்ரெண்டாத்துல இருக்கும்மா, ப்ளீஸ்மா."

"அதெல்லாம் நீ போகக் கூடாது. பெரியவளானதுக்கு லட்சணமா நடந்துக்கோ."

"ப்ளீஸ்மா. சதிஷே வரட்டும்மா. நான் அவனோட போயிட்டு வந்துர்றேன். போலாமாடா?"

காதில் விழாதது போல், சதிஷ் பேப்பரில் குனிந்திருக்க, மீண்டும் அவனைக் குலுக்கியபடி.

"உன் ப்ரெண்டாத்துல டீ.வி. இருக்குன்ன இல்ல. இன்னிக்கு சாயங்காலம் அழைச்கண்டு போடா. ப்ளீஸ்."

"நான் லைப்ரரி போகணும். என்னால் முடியாது."

"ப்ளீஸ்டா. ப்ரியா கேக்கறண்டா."

இவ பெரிய லாட்டு! ப்ரியா கேக்கறாளாம். உடனே செஞ்



கடணுமா? முடியாது. என்ன பண்ணுவே?

"அதெல்லாம் முடியாது. நான் புக்க ரிட்டர்ன் பண்ணியாகணும்."

"அவனுக்கு வேலை இருக்குன்றான்னில்ல. ஏண்டி, தொந்தரவு பண்றே?"

ப்ரியாவுக்கு முகம் விழுந்து விட்டது. ஆதரவு வேண்டுவது போல் சதீஷைப் பார்க்க, அவன் மீண்டும் பேப்பரில் மூழ்கியிருந்தான்.

"பாலாஜி வீட்டுல டி.வி. இருக்காடா?" ஹாலிலிருந்து அம்மா கேட்டாள். பக்கத்தில் ப்ரியா.

"எனக்குத் தெரியாது?" சதீஷ்.

"என்ன தெரியாது? வாரா வாரம்தான் ஞாயித்துக் கெழமை யானா படம் பாக்கப் போறியே. எங்க போறே?"

"எங்கியோ போறேன்."

"அடி செருப்பால. எங்கியோ போறானாம். வராத வந்த கொழந்த வந்திருக்கு. படத்துக்கு அழைச்சுண்டு போடான்னா, ரொம்ப அலட்டிக்கறே."

கோள் மூட்டி விட்டாள். தான் நினைத்ததைச் சாதித்துக் கொள்ள வேண்டும். இவள் ஹேமமாலினியைப் பார்க்கவில்லையென்றால், சாதமே இறங்காதோ?

"என்னடா, சாயங்காலம் அழைச்சுண்டு போறியா?"

சதீஷுக்கு வெறுப்பாய் இருந்தது. சொன்னால் இவர்களுக்கு ஏன் புரிய மாட்டேன் என்கிறது?

"ஏம்மா சும்மா தொல்ல பண்றே? அங்கே எங்க ஸ்கூல் பசங்க எல்லாம் வருவாங்க. தடிதடியா நிப்பாங்க. எடமே இருக்காதும்மா. அது நடுவுல, இவள எங்க கூட்டிண்டு போறது?"

"முன்னாடியே போயி ஓரமா எடம் புடிச்சுண்டு ஒக்காந்துக்கலாம்டா. அப்புறம் படம்

ஆர். வெங்கடேஷ்.

அருள்வாக்கு

எந்தக் காரியம் செய்தால் நல்லதோ அது தர்மம். தமிழில் 'அறம் செய விரும்பு' என்று முதலில் சொன்னார்கள். நல்லதாகச் செய்வதெல்லாமே தர்மம் என்றாலும், பொதுவிலே தர்மம் என்பது ஈகைக்கே வார்த்தையாக இருக்கிறது. 'தர்மம் போடப்பா, தர்மத் தாயே' என்று தான் பிச்சைக்காரர்கள் சொல்கிறார்கள். தான-தர்மம் என்று சேர்த்தே சொல்கிறோம். தமிழிலும் தான சாஸனங்களை அறக்கட்டளை என்றே சொல்கிறார்கள். இப்படிப் பார்த்தால் நம் 'பொருளை' 'அர்த்தத்தை' இன்னொருத்தருக்குக் கொடுப்பது தர்மம். ஆனால் இப்படிக் கொடுப்பதற்கு நமக்கு எப்படிப் பொருள் கிடைக்கும்? முன் ஜன்மத்தில் நாம் அர்த்தத்தை (பொருளை) மற்றவருக்குக் கொடுத்து தர்மம் செய்தால்தான் அது மறு ஜன்மத்தில் குட்டி போட்டுக் கொண்டு நமக்குக் கிடைக்கும். தர்மத்தினுடைய பிரயோஜனமே பொருள். இன்பத்துக்குப் பொருள் சாதனமாக இருப்பது போல் பொருளுக்குத் தர்மம் சாதனமாக இருக்கிறது. ஈகை மட்டுமல்ல; எவ்விதமான தர்மம் செய்தாலும் பலனாகப் பொருள் கிடைக்கும்.

நாம் செய்யும் தர்மத்தை 'இதனால் எனக்குப் பொருள் வேண்டாம்; ஈகவரன் நினைத்ததைக் கொடுக்கட்டும்' என்று பலனை எதிர்பாராமல் அர்ப்பணம் பண்ணி விட்டால் அப்போது நம்மிடத்தில் உள்ள அழுக்கு போய்ப் பேரின்பம் கிடைக்கும். பொருளைத் தரும் தர்மமே அப்பொழுது பரம்பொருளைத் தரும் வீட்டுக்கு ஸாதனமாகி விடும். இப்படி தர்மமானது பொருளுக்கு ஸாதனமாகவும், அதன் மூலம் இன்பத்துக்கு ஸாதனமாகவும், பற்றின்றி நிஷ்காம்யமாகச் செய்யப்பட்டால் வீட்டுக்கு ஸாதனமாகவும் ஆகின்றது; தர்மம் செய்தால் பிரதியாகப்

முடிஞ்சபுறம் வரலாம்" - ப்ரியா.

"ம். அப்டி பண்ணேன்டா." அம்மாவும் சேர்த்திசைக்க, சதீஷுக்கு இன்னும் வெறுப்பாய் இருந்தது.

அம்மாவுக்கு விவஸ்தையே இல்லை. அது யாரோ மூன்றாவது வீடு. அதில் சதீஷே அதிகப்படி. இதில் இவளையும் கூட்டிப் போனால், என்ன நினைப்பார்கள்? கூட பசங்களெல்லாம் வேறு வருவார்கள். நாளை மறுநாள் பார்த்துக் கொண்டால், முதல் காரியமாய் இந்தச் சனியனைப் பற்றித்தான் கேட்பார்கள், இன்டலடிப்பார்கள். அவமானமாய் இருக்கும்.

ரெண்டு பேருக்குமே புரிய மாட்டேனென்கிறது. சொந்தமாவும் தெரியவில்லை. சொன்னாலும் உறைக்க மாட்டேனென்கிறது. வழக்கப்படி, அப்பா முறைக்கிறார். தான் சொல்வதைச் செய்ய வேண்டும். மிலிட்டரி உத்தரவு.

இதெல்லாம்தான் பிடிக்காமல் போய்க் கொண்டிருக்கிறது. அடுத்தவன் என்ன நினைக்கிறான், சொல்கிறான் என்று கேட்க வேண்டாமோ? எனக்கும் வயசாகிறது. குழந்தையில்லை. ஆனால், இன்னும் இவர்களுக்கு நான் சின்னப் பையன். எதைச் சொன்னாலும் தலையில் தட்டுகிறார்கள்.

ப்ரியா வந்த பின்னால், இன்னும் அதிகமாகி விட்டது. அந்தச் சனியன் பாட்டுப் பாடுகிறது. ஓவியம் வரைகிறது. எம்பிராய்டரி பண்ணுகிறது. போதாதற்கு படிப்பில் சூடிகை. சமையலில் கெட்டி. அம்மாவுக்கு வாய் ஓயவில்லை.

சதீஷுக்குக் கவிதை எழுத வரும். இரண்டு கவிதைகள் மேகஸினில் கூட வந்திருக்கிறது. இதெல்லாம் அம்மா சொல்ல மாட்டாள். அப்பா அதற்கு மேல் ஒரு படி. 'எழுத்தால எவனும் வாழ்ந்ததில்ல. ஒழுங்கா படிக்கற வேலையப் பாரு.'

இவர்களையெல்லாம் வெட்டிப் போட்டால் என்ன?

நினைத்ததைச் சாதித்து விட்டது சனியன். வலது கையை கழுத்துக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு பார்ப்பதைப் பார். என்னமோ இந்த சினிமாதான், ஜென்ம சாபல்யமே தரப் போவது போல் வாயைப் பிளந்து கொண்டு பார்ப்பதைப் பார்.

இதற்கு நாலரை மணியிலிருந்தே அலங்காரம் வேறு. கூடவே அப்பாவின் கண்டிப்பு வேறு. போகும்போது, எத்தனை ஜாக்கிரதை. நான் என்ன கடத்திக் கொண்டா போய் விடுவேன்?

பாலாஜி வீட்டுக்கு வந்தபோது, படத்தைப் போட்டு விட்டான். அதற்கு ஒரு 'அச்சச்சோ' பெரிய காவியம். முதல்லேர்ந்து பாக்கலன்னா பூமியே பிளந்துடும்.

டியூப் லைட்டை அணைத்து விட்டார்கள். கொசு பறக்கிறது. டி.வி.யில் ஆன்னாவூன்னா ஹேமமாலினி பாடுகிறாள். ஆடுகிறாள் இல்லை கண்கலங்க நிற்கிறாள். வேகமே இல்லை. இதையெல்லாம் ஒரு படம் என்று எப்படித்தான் எடுத்தார்களோ? யாரோ காமெடியன் வந்தால், எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். சதீஷுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஏழு மணிக்குச் செய்திகள் வரும். கிளம்பி விட வேண்டியதுதான். ரோடில் யாரும் இருக்க மாட்டார்கள். சுறுசுறுப்பாய் போய் விட வேண்டும். இருட்டில், சுவரில் தொங்கிய

பொருள் கிடைக்கிறது. அந்தப் பொருளைக் கொண்டே மறுபடி தர்மம் செய்யலாம். இப்போது அர்த்தமே தர்மம் செய்ய ஸாதனமாக இருக்கிறது. இன்பம் ஒன்றுதான் தன்னாலும் நிறைவுபடுவதில்லை; பிறவற்றுக்கும் சாதனமாக இருப்பதில்லை. கொதிக்கிற மணலில் விட்ட ஜலம் உடனே காணாமல் போவது போல் 'இன்பம்' என்பது. தன்னாலும் நிறைவின்றி வேறெதுக்கும் சாதனமாகவும் இன்றி தர்ம சிந்தனை பொருள், மோக்ஷம் எல்லாவற்றையும் நாசம் பண்ணி விட்டுத் தானும் நசித்துப் போகிறது.



ஆனாலும் இந்த இன்பத்தை இப்போதே விட்டுவிடு என்றால் முடிய மாட்டேன் என்கிறது. அதை அடியோடு விடாமல் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்தித் தரவும் பிறகு படிப்படியாக இந்தச் சிற்றின்பத்திலிருந்து பேரின்பத்துக்கு அழைத்துச் செல்லவுமே மதம் என்பது ஏற்பட்டிருக்கிறது. முதலில் இதுதான் அறம் என்று சொல்லி, அதை செய்வதற்காகவே எப்படிப் பொருள் ஈட்டவேண்டுமோ அந்த நியாயமான முறையைச் சொல்லி, அதனால் இன்னின்ன இன்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று பக்குவம் வருகிற வரையில் கிரமப்படுத்திக் கொடுத்து, அப்புறம் இந்தச் சின்ன இன்பங்களை எல்லாம் தொலைத்து நிரந்தர இன்பமான வீடு என்கிற மோக்ஷத்தைக் காட்டுவதே மதம்.

பந்தத்திலிருந்து விடுதலை பெற்று, ஆத்மா பூரண சுதந்திரத்துடன் எந்நாளும் ஆனந்தமாக இருக்கிற நிலையே மோக்ஷம். இதை நமக்குக் கிட்டச் செய்வதற்கே மதம் என்பது ஏற்பட்டிருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சுடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அது நகருவேனா என்றது.

ஒருவழியாய் செய்திகள் வந்தபோது, ப்ரியாவிடம் மெல்ல சதீஷ்,

"போலாமா?" என்றான்.

"ப்ளீஸ்டா. இன்னும் ஹாபனவர்தான்டா. பார்த்துட்டுப் போயிரலாம்."

"அம்மா தேடப் போறாம்மா."

"நான் சொல்லிக்கறேன்."

அரைமணி என்பது ஒரு மணியாயிற்று. இறுதியில் வில்லனை, ஹீரோ காடு, மலை, மேடு எல்லாம் துரத்தித் துரத்தி சண்டை போட்டு விட்டு, மலை மேலிருந்து விழுந்து விடும் ஹேமமாலினியை நெஞ்சையள்ளும் பின்னணி இசையோடு மேலே இழுத்தபின், மீண்டும் அவர்கள் காதல் பாடல் பாட, படம் முடிந்தது. ப்ரியா முகத்தில் பெரிய ஆசுவாசம். கண்ணீர் வேறு உகுத்திருக்கிறாள்.

தெருவில் ஈ, காக்கையில்லை. என்னதான் சிட்டியென்றாலும், ஞாயிறு ஆனால் எல்லோரும் டி.வி. முன்பே சமைந்து விடுகின்றனர். சதீஷுக்குப் பயமாக இருந்தது. பரபரவென்று நடந்தான். சத்தமாய் கேட்கும் எந்தக் குரலும் பயம் தந்தது.

தேவையில்லாத புதுப் பயங்களெல்லாம் கூட வந்தன. பின்னால் கேட்ட செருப்புச் சத்தம், வண்டியொலி கூட அச்சம் தந்தது. இந்தச் சனியனை நல்லபடியாய் வீடு சேர்க்க வேண்டும்.

எதிர்ப்படுபவர்கள் எல்லாம் ஒருமுறை அவனைப் பார்ப்பது போலிருந்தது சதீஷுக்கு. கூடவே அவனைப் பார்த்து ஒரு மர்மப் புன்னகையை உதிர்ப்பது போன்றும் தோன்றியது. நல்ல பேண்டாய் போட்டு வந்திருக்கலாம்.

தெருமுனை திரும்பிய போதுதான் சதீஷுக்கு மூச்சு வந்தது. இன்னும் வாய் ஓயாமல் ப்ரியா படத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். தூரத்தில், வீட்டு வாசல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வாசல் கதவை வேறு திறந்து வைத்திருக்கிறார்கள்.

அம்மா எட்டிப் பார்ப்பது தெரிந்தது. தொடர்ந்து அக்காவும் வெளியே வந்து நின்று விட்டாள். வீட்டை நெருங்க, அக்கா -

"ஏண்டா, இவ்ளோ லேட்டு?"

"படம் முடிய வேண்டாமா?" ப்ரியா பதிலளிக்க அம்மா -

"ஏழு மணிக்கே கூட்டிண்டு வந்துட வேண்டியதுதானேடா?"

"இவதான் வரமாட்டேனுட்டா."

"என்ன மாட்டேங்கறது. வயசுக்கு வந்த பொண்ணு. வயத்துல நெருப்பக் கட்டிண்டு, அப்போ புடிச்சு வாசலுக்கும் உள்ளுக்குமா நடந்திண்டிருக்கா தெரியுமா உங்கம்மா?"

அம்மா சொல்ல, அக்கா, யாருக்கும் தெரியாமல் ப்ரியா தலையில் நறுக்கென குட்டு வைத்தாள். உள்ளேயிருந்து எட்டிப் பார்த்த அப்பா,

"அதான் சொன்னேனே. அவன் கூட போயிருக்கான், பத்திரமா அழைச்சுண்டு வந்துடுவான்னு. எதுக்குப் பயப்படணும்? அவனுக்குத் தெரியாதா?" என்றார்.

சதீஷுக்கு ஒருமுறை சந்தேகம் வந்தது. மெல்லமாய்த் தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டான்.

சொன்னது அப்பாதான்.

காலேஜ் ஸ்டார் :

திறமை கண்டு பொங்குகிறார்? வறுமை கண்டு உடைகிறார்!

காலேஜ் பெண் ஒருத்தியை 'கவர்' செய்ய மூன்று மாணவர்கள் அலைவது அல்லது ஒரு மாணவனை வசப்படுத்துவதே வாழ்க்கை லட்சியம் என்பது போல நான்கைந்து மாணவிகள் போட்டி போட்டுக் கொண்டு காதல் போதையில் கொட்டமடிப்பது... இதுதான் கல்லூரி மாணவ சமுதாயம் என்ற ரீதியில் படம்பிடித்துக் காட்டும் சினிமாக் காரர்களை எதிர்த்து, வேலூரில் இருந்து போர்க்குரல் எழுப்புகிறார் பிரியதர்சினி.

ஆக்ஸிலியம் கல்லூரியில் பி.எஸ்சி., இரண்டாம் ஆண்டு மாணவி யான இவருடைய சிந்தனை, சொல் எல்லாமே புதுமையானவை.

"சினிமாவில் வருவதுதான் ரியல் லைஃப் என்று கொஞ்சம் கொஞ்ச மாக ட்ராக் மாறி, எனது ஐந்தாவது தலைமுறை டோட்டலா நாசமாகிப் போகும். எங்களை இப்படி இழிவுபடுத்துவதை எதிர்த்துப் போராட ணும்!"

ஐந்தாவது தலைமுறையைப் பற்றியெல்லாம் யோசிக்கும் பிரிய தர்சினியின் லட்சியம் ஐ.ஏ.எஸ்.ஸில் வெற்றி பெறுவது.

"ஒரு கலெக்டராகப் பொறுப்பேற்கிற போது மக்கள் பிரச்னையின் ஆணிவேரை அறிந்து கொள்ள முடியும். திட்டவட்டமான செயல் திட் டங்களை வகுத்து, நேர்மையாகச் செயல்பட்டால் நிச்சயமாக நல்லது செய்ய முடியும். குழந்தைத் தொழிலாளர் பிரச்னையைப் பாருங்கள். அம்மா, அப்பா சரியாக இருந்தால் இந்த அவலம் ஏற்பட்டிருக்குமா? இந்தக் கோணத்தில் அலச வேண்டும். நாலு வருடம் நான் கலெக்டராக இருந்தால் போதும். அந்தப் பகுதியில் நான் சாதித்துக் காட்டுவேன்."

கிரண்பேடியை ரோல் மாடலாக நினைத்திருக்கும் பிரியதர்சினிக்கு, நர்சரியில் படிக்கும்போதே கலெக்டர் லட்சியத்தை விதைத்தவர் ஆரம் பப் பள்ளி தலைமையாசிரியரான அப்பா சிவசங்கரன். இதற்கு நீரூற்றி உரம் போட்டு வளர்த்தவர் ஆசிரியையான அம்மா விஜயலட்சுமி.

"ஒண்ணாங்கிளாஸ் படிக்கும்போதே ஏகப்பட்ட மெடல்களுடன் பள்ளிக்குப் போவாள்" என்று பெருமைப்படுகிறார் இவரது தாயார். "ஒருமுறை குவைத்தில் குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நியூஸை படித்து விட்டு அன்னக்கி எல்லாம் அழுதுகிட்டே இருந்தாள்"



• பிரியதர்சினி

• தோழியருடன்...



என்று அவர் சொன்னது, மனிதர்கள் பிரச்னையில் இந்த மாணவி காட்டும் அக்கறைக்கு ஒரு உதாரணம்.

படிப்பிலும் கெட்டியான இந்த நம் பிக்கை நட்சத்திரம், என்.எஸ்.எஸ்., பேச்சுப் போட்டி, நாடகம் என எதுவாக இருந்தாலும் வெளுத்துக் கட்டுகிறார். மாணவிகளே ஆசிரியராக அவதாரம் எடுத்து வகுப்பு நடத்தும் செமினார் செஷனில் பிரியதர்சினி பாடம் நடத்தும் பாங்கை போட்டி போட்டுக் கொண்டு பாராட்டுகிறார்கள் சக மாணவிகள்.

"எனக்கு ஆங்கிலத்தில் பேசக் கூச்சம். திரும்பத் திரும்ப ரிகர்சல் நடத்தி என்னை மேடையில் பேச வைத்தாள்'' என்கிறார் ஷர்மிளா.

"ஓட்டப்பந்தயத்தில் என்னை பங்கேற்கச் செய்து மெடல் வாங்க வைத்தாள்" என்று தன் ஆருயிர்த் தோழி பற்றி பெருமைப்படுகிறார் சிவலட்சுமி.

பாடத்தைப் புரிந்து கொள்ள சிரமப்படும் மாணவிகளுக்கு வலியச் சென்று விளக்க மளிப்பதையும், கல்லூரி முடிந்த பிறகும் கூட அவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவதையும் பொறாமைப்படாமல் புகழ்கிறார்கள் மற்ற மாணவிகள்.

"இவ்வளவு திறமைக்கு வேறு ஒருத்தியானா ரொம்ப பந்தா பண்ணுவாள். எல்லாரிடமும் பழக மாட்டாள். இவ அலட்டல் இல்லாமல் எல்லார்கிட்டேயும் சகஜமாப் பழகுவாள்'' என்று புகழ் மாலை சூட்டுகிறார்கள்.

மாணவிகளுக்கு மட்டுமல்லாமல், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் என அனைவருக்கும் பிரியமானவர் இந்த பிரியதர்சினி. "வெரி ரெஸ்பான்ஸிபிள் கேர்ல். எந்த வேலையையும் பர்ஃபெக்டா செய்து முடிப்பாள்'' என சொல்லி வைத்தாற்போல் ஒரே மாதிரி பாராட்டுகிறார்கள்.

"எல்லோரையும் தன்பால் ஈர்த்து, தன்னை மதிக்க வைக்கும் இவளின் அரிய பண்பு என்னையும் கவர்ந்தது'' என்று சான்றிதழ் தருகிறார் கல்லூரி முதல்வர் சிஸ்டர் அல்ஃபோன்ஸா மேரி.

"எல்லாத் துறைகளிலும் சரிக்குச் சமமாகப் பெண்கள் வந்து விட்டதைப் பல ஆண்களால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. நானே ரொம்ப மெதுவாத்தான் டி.வி.எஸ். 50 யிலே போவேன். சைக்கிளில் போகும் ஆண்கள் எப்படிப் பார்க்கிறார்கள் தெரியுமா? ஒரு பொட்டச்சி ஓவர்டேக் பண்றாளே என்று மூச்சு வாங்க வேகவேகமா சைக்கிளை மிதிக்கிறாங்க. இது தேவையா...? இது என்ன மனோநிலை?'' என்று கேட்கும் பிரியதர்சினியிடம் இன்னொரு நெடு நோக்குத் திட்டமும் இருக்கிறது.

அதுதான், தமது தோழிகள் அன்பரசி, சிவலட்சுமி உதவியுடன் ஆதரவற்றவர்களுக்காக ஒரு கருணை இல்லம் அமைக்க வேண்டும் என்பது.

- ஆதித் கம்யூனிகேஷன்ஸ்

வண்ணப்படங்கள் : **மோகன் ஸ்டுடியோ**

அரசியலில் "Criminalisation" என்பது பூர்ணத்துவம் பெற்று வருகிறது. 'உள்ளே - வெளியே' ஸ்டைலில் இயங்கிக் கொண்டிருக்கும் அண்டர்வால்ட் 'டான்' அருண் காவ்லி, இப்போது பைஜாமா - குர்தா- காந்தி குல்லாய் சகிதம் அரசியல்வாதியாகி, 'நான் உங்கள் வீட்டுப்பிள்ளை' என டீ.வி.யில் பேட்டி கொடுக்கிறார். சிவசேனையிலிருந்து பிரிந்து வந்த 'அகில பாரதிய சேனா'வின் ஐம்பது வேட்பாளர்களுக்கு இவரது பரிபூரண 'ஆசீர்வாதத்தை' வழங்கியிருப்பதாகச் சொல்லி, சிவசேனைக்காரர்களை கதிகலங்க அடித்திருக்கிறார். தாவூத் இப்ராஹீம் வேறு 'சமாஜ்வாதி'' கட்சிக்கு தன் "ஒத்துழைப்பை"த் தரப் போகிறாராம்! 'சோட்டா ராஜன்' குழுவைச் சேர்ந்த அவதூத் போந்தே, தன் மனைவியைக் களத்தில் இறக்கி, எல்லோரையும் ஒரு கை பார்க்க நினைக்கிறார்! வழக்கம்போல், 'கிரிமினல் ரிகார்டு' உள்ள வேட்பாளர்கள் எக்கச்சக்கம்!


- சிவசேனைத் தலைமைக்கு, தன் மகன் மருமகனுக்குச் சமமாக - யாருமறியாத 'விஜய் வோகே'வை பால்தாக்கரே உயர்த்தி இருப்பது, மற்றவர்களுக்கு மட்டுமல்லாமல், 'விஜய்'க்கே அதிர்ச்சியளித்திருக்கிறது. ராஜ் தாக்கரேயின் தோழரான இவர், நேற்றுவரை கிளி வழக்கில் அடிபட்டவர்; சமீபம் வரை காங்கிரஸ் கட்சியில் இருந்தவர் (மேயர் எலெக்ஷனில், 'க்ராஸ் வோட்டிங்' செய்ததற்காக காங்கிரசால் வெளியேற்றப்பட்டவர்); இன்றும், இவர் தந்தை காங்கிரஸ்காரர்தான்! 'நாளை'ய சிவசேனை இவர் கையிலா என புருவங்கள் உயர்ந்தன! விஷயம் என்னவென்றால், முன்னாள் சிவசேனைக்காரரும், இந்நாள் காங்கிரஸ்காரருமான சகன் புஜ்பலின் தீக்கும் நாக்கை அடக்க, இந்த முன்னாள் காங்கிரஸ்காரர் இந்நாளில் சிவசேனைக்குப் பயன்படுவார் என்கிற "முள்ளுக்கு முள்" கணக்குத்தான்!

- "ரிடையரான பிறகு எல்லோரும் கோயிலுக்குப் போவார்கள், 'அருள் பெற!' ஆனால் நரசிம்மராவ் கோர்ட்டுக்குப் போகிறார் 'பெயில் பெற!" என கிண்டலடிக்கிறார்

பிரியங்காவுக்கு ஒரு கடிதம்!



பி.ஜே.பி 'பெருந்தலை'யான பிரமோத் மஹாஜன்! 'ராஜீவ் காந்திக்கும், போஃபர்ஸ் ஊழலுக்கும் சம்பந்தமே இல்லை' என சரத்பவார் கூறி வருவதையும் கடுமையாக விமர்சித்திருக்கிறார். அது சரி... டாடாவும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸூம் இணைந்து துவக்கத் தவிக்கும் தனியார் ஏர்-டாக்ஸி திட்டத்துக்கு எதிர்ப்புக்குரல் கொடுப்பவர்களில் ஓங்கி ஒலிப்பவர் பிரமோத் மஹாஜன்தான்! காரணம், 'டாடா-சியா' திட்டம் அமலாக்கப்பட்டால், பாதிப்புக்கு ஆளாகப் போவது "ஜெட்". அவர் பிள்ளை 'ஜெட் ஏர்வேஸில்' பைலட்!



• ஹுசைன்

● மகாராஷ்டிராவில் 15 வருடங்களாகத் தங்கி குடியுரிமை பெற்றவர்களையே செக்யூரிட்டி வேலைகளுக்கு நியமிக்க வேண்டும் என முதல் கட்ட நடவடிக்கை எடுத்துள்ளது மகாராஷ்டிரா அரசு. இந்தத் துறையில் வேலை செய்பவர்களில் 80 சதம் பஞ்சாப், உ.பி. பிஹார், தமிழ்நாடு முதலிய மாநிலத்தவர் என்பதைப் பார்க்கும்போது, இது மண்ணின் மைந்தர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து, பிற மாநிலத்தவரை வெளியேற்றும் பழைய திட்டத்தின் புதிய வடிவமோ என பலரை கவலைப்பட வைத்திருக்கிறது! நியமிக்கப்படுவர்கள் மட்டுமல்லாமல், செக்யூரிட்டியை நாடுபவர்களும் பதினைந்து வருடங்களாவது, மராத்தி உப்பைத் தின்றவர்களாக இருக்க வேண்டுமென சட்டம் வந்துவிடுமோ என சிலர் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

● 'மும்பையின் அடுத்த மேயரை நாங்கள்தான் அளிக்கப் போகிறோம்' என அடித்துப் பேசுகிறார் நடிகர் ராஜ்பப்பர். இவரது சமாஜ்வாதிக் கட்சியின் மீது இவ்வளவு நம்பிக்கையா என்றால்... "சிவசேனை, பி.ஜே.பி இரண்டின் அடிமட்டத் தொண்டர்களும், தங்கள் தலைவர்களின் பண வெறியால் (ஒரு சீட்டுக்கு இரண்டு லட்சமாம்) விரக்தி அடைந்துள்ளார்கள்; காங்கிரஸோ போபர்ஸ் ஜுரத்தில் படுத்துக் கிடக்கிறது. மீதி இருப்பது எங்கள் கட்சிதானே?" என்கிறார்! ஹூம்... இதையேதான் எண்ணற்ற சுயேச்சைகளும் சொல்கிறார்கள்!

● 'தயவு செய்து அரசு ஒதுக்குவதாகச் சொல்லப்படும் லோதி எஸ்டேட் பங்களாவில் குடி புகாதீர்கள். நாங்கள் கட்டும் வரிப் பணத்தில் நீங்கள் குஷாலாக இருக்க வேண்டுமென உங்கள் தாத்தா கனவிலும் நினைத்திருக்க மாட்டார். 'செக்யூரிட்டி' தான் பிரச்னை என்றால் உங்கள் தாயார் குடியிருக்கும் வீடு போதுமே! நீங்கள் நன்றாக வாழ வேண்டும் - ஆனால் லோதி எஸ்டேட்டிலல்ல" - இப்படி ஒரு கடிதத்தை புதுப்பெண் பிரியங்கா காந்திக்கு, மும்பையைச் சேர்ந்த நான்கு சமூக சேவகர்கள் - அரவிந்த பனவாரிகர், ஜேன்ஸ்வானா, திலீப் டிசௌஸா, ரேவதி கோபால் - அனுப்பியுள்ளார்கள்!

● "தலைவனுக்குத் தேவையான பண்பு என்ன?"
"தலைமை"
"சந்திரனுக்குச் சென்றால், முதல் எண்ணம் என்னவாக இருக்கும்?"
"எப்படி பூமிக்குத் திரும்புவது!"

"போட்டியில் வென்றால் பரிசை என்ன செய்வீர்கள்?"
"அம்மாவிடம் கொடுப்பேன்."
மும்பையில் நடைபெற்ற மிஸ்டர் இண்டியா மேற்கு ஜோன் இறுதிப் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விகளும், கிடைத்த பதில்களும்தான் இவை.

● தமது எதிரிகளுக்கு, ஓவியர் ஹூசேன் நூதன முறையில் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். இவரது சித்திரத்தைத் தாங்கிய கறுப்பு டீ-ஷர்ட்டுகளை அணிந்து கொண்டு பலர் ஜெஹாங்கீர் ஆர்ட் காலரியில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தனர். ஹூசேனுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் கறுப்பு டீ-ஷர்ட்டுகளை வாங்கி அணியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஆதரவு தெரிவிக்கப் பலர் தயாராக இருந்தாலும், டீ-ஷர்ட்டுகளை அணியத் தயாராக இல்லை. காரணம் அதன் விலை! ஒரு ஷர்ட்டின் விலை 750 ரூபாய்!


மும்பையிலிருந்து:
ஜெயஸ்ரீ ராஜ்

18 பிரபஞ்சன்

சரியாகப் பத்து மணிக்கெல்லாம், அலுவலகத்தில் தன் இருக்கையில் இருக்க வேண்டும் என்று நினைப்பவன் சண்முகம். அவன் தான் உரிமையாளன். முதலாளி. அவன், எந்தப் பேரேட்டிலும் கையெழுத்துப் போட வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அவனை யாரும் கேள்வியும் கேட்டுவிட முடியாது என்பதும் சரிதான். என்றாலும், இரண்டு காரணங்களுக்காக அவன், வேலை செய்யும் நேரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தான். ஒன்று, பணி செய்கிற சூழ்நிலையில், தான் அந்நியமாக, உயர்வானவனாகச் சக பணியாளர்களால் கருதப்பட்டு விடக் கூடாது என்பது; தான் முதலாளி என்கிற ஒளிவட்டம் தன் தலைக்குப் பின் சுற்றவில்லை என்கிற தெளிவு சண்முகத்துக்கு இருந்தது என்பது.

என்றாலும், அன்று, பதினோரு மணிக்குத்தான் அவனால் அலுவலகம் வர முடிந்தது. முதல்வர், அலுவலகம் புறப்படுகிறார் என்பதற்காக, அந்தச் சாலையில் நூற்றுக்கணக்கான அலுவலர்கள் மறிக்கப்பட்டு நின்றார்கள். சண்முகம், வண்டியைத் திருப்பலாம் என்று நினைக்கையில், அவனுக்குப் பின்னால் நாலு வாகனங்கள் நின்று இருந்தன. முதல்வர் குளியல் அறைக்குச் சென்ற கணத்திலிருந்து, தெருவை மறிக்கிற ஜனநாயகத்தை நொந்து கொண்டு வண்டியில் அமர்ந்திருந்தான். காவலர்கள் பதற்றத்துடன் அங்கும் இங்குமாக





அலைந்தார்கள். அவர்கள் பார்வையில், காக்கிச் சட்டை போடாதவர்கள் எல்லோரும் சமூக விரோதிகள். மனிதர்களை ஒருமையில் அழைத்து, ஓரம் போகச் சொல்லி, சட்டம் ஒழுங்கைக் குலைத்துக் கொண்டிருந்தார்கள், அவர்கள்.

பதற்றம் கூடாது. டென்ஷன் உதவாது. படுவது என்று தொடங்கினால், எத்தனை காரியங்களுக்குத் தான் பதற்றப்படுவது? இதுபோன்ற சம்பவங்களில் தன்னைக் காத்துக் கொள்வதற்கென்றே, வண்டியில் புத்தகம் வைத்திருப்பான் சண்முகம். ராமகிருஷ்ணரின் கதைகள், ஓஷோ சொன்ன ஜென் கதைகள், கிருஷ்ண மூர்த்தியின் கேசட் என்று எதையாவது படித்தோ, கேட்டோ தன்னை மீட்டுக் கொள்வான். கையில் கிடைத்த புத்தகத்தை எடுத்துப் பிரித்தான். தேநீர் அருந்துவது பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் ஓஷோ.

ஜப்பானில், தேநீர் அருந்தும் சடங்கு, கிட்டத்தட்ட ஒரு தெய்வீகச் சடங்கு போலவே நடத்தப்படுகிறது. சுத்தமான இடத்தில், ஓர் அழகான குளம் போன்ற நீர் நிலைக்கு அருகில், அன்னங்கள் நீந்தும் தடாகக் கரையில், மலர்கள் சுற்றி இருக்கும்படியான இடம். அந்த இடத்துக்குக் காலணியும் இல்லாமல் வந்து கூடுகிறார்கள். அது தூய்மையான இடம். தேநீர் தயாராகிறது. அது கொதிக்கும் சப்தம் ஒரு சங்கீதம். அதன் மணம், ஒரு இசை. தயாரிக்கும் பெண்களின் அசைவே, ஒரு நடனம். மன ஓர்மையுடன், அந்தத் தேநீரை, மணிக்கணக்கில் மன அமைதியுடன் அவர்கள் அருந்துகிறார்கள்...

சண்முகம் படிப்பது தடைபட்டது. நிறுத்தப்பட்ட வாகனங்கள். அதன் இயந்திரங்கள், செருமிச் செருமிக் கனன்றன. அலுத்துக் கொண்டன. மேலே அமர்ந்திருந்த இயந்திரங்களும் கூட. இயந்திரங்கள், இயந்திரங்களை இயக்குகின்றன. 'குருடும் குருடும் குருட்டாட்டமாடி'. இருடுபவனைத் தடுத்து நிறுத்தினார்களா, யாராவது? 'தேநீர், தேநீர்தானா? ஜப்பானியர்கள் தேநீர் என்ற பெயரில், அருந்தியது, வாழ்க்கையே அல்லவா?' கென்டி மாதவராவ், சொல்வான்.

"சண்முகம்... எதுக்கும் டீ, காப்பி, ரம், விஸ்கி, சிகரெட் என்று குடித்துச் சீர் அழியிறோம். மரணத்தைக் குடிக்க ஆசைப்படுகிறோமா? வாழ்க்கையை எப்போ குடிக்கிறது?"

"வாழ்க்கை, கோப்பைக்குள் எப்போ வருகிறதோ, அப்போ குடிக்கிறது" என்பான் சண்முகம். முதல்வர் குளித்து முடித்து, உடுத்திக் கொண்டு, மேல் கோட் அணிந்து கொண்டு, கடற்கரைச் சாலைக்கு வருகையில், ஒன்றரை மணிக்குப் பிறகு, சண்முகத்துக்கு விடுதலை

நக்கள் நாளையும் மலரும்

கிடைத்தது.

அலுவலகம் வந்து சேர்ந்தான் சண்முகம். ஏ.சி. இயந்திரத்தை இயக்கிவிட்டு அமர்ந்தான். இண்டர்காமில், 'கெண்டி மாதவராவ் வந்தானா' என்று கேட்டான்.

"வந்துட்டேன்" என்று சொல்லியபடி சண்முகம் முன்வந்து அமர்ந்தான் அவன்.

"விளம்பரம் என்னாச்சு?"

"குஷ்புதான் கிடைச்சுது."

"என் மேனி அழகைப் பராமரிப்பது யானை மார்க் சோப் என்கிற வாசகம்தானா?"

"இல்லை. மாத்திட்டோம் பாஸ். மேல்படி வாசகம், பத்மினி, அஞ்சலிதேவியோட,

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Weekly
3. Name of Printer	:	V. Murali
Nationality	:	Indian
Address	:	D-38, Nelson Chambers, 115, Nelson Manickam Mudaliar Road, Aminjikarai, Chennai - 600 029.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor	:	Seetha Ravi
Nationality	:	Indian
Address	:	'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1997

K. Rajendran
Publisher

போயே போச்சு... இவங்க, 'எனக்கே நான் அழகுன்னு நம்பிக்கை வர வேணாமா. அதுக்குத்தான் யானை.' அப்படின்னு சொல்றாங்க."

"கம்பனிக்காரன் ஒப்புக்கிட்டானா?"

"அவன் குஷ்பு ரசிகனாம். குஷ்பு விளம்பரத்திலே வர்றதே என் புண்ணியம்ங்கறான்."

சண்முகம் சிரித்தான்.

"இன்னி காலையிலே உன்னை நினைச்சேண்டா."

"அட்வான்ஸ் கேட்டேனே, அது ஞாபகம் வந்துச்சா பாஸ்."

"சீ.. பீச் ரோட்லே, மடக்கிட்டான் பங்காளி. சி.எம். கிராஸ் பண்ண இரண்டு மணி ஆச்சு."

"வாழ்க ஜனநாயகம். பாஸ்... அட்வான்ஸ்..."

"அப்போ, ரஜனீஷ் படிச்சேன். தேநீர் பற்றிப் பேசி இருந்தார், பார்..."

"உம்... படிச்சிருக்கேன். தேநீரைக் கூட, வாழ்க்கையா, தவமா, அவங்க நினைக்கிறதால தான் அமெரிக்காக்காரனை ஜெயிக்கிறான், சப்பை மூக்குக்காரன்."

"நம்ம ஆளும்தானே குடிக்கிறான்?"

"குடிக்கிறான்.. அப்போ, கடன்காரனை நினைக்கிறான். சினிமா பார்க்கிறான். அழறான். சாப்பிடறான். பஸ் கிடைக்குமான்னு தவிக்கிறான். பொண்டாட்டியோட சம்சாரம் பண்றான். காதலியை நினைச்சுக்கிறான். இந்தியர்கள், டூ-இன்-ஒன் வாழ்க்கை வாழறான் பாஸ். பாயசத்தை நினைக்கிறது. பழையது சாப்பிடறது... அட்வான்ஸ் கேட்டேனே..."

"இன்னிக்கு தேதி என்ன?"

"பதினொண்ணு. அதுக்குள்ளே சம்பளம் ஆறாயிரம் என்னாச்சுன்னு கேட்பீங்க. நியாயமான கேள்வி. லவ், பாஸ்... லவ். ஒரு பெண், ரொம்ப சிரமத்துக்குப் பின்னாலே, என் அலைவரிசைக்குக் கொண்டு வந்திருக்கேன். அது தொடர்பான செலவுக்குத்தான்."

"காதலுக்குப் பணம் எதுக்கு?"

"பழமொழி உண்டே. முத்தம் கொடுத்துப் பசி ஆற முடியாதே. தினமும், ஒரு பெரிய ஓட்டலுக்குப் போக வேண்டி இருக்கு. அன்பளிப்பு தர வேண்டி இருக்கு. பெர்பியூம் வாங்க வேண்டி இருக்கு."

"இதெல்லாம் காதலுக்கு நிபந்தனையா?"

"நான், நீங்க இல்லை. நான் சராசரி. முனியாண்டிக்குப் போக முடியாது. கருப்பு கருப்பா, சிவந்த கண்களோட எங்களையே முறைக்கிறானுங்க. சின்ன ஓட்டல்லே, ரூம் போட்டு பேச முடியாது. போலீஸ்காரனுக்கு வியர்க்குது. என்ன பண்ண?"

"நீ தப்புப் பண்றே."

"தெரியும். எனக்கும் தெரியும். அவளுக்கும் தெரியும். இது வீடு போய்ச் சேராத வெள்ளாமை. எனக்கு அவகிட்டே சாப்பிடக் கிடைக்குது. அவளுக்கும். அதுக்கு மேல, நாங்க யோசிக்கிறது இல்லை."

"எனக்கு இது புரியலை. மனக ஓரத்துக்குக் கொண்டு செல்லாமே, எப்படி காதல்ல, காதல் செய்ய முடியுது."

"நான் என் வரம்பை மீறட்டுமா?"

"ஒருதரம் மட்டும்."

"சரி. பாஸ். வள்ளி, உங்களை நேசிக்கிறாங்க. அந்தம்மா கல்யாணம் ஆனவங்க. அனுபவம் உள்ளவங்க. ரொம்ப மேன்மையான குணங்கள் உள்ளவங்க. அதை நீங்க இன்னும் புரிஞ்சுக்கலை. உங்களை மாதிரி, வள்ளி மாதிரி ஜனங்க ரொம்ப அபூர்வம்...

உங்க மட்டத்துல இது சாத்தியம்னா, எங்கள் மட்டத்துக்கு இதுவும் சாத்தியம்தான். எங்கேயோ அடிபட்டுட்டோம். இப்போ வலிக்குது. காயம்னா, மருந்து போடத்தான் வேண்டி இருக்கு."

"வள்ளி விஷயம் இருக்கட்டும். நீ கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே?"

"பாஸ்... பணம்?"

"சரி. அந்தரங்கம், மறைக்கப்பட வேண்டியதுதான். பணம் வாங்கிக்கோ... ஒரு விஷயம்... வள்ளி விஷயமாக, ஒரு முடிவுக்கு வந்து விடாதே. எதை விற்றாவது, அந்தப் பெண்ணோட கௌரவம், சமூக மரியாதையைக் காப்பாற்ற வேண்டியது. மறந்துடாதே. என்னை, நீ எப்படியும் கேவலப்படுத்து."

"இல்லை. இரண்டும் இல்லை, பாஸ். நான் கயவன் இல்லை. உங்கள் உப்பைத் தின்பவன். நான் சொன்னதன் நோக்கம், உங்களுக்கு, நீங்கள் அறியாமலேயே ஒரு கோலம் போடப் படுதுங்கறது என்பதைச் சுட்டத்தான். தப்புன்னா மன்னியுங்கள்."

"தப்புதான். எனக்கும் வள்ளிக்கும் அந்த மாதிரி எண்ணம் இல்லை. வள்ளி, வந்திருக்காங்களா?"

"இல்லை. உடம்பு சரி இல்லைன்னு 'லீவ்' போட்டிருக்காங்க."

மாதவராவ் போய்ச் சேர்ந்தான். ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது. வள்ளியையும் அவனையும் குறித்து ஒரு பரவலான பேச்சு அலுவலகத்தில் எழுந்திருக்கிறது. ஏற்கெனவே அங்கு ஏழு பெண்கள் இருக்கிறார்கள். வள்ளியுடன் மட்டும் தான் சேர்த்துப் பேசப் படுகிறோம் என்றால், இது உண்மை இல்லாமல் இருக்குமா? என்று பேசப்படக்கூடும். இது தவறு. இரண்டு மனிதர்கள் பற்றின சமாச்சாரம் இது. குடும்பம், சமூகம் என்கிற அமைப்புகளில் வாழ்கிற இரண்டு ஜீவன்கள். பெண்கள் வெளியே வந்தாலே, இந்தப் பிரச்னை வரும். வரத்தான் செய்யும் என்கிற 'சாபத்துக்கு', தாங்கள் உதாரண புருஷர்கள் ஆகத்தான் வேண்டுமா?

வள்ளி, பால்கனியில் நாற்காலியைக் கொண்டு வந்து போட்டு அமர்ந்து கொண்டாள். பல மாதங்கள், பணியில் இருந்து, தொலைத்த பகல் பொழுதுகளை, அன்று மீட்டுக் கொள்ள வேண்டும் என்கிற முனைப்பு அவளுக்கு ஏற்பட்டது. அர்த்தநாரி, வேலைக்குப் போய் விட்டிருந்தான். வேலைக்காரியோ, பெருக்கி, துவைத்து முடித்து விட்டுக் கிளம்பிப் போய் விட்டிருந்தாள்.

தெருவும், காலனியின் உட்பகுதியும், மிகவும் அமைதி கொண்டிருந்தது. அல்லது அப்படித் தோன்றியது. மரங்கள் காற்றினால், தளும்பிக் கொண்டிருந்தன. மரங்கள் அமைதியை விரும்பினாலும், காற்று அவற்றை அமைதியாக வைத்திருப்பதில்லை. பறவைகள், கூடு விட்டு வெளியேறி இருந்தன போலும். அவற்றின் அரவம் இல்லை. பறவைகளும் 10–5 அலுவலர்களாகி விட்டன போலும். யார் வீட்டுக்கோ ஆட்டோ வந்து, பயங்கரமான கூச்சலுடன் கிளம்பிப் போயிற்று. தபால்காரர், கடிதங்களைச் சுமந்து கொண்டு போய்க் கொண்டிருந்தார். பழவண்டிக்காரி, குலை பதறும்படியாகப் பழம் விற்றுக் கொண்டிருந்தாள். அவள் குரல், அங்கு நிலவிய பொது அமைதியைக் கிழித்துக் காயம் ஏற்படுத்தியது.

வள்ளி எழுந்து உள்ளே வந்து, அஞ்சறை அலமாரி சீசாவில் இருந்து வேர்க்கடலையைத் தட்டில் கொட்டிக் கொண்டு மீண்டும் வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். சாவகாசத்துக்கு என்றே பிறந்த உணவுப் பதார்த்தங்களில் இதுவும் ஒன்று போலும். வேர்க்கடலை, உப்போடு, மிகவும் தோதாக இருந்தது. அந்தச் சமயத்துக்கு. 'உப்பே சாரமற்றுப் போனால்?' என்று எப்போதோ படித்த வரி ஞாபகத்துக்கு வந்தது.

சாரம். சாரம்; எல்லாவற்றுக்கும் வேண்டும். உணவில், உணர்வில் என்று எல்லாவற்றிலும். பல்லைத் துலக்குவது போல பழசாய்ப் போச்சு காமம். கண் இமைப்பது போல இயல்பாய்ப் போச்சு, எல்லாம். சுவாரஸ்யம் அற்ற பகல், இரவு. நேற்று போல இன்று. இன்று போல நாளை. சங்கடம்.

கதவு தட்டப்பட்ட சப்தம் கேட்டது. வேர்க்கடலையை மென்று கொண்டே கதவுத் துவாரம் வழியே பார்த்தாள், சண்முகம். பதற்றமாக இருந்தது.

கதவைத் திறந்தாள்.

"உட்காருங்க."



எலி பிடித்தால் பட்டம்!

பிலிப்பைன்ஸ் நாட்டில் மிக அதிக அளவில் யார் எலிகளைப் பிடிக்கின்றார்களோ, அந்த ஆணுக்கு "Mr. Rat" என்ற பட்டமும், பெண்ணுக்கு "Miss. Rat"என்ற பட்டமும் அளித்து அரசாங்கமே கௌரவிக்கிறது. அந்நாட்டில் எலிகள் ஏராளமாகப் பெருகி, விவசாய விளை பொருள்களை அழித்து வருவதால் இந்த ஏற்பாடு.

தகவல்: வி.பி. காந்தி

அவன், "சிரமப்படுத்தறேனா?" என்றபடி அமர்ந்தான்.

அவள், படுக்கையறைக்குள் சென்று, நைட்டியின் மேல் துண்டு ஒன்றைப் போர்த்திக் கொண்டு திரும்பினாள்.

"என்ன திடீர்னு?" என்றான் வள்ளி.

"உடம்புக்கு என்ன?"

அவன் யோசித்தாள். பிறகு சொன்னாள்.

"ரொம்ப களைப்பா இருந்துச்சு. அதான்."

"அதுக்காக ஒரு மாசம் விடுமுறை போடணுமா?"

அவன் அமைதியாக இருந்தாள். என்ன வகையாகப் பேச்சைக் கொண்டு செல்வது என்று யோசித்தபடி இருந்தாள், வள்ளி.

"வள்ளி. உங்களுக்கென்ன பிரச்னை? அலுவலகச் சூழல் சரியில்லையா?"

"உங்கள் பராமரிப்பில் என்ன பிழை இருக்க முடியும். அதெல்லாம் இல்லை."

"பின் என்ன. தயவுசெய்து வெளிப்படையாகப் பேசுங்கள்."

"எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேச முடியாதே."

"நான் என்னவென்று புரிந்து கொள்ளட்டும்?"

அவர்கள் மத்தியில் மௌனம் என்கிற குறுக்குச் சுவர், ஒவ்வொரு செங்கல்லாக அடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

"உங்களைக் காணாமல் தவித்துப் போனேன்."

"என்னத்துக்குத் தவிக்கணும்?"

"நல்ல பணியாளரை, நல்ல நண்பரை நான் காரணம் இல்லாமல் இழக்கணும்."

அவள் குனிந்தபடி சொன்னாள்.

• "சார். நான் நல்ல பணியாளர் என்றதுக்கு நன்றி. நான் நல்ல நண்பரா? அப்படி இருக்க முடியுமா?"

"ஏன் முடியாது? உங்களைப் போலவே மாதவன். நாங்கள் நண்பர்களாக இருக்க முடிகிறதே."

"ஒருக்கால், நீங்கள் பெண்ணாக இருந்தால், சாத்தியப்பட்டிருக்குமோ?"

"நான் ஆண் என்றது, எந்த வகையில் உங்களைக் குறுக்கிடுது?"

அவள் எழுந்தாள்.

"காப்பி சாப்பிடறீங்களா?"

"நீங்கள் எது கொடுத்தாலும் சரி."

அவன் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டு சமையல் உள்ளுக்குச் சென்று காப்பியுடன் திரும்பினாள். அவன், வாஷ் பேசினில் முகம் கழுவிக் கொண்டு இருந்தான். வள்ளி, அலமாரியைத் திறந்து புதிய டவல் எடுத்து வந்து, அவனிடம் தந்தாள். அவன் அதை வாங்கி முகத்தைத் துடைத்துக் கொண்டான். காப்பியைக் குடித்து முடித்தான்.

"காப்பி ரொம்ப அருமை."

வள்ளி புன்னகை செய்தாள்.

"வள்ளி, நாளைக்கு ஆபீஸ் வருகிறீர்கள்."

"எனக்கு ஒரு வாரமாவது அவகாசம் வேணும், சண்முகம்."

"அதுதான் எதுக்கு? வேர்க்கடலை தின்று பொழுதுபோக்கவா?"

வள்ளி, வெட்கமுடன் சிரித்தாள்.

"எனக்கு உங்களைப் பற்றி யோசிக்க அவகாசம் வேணும்."

"நான் தவறாக நடந்து கொண்டேனா, என்ன?"

"அதுதானே பிரச்னை" என்றாள் வள்ளி தலையைக் குனிந்து கொணடு.

"என்ன சொல்றீங்க? எனக்குப் புரியலை."

"சண்முகம். நான் உங்களை எங்கு இருத்துவது என்பதுதான் எனக்கு பிரச்சை இருக்கு."

"எங்கு இருத்துவது என்றால்?"

"முதலாளி என்றா, நண்பர் என்றா, அந்தத் திரையும் நீங்கிய இடத்திலா, என்பதுதான்."

சண்முகம் அமைதியாக அமர்ந்திருந்தான். அவன் கொந்தளித்துக் கொண்டிருந்தது, தெரிந்தது. அவன் சொன்னான்.

"முதலாளி என்கிற இடத்தில் மாத்திரம், என்னை நீங்கள் வைத்துக் கொண்டால், எனக்கு நிச்சயம் வருத்தமாக இருக்கும் வள்ளி. என்னை நண்பராக நினைத்தால், ரொம்ப சந்தோஷப்படுவேன். வேறு வகையான உறவு வேணாம்."

"நிச்சயமா."

"நிச்சயமா."

வள்ளிக்குத் தோள் சுமை சுழன்று விழுந்தது போல் இருந்தது.

"மாதவனும் நீங்களும் போல, நானும் நீங்களும்."

"அதேதான்."

வள்ளி, மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

"எனக்கு சந்தோஷமா இருக்கு, சண்முகம். எனக்கு ரொம்ப தெளிவா இருக்கு."

சண்முகம் சொன்னான்.

"நாம் சந்தியில் நிற்கிறோம் வள்ளி. கிழக்கும் மேற்கும் சந்திக்கிற சந்திப்பில் நாம். பார்க்கப்படறோம். கண்காணிக்கப்படறோம்."

"உண்மை."

"நாளைக்கு அலுவலகம் வர்றீங்க."

"நிச்சயமா."

அவன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். கதவை ஒட்டி நின்றிருந்த அர்த்தநாரி, சண்முகத்துக்குக் கை நீட்டி, "நான் அர்த்தநாரி. வள்ளியோட கணவன்" என்றான்.

"கிளாட் டு மீட் யூ..." என்றபடி சண்முகம் கைகுலுக்கினான்.

(தொடரும்)

வரவர வயசு குறைகிறதோ!

✉ பாகிஸ்தான் மக்கள் பெனாசிரையும், இம்ரானையும் மறந்துவிட்டு நவாஸ் ஷெரீஃபுக்கு வாக்களித்ததன் மூலம், பெரும் ஜனநாயக மாற்றத்தை அவரிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள் என்பது நிரூபணமாகிறது. ஷெரீஃபின் ஆதரவாளர்கள் அவரது வெற்றியை நிஜ துப்பாக்கி வெடித்துக் கொண்டாடியது ஒருபுறம் இருந்தாலும், இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்ற அவரது அழைப்பை இந்தியாவும் உதாசீனம் செய்து விடக் கூடாது. பேச்சுவார்த்தை மூலம் காணும் தீர்வுதான் நிரந்தரத் தீர்வாக இருக்கும்.
சென்னை - 15, ந. இரவிச்சந்திரன்.

✉ 'வாக்குறுதியைப் பறக்க விட்ட ராமதாஸ்!' என்ற தலையங்கம் மூலம் அவரை நன்கு அடையாளம் காட்டி, முதல்வருக்கு அறிவுரையும், வேண்டுகோளும் கூறியிருப்பது பாராட்டுக்குரியது.
மதுரை-16, பி.எம். வன்னி.

✉ ஈழத் தமிழர்கள் துன்பப்படுவதை, கொல்லப்படுவதைத் தடுக்க பக்கத்து நாடான இந்தியாவும், தமிழ்நாடும் இயன்றவாறெல்லாம் முயன்று ஸ்ரீலங்காவுக்கு அறிவுரை சொல்ல வேண்டும் என்பதுதான் டாக்டர் இராமதாஸ் அவர்கள் கருத்து. கலைஞரையும் டாக்டரையும் பிரித்துப் பார்க்க வேண்டாம், 'தமிழன் வாழ்ந்தால் தட்டிக் கொடு, தமிழன் வீழ்ந்தால் முட்டுக் கொடு' என்பதுதான் டாக்டர் கொள்கை.
மறைமலைநகர், க. மணி அரசு.

✉ தமிழகத்தில் தொடர் படுகொலைகள் ஒருபுறம்; புலிகளை பகிரங்கமாக ஆதரிக்கும் பா.ம. கட்சி ஒருபுறம்; இக்கட்டான இத்தகைய சூழ்நிலையில் மிகுந்த பிரயாசைப்பட்டு புதுக்கோட்டையில் வெற்றி பெற்றுள்ள தி.மு.க.வை பொருட்செறிவோடு படம் பிடித்துக்காட்டிய கார்ட்டூன் அசத்தல்!
கும்பகோணம்-1, கே.என். பாலகிருஷ்ணன்.

✉ 'ஜெ. உடம்புக்கு என்ன?' ஒரு பக்கச் செய்தியின் மூலம் முதுகுத்தண்டு மூட்டுவாதம் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது.
சென்னை-78, சி. பூங்கோதை.

ரூ.20/- பரிசு பெறும் கடிதம்

✉ தராசு பதில்களில், "கருணாநிதி போன்றவர்கள் வாக்குச்சாவடிக்குப் போய்ப் படம் எடுத்துக் கொள்ளும்போது இதர வாக்காளர்களுக்கு இடைஞ்சலாகவே முடியக்கூடும்" என்று எழுதி இருக்கிறீர்கள்! ஆனால், தேர்தல் அன்று வாக்குச் சாவடிக்கு வந்துதானே வோட்டுப் போடுகிறார்கள்; அப்போது ஒரு இடைஞ்சலும் இல்லையே!
சீர்காழி, ஆர். ராஜதுரை.

✉ சமீபத்தில் தேன்நிலவு ஸ்பெஷல்; இப்ப காதலர்கள் ஸ்பெஷல்! கல்கிக்கு வர வர வயசு குறைந்து கொண்டே வருகிறதோ! இளமைத் துள்ளல் தெரிகிறது. கீப் இட் அப்!
தூத்துக்குடி-1, சிவராம சுப்பிரமணியன்.


✉ மிருதுபாஷிணியின் 'மனசும் மனசும்' சிறுகதை தற்காலக் காதலின் போலித் தன்மையை நாசூக்காக சுட்டிக் காட்டுகிறது. 'காதலிப்பதற்கு மனசு மட்டும் போதாது. அழகும் வசதியும் கூட வேண்டும்' என்று புவனா சொல்வது யதார்த்தமான உண்மை.
சென்னை-61, எஸ். பாலாஜி.

✉ வாசகர்கள் எழுதிய 'நேரத்தின் அருமையை உணர்ந்தேன்' என்ற பகுதியில் எழுதிய துணுக்குகளே எனக்கு நேரத்தின் அருமையைப் புரிய வைத்து விட்டன. அனைவருக்கும் எனது பாராட்டுகளும், நன்றிகளும்.
ஏறையூர்பாளையம், பெ. அமல்ராஜ்.

✉ உயிர்த்தோழன் கணேசன் பற்றி கவிஞர் எஸ். வைத்தீஸ்வரன் எழுதியதைப் படித்தேன். நட்பின் ஆழத்தைப் புரியவைத்த அவருக்கு நன்றி.
சேத்துப்பட்டு, இராம. பார்த்திபன்.

✉ கர்நாடக கச்சேரி என்றால் 'லொட... லொட...' என்று பேசும் கல்யாண வீட்டில், 'சினிமாப் பாடலை' கச்சேரியாகப் பாடினால் அமைதியாகக் கேட்பர். 'கல்யாணக் கச்சேரி மகா மோசம்' என்ற சஞ்சய் சுப்பிரமணியனின் வாக்கு உண்மையான வாக்கு.
திருச்சி-17, உஷா முத்துராமன்.

வட்ட மேஜை:



• சிக்கல் குமார்!

சரத்குமார் இல்லறத்தில் ஏன் குழப்பம்?



• பகல் கனவு!



• சினிமா தோற்றம்!



• மன்னிக்க மு

● பரிமளாதேவி,
கோவை – 2.

? செய்வது தவறு எனத் தெரிந்தும் சில பேர் தவறு செய்கிறார்களே? ஏன்...?

! ஆணவம்தான்! 'கைதிகளின் விசாரணை' என்ற பெயரில் அவர்கள் கண்களில் தலைவலி களிம்பையும் மிளகாய்ப் பொடியையும் வைத்து அரைக்கச் செய்தது இந்த ஆணவம் தான்! குஜராத்தில் இந்தக் கொடூரத்தைச் செய்த் போலீஸ் அதிகாரிக்கு அது தவறு என்று தெரியாதா என்ன...?

● ஜெ. கண்ணன், சென்னை – 101. ❐

? பிஎச்.டி. பட்டத்தில் மேல்படிப்புக்காக ஒருவர் ரஜினியின் திரைப்பட வசனங்களைத் தேர்ந்தெடுத்திருப்பது குறித்து...?

! தமிழ்த் திரைப்பட வரலாற்றில் ரஜினிக்குத் தனியிடம் உண்டு. அது பெருமை மிக்கதா என்பது சர்ச்சைக்குரியது. அந்த வகையில் வரலாற்று ரீதியாக அவர் பட வசனங்களை ஆய்வு செய்வது தவறல்ல... அவை மக்களின் மேல் என்ன பாதிப்பு ஏற்படுத்தின என்று தெரிந்து கொள்வதும் அவசியம். ஆனால், ஆய்வு விருப்பு வெறுப்பின்றி உண்மையை நாடுவதாக இருக்க வேண்டும்.

● புளியரை கணேசன், சென்னை – 30.

? கோவில் நகைகளைக் கொள்ளையடிப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! மாநிலத்தையே கொள்ளையடித்தவர்களைப் பார்த்தவர்கள் நாம்... இதென்ன ஜுஜுபி!

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? 'தபால் துறையில் புரட்சிகரமான மாறுதல் தேவை' என்று சி. சுப்ரமணியம் கூறுகிறாரே... பகல் கனவு பலன் தருமா?

! தபால் துறையில் மட்டுமா...? எத்தனையோ துறைகளில் மாறுதல் தேவை. அதை உணர்ந்திருப்பதே பகல் கனவு என்று ஒதுக்கக் கூடாது. கனவு மெய்ப்பட வேண்டுமானால் அது காணப்பட வேண்டும்தானே!

● தெரிசை ஐயப்பன், திருப்பூர்.

? 'பீமனைப்' போல் பலசாலியாக இருக்க வேண்டுமா? அல்லது பீஷ்மரைப் போல் தியாகியாக இருக்க வேண்டுமா?

! எப்படியிருந்தாலும் சரி... சத்தியமாய் சகுனியைப் போல் சதிகாரனாய் மட்டும் இருக்கக் கூடாது.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? பூலான் தேவியின் பெயர் நோபல் பரிசுத் தேர்வுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது குறித்து...?

! 'பாண்டிட் குவீன்' படம் பார்த்து, அதன் அடிப்படையில், செய்யப்பட்ட நியமனம். நிஜ இமேஜ் வேறு; சினிமாவில் கிடைக்கிற இமேஜ் வேறு என்பதைத் தேர்வுக் குழு புரிந்து கொண்டால் நோபல் பரிசின் தரம் தாழ்ந்து போகாது.

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? பஞ்சாப் மாநிலத்தில் அமைச்சர்களுக்கு சம்பளம் கிடையாது என்று பாதல் கூறியிருப்பது சரியா...?

! சரியே இல்லை. சம்பளம் இல்லாமல் வேலை செய்வது, ஒரு ரூபாய் சம்பளத்துக்கு வேலை செய்வது போன்றவைதான் கிம்பளத்தின் ஆரம்பம்.

● ஜோ. ஜெயக்குமார்,
நாட்டரசன்கோட்டை.


? ஹெக்டே தம் கட்சிக்கு 'லோக் சக்தி' என்று பெயர் சூட்டியிருக்கிறாரே?

! லோக் சக்தியாக இல்லாது போனாலும்

நீங்கள் கேட்டவை — தராசு



• சம்பளத் தியாகம்!



• சக்தியில்லை...



• செருப்பும் நெருப்பும்





• ஆய்வு அவசியமா?

'லோக்கல் சக்தி'யாகவாவது உருவாகும் என்று எதிர்பார்ப்போம்.

● என். சண்முகம், திருவண்ணாமலை.

? நடிகர் சரத்குமாரின் இல்லற வாழ்வில் ஏன் இந்தக் குழப்பம்?

! எத்தனையோ பேர் வாழ்க்கையில் இப்படிப் பட்ட பிரச்னைகள் எழுகின்றன. சரத்குமார் என்பதால் அதற்கு 'பப்ளிசிடி' கிடைக்கிறது — அவ்வளவுதான்.

● எஸ். ராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.

? சர்க்கரை விலை உயர்வு கரிக்கிறதே?

! கூடவே மின் கட்டணமும் 'ஷாக்' அடிக் கிறதே!

● இ. ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.

? சென்னை நகரில் எழுபத்தைந்தாயிரம் தெருவோரச் சிறார்கள் இருக்கிறார் களாமே...?

! மிகவும் கவலைக்குரிய விஷயமிது. நிலையற்ற வாழ்க்கை அவர்களைச் சமூக விரோதிகளாக மாற்றும் பேரபாயம் இருக்கிறது!

● எஸ். வைத்தியநாதன், மதுரை — 14.

? 'புதுக்கோட்டை இடைத்தேர்தல் பிர சாரத்துக்கு ஜெயலலிதா மட்டும் போயி ருந்தால், அ.தி.மு.க. வேட்பாளர் நிச்சயமாக வெற்றி பெற்றிருப்பார்' என்று அக்கட்சித் தொண்டர்கள் இப்போது சொல்கிறார்களே?

! தேர்தல் முடிந்த பிறகு எப்படியும் பேசலாம். ஜெயலலிதா போகாததால்தான் இவ்வளவு வோட்டு கிடைத்தது; போயிருந்தால் குறைந்து போயிருக்கும் என்று கூட வாதாடலாம்... யார் தடுக்க முடியும்?

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர்.

? 'நான் நெருப்பல்ல... தமிழக மக்களுக்கு செருப்பாக இருப்பேன்' என்கிறாரே கலைஞர்?

! நெருப்பாகவும் இருக்க வேண்டாம்; செருப்பாகவும் இருக்க வேண்டாம். பொறுப் பான முதல்வராக இருந்தாலே போதும்.

● ஆர். முருகானந்தம், எஸ். மாரியூர்.

? வருமானவரி கட்டுவோருக்கு அரசு சில சலுகைகளை அறிவித்து நடைமுறைப்படுத் தினால் வரி கட்டுவோரின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பிருக்கிறதா?

! சலுகைகள் கிடக்கட்டும்! அதிகப்படியாகச் செலுத்திய வரியை ஒரு வருடம் கழித்துத் திருப்பித் தராமல் உடனடியாய் அனுப்பி னாலே போதாதா!

● த. சங்கர், திண்டுக்கல் — 1.

? இந்தியா — தென்னாப்பிரிக்கா இறுதிப் போட்டி பற்றி...?

! தென்னாப்பிரிக்கா ஜெயித்ததில் வருத்தம் எதுவுமில்லை. எனினும், முதல் நாள் ஆட் டத்தில் மோங்கியா ஓடாமலே நின்று அசாரை 'அவுட்' ஆக்கியது மன்னிக்க முடியாத விஷ யம். ஆக, நாட்டுக்காக ஆடுகிற மனோநிலை நம்மவரிடம் இல்லை. எல்லோரும் அவரவர் சுயவிளம்பரத்துக்காகவும் பணத்துக்காகவும் ஆடுகிறார்கள். இந்த மனோபாவத்துடன் எந்தத் துறையினர் இருந்தாலும் அந்தத் துறை உருப்படாது.

● வி. சத்தியப்ரியன், சென்னை - 15.

? கல்லூரிகளில் சாதிப் பெயர் சூட்டக் கூடாது என கல்வி அமைச்சர் அன்பழகன் கூறியுள்ளது பற்றி...?

! அரசியலிலிருந்து ஜாதி நீங்காத வரை வாழ்க்கையின் இதர நிலைகளிலிருந்து அதை நீக்க முடியாது என்பது இன்றைய நிலை. அரசியல்வாதிகளே வழி காட்டலாமே...

● ஆர். ராஜா சாஹிப், சென்னை - 106.

? 'என்னைக் கைது செய்து பார்!' என்கிறாரே பால்தாக் கரே...?

! இப்படி ஆணவமாகப் பேசுவதில் தாக்கரே முன் னோடியல்ல. அந்த முன் னோடிகள் பிறகு என்ன ஆனார்கள் என்று தாக்கரே யோசிக்காவிட்டாலும் நாம் சிந்திக்கலாம்.

□ ரூ. 25 பரிசு பெறுபவர் : ஜெ. கண்ணன், 246, பதினொன்றாம் தெரு, அண்ணாநகர் மேற்கு, சென்னை — 600 101.

புத்தகன்

இன்னமும் அழுது கொண்டே யிருக்கும் அம்மாவைப் பார்க்க சங்கடமாக இருக்கிறது.

இத்தாலிய கலைவெறியன் 'பொக்சியானி' சாயலில் - பாதி முன் வழுக்கையில் - படமான அப்பா.

ஓவிய ரசனையும் - ஈடுபாடும் காரணமாய் அப்பா அப்படித் தெரிகிறாரா? தெரிய வில்லை.

சன்னமான மூங்கில் குச்சியில், பழைய கிழிசல் துணி கொண்டு நாடாவில் கட்டி, தன் புத்தக அலமாரியை தூசு தட்டுவதும் - யாருக் கேனும் தன் அனுமதி பெறாமல் புத்தகங் களைத் தரும் அம்மாவிடம் எரிச்சல்படு வதும் நிறையத் தடவை பார்த்த ஞாபக மிருக்கிறது.

"அப்பாவுக்குக் குடுக்க வேண்டியதெல்லாம் குடுத்துட்டாங்கள்ள?"

அம்மாவின் பார்வை இன்னமும் படத்தை நோக்கியே இருந்தது.

இந்த வாரத்தில் அம்மா சாப்பிட்டது என் னவோ டீயும் காப்பியும்தான். வேறு ஆகாரம் எதையும் மறுத்து ஒதுக்கி விட்டாள்.

அப்பா மீது வைத்திருக்கிற அன்பு - நிரந் தரத் துயரமாகி, முகமெங்கும் சூனியப் பட் டிருக்கிறது.

இன்னமும் அரசு நடைமுறைகளில் இருந்து வரும் பணிக்கொடை - குடும்ப நல நிதி- குடும்ப ஓய்வூதி யம் - சிறப்பு வருங்கால வைப்பு நிதி-



பயன்கள் கிடைக்கப் பெற வேண்டும். எல்லாம் 'கோகி' சொல்ல, தெரிந்தது.

"நெஞ்சுவலின்னாரு... தண்ணி மொண்டு வர்றதுக்குள்ளார..."

பூனாவிலிருந்து வந்ததும் துயரம் உதைக்க, செவியில் அம்மா வார்த்த வார்த்தையே இது தான்.

'ஸ்டார்ட் இம்மீடியட்லி'-ல் என்ன புரியும்?

எதையெதையோ நினைத்து மிரண்டு வந்தவனுக்கு அப்பாவின் மரணம் சொல்ல முடியாத வார்த்தைகளை - சோகத்தில் சுமந்து நிற்கும் பொழுதாய் விரிகிறது.

"நல்லாப்படி, என்னென்ன இனுக இருக்கோ அத்தினியும் தெரிஞ்சுக்கோ - ஒரு மகத்தான கலைஞனா உம் பேரு எங்கியும் தெரியணும். என்னையப் பாரு, ஜனவரி எப்ப வரும் - ஜூலை எப்ப வரும், அகவிலைப் படி எப்ப குடுப்பான், எப்ப அக்டோபர் 1 வரும் 'இன்கிரிமெண்ட்' குடுப்பான்னு அலைஞ்சே மண்ட முடி யெல்லாம் கொட்டிடுச்சி. பிரம்மாண்டா ஒரு 'ஆர்ட்-ஷோ' நடத்தணும். அதிலயே நீ எங்கியோ போய்டணும்... புரியுதா?"


மூட்டைக் கட்டி - நான்கு வருஷத் திற்கு முந்தி, பூனாவிற்கு ரயிலேற்றியபோது, உணர்வு பொங்க அப்பா சொன்னது இதுதான்.

ஒருவழியாக - அவர் எதிர்பார்த்தது மாதிரியே, முழுமையாய் இல்லாவிட்டாலும்- திருப்திபடும் அளவு தெளிவாய், ஓவியனாய் வந்து நிற்பதில், கடமையையும் மீறி - அப்பாவின் கனவு மெய்ப்பட்டிருக்கிறது.

அறை முழுக்க வண்ணத்தில் சிலிர்த்திருக்கும், சில நேரம் என்னோடு மௌனம் பேசும் சித்திரங்கள்... கண்களில் விரிகிறது.

போன வருஷம் - தீபாவளி பத்து நாள் முன்பு - அவசரகதியாய் தற்செயல் விடுப்பு எடுத்துக் கொண்டு பூனா வந்து, சென்னை திரும்பிய அரும்பு மனிதர் அப்பாவாகத்தான் இருக்கக்கூடும்.

"டேய் கிளம்பு... முன்னமே கடுதாசி போட் டிருக்கில்ல? நீ இல்லாம அங்க என்ன தீபா வளி வாழுது... சரி... 'ரூம்'ம கொஞ்சம் சுத்தமா வச்சிக்கக் கூடாது? அங்க பாரு புக்செல்லாம் ஒரே தூசி... அடுக்கி வை, அடுக்கி வைன்னா



உனக்குத் தெரிய மாட்டேங்குது... சரி போய் குளிச்சிட்டு வா..."

குளித்து விட்டு ஹாலுக்குத் திரும்புவதற்குள் புத்தகங்கள் - சார்ட்டுகள் - ஸ்கெட்ச் - வண்ணக் குழம்புகள் - விதவிதமாய் - வெகு நேர்த்தியாய் பிரித்து அடுக்கி விட்டார்.

கூடவே அப்பா இருக்கக் கூடாதா?

மனசு நினைத்தாலும் - அவர் இருக்க வாய்ப்பில்லை என்பதையும் மீறி 'காயத்ரி' மனசில் சொடுக்கொடிக்கிறான். மூன்று வருஷ ஓவிய கலைஞி. தோழி... சொல்ல முடியாத அவஸ்தைகளோடு என்னைத் திணறடிப்பவன்.

"இப்படி உக்காருங்க தம்பி"

அப்பாவின் - அலுவலக உதவியாளர் காட்டிய மர ஸ்டூலில் உட்கார்ந்தேன்.

அம்மா, கூட வரப் பிரியப்படவில்லை.

"உங்க ஃபாதர் நல்ல மனுஷன். என்ன கலகலன்னு பேசுவாரு. வேலை வாங்கற விதமே தனி!"

இளநிலை உதவியாளர் கண்ணுச்சாமி என்கிற சுய அறிமுகத்தோடு வந்தார் - அப்பாவின் மீது கொண்ட அபிப்ராயம் பிடித்தது.

'காயத்ரி' அருகில் இல்லை. டைரியில் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தில் சிரித்த அப்பாவைத்தான் 'காயத்ரி' பார்த்திருக்கிறான். முரட்டு மீசையைப் பார்த்து கொஞ்சம் மிரண்டிருக்கிறான்.

"தம்பி, சூப்ரெண்ட் கூப்பிடறார்"

நினைவை உதறிவிட்டு எழுந்து போனேன். கோ-ஆப்டெக்ஸ் போர்வை விரிந்த மேஜை. சோடாபுட்டி கண்ணாடி அவரின் அரசு அனுபவத்தைச் சொன்னது.

"செக் ரெடியா இருக்கு. நேத்து மூணு மணிக்கே வாங்கிட்டு வந்தாச்சு. அம்மா கையெழுத்துப் போட்ட 'பே ஸ்லிப்' கொண்டு வந்தீங்களா?"

'காலிக்கோ' டைரியிலிருந்து 'பே ஸ்லிப்பை' எடுத்து நீட்டினேன்.

செக்கை கை நீட்டிப் பெறவே என்னவோ போலிருந்தது...

அப்பாவின் விலை... குடும்ப நல நிதி பணிக் கொடை - எல்லாம் சேர்த்து இரண்டே கால் லட்சம்.

அப்பா மொத்தமாய் பார்க்காத பணம்.

"சரி... அப்புறம்...? கம்பாஷினேட் கிரவுண்ஸ்ல அப்பாயின்மெண்ட் கேட்டு விண்ணப்பிக்கிறீங்களா? அம்மாகிட்ட சொல்லியிருக்கேன்"



உங்கள் வாழ்க்கைத்துணை வீ.டி., எஸ்.டி.டி. நோய்களிலிருந்து குணமாக்கப்படவில்லையெனில், உங்கள் நிலையும் அதுதான்.

மேகநோய் (வீ.டி.) அல்லது பால்வினை (எஸ்.டி.டி.) நோய்களுக்கான அறிகுறிகளில் ஏதேனும் உங்களுக்கு இருப்பதாக நீங்கள் சந்தேகித்தாலோ, அந்நோய்களைப் பற்றி கூடுதல் விபரங்களை அறிய விரும்பினாலோ உங்கள் மருத்துவரை உடனடியாக சந்தியுங்கள். உங்கள் வாழ்க்கைத் துணையின் மீது நீங்கள் அதிக அக்கறை கொண்டிருப்பதால், அவர்களும் குணமாக்கப்பட்டதை உறுதிசெய்து கொள்வதும் மிக முக்கியமாகும். அவர்களிடமிருந்து நோய்க் கிருமிகளை மீண்டும் நீங்கள் பெறுவதிலிருந்து அது உங்களை பாதுகாக்கும். எனவே நீங்கள் மருத்துவரிடம் செல்லும்போது, உங்கள் வாழ்க்கைத் துணையையும் அழைத்துச் செல்லுங்கள்.

நினைவிருக்கட்டும். வீ.டி. நோய் இல்லாத ஒரு மனிதரைக் காட்டிலும், வீ.டி. நோய் கொண்டவர் எய்ட்ஸ் நோய்க்கிருமிகளால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு 10 மடங்கு அதிகமாக உள்ளது. எனவே அதற்கு பலியாகாதீர்கள்.

எய்ட்ஸ் நோய்க்கிருமிகளை நீங்கள் பெறுவதற்கான அபாயத்தை வீ.டி./ எஸ்.டி.டி. அதிகரிக்கிறது.

வீ.டி./எஸ்.டி.டி. மற்றும் எய்ட்ஸிலிருந்து ஆணுறைகள் உங்களை பாதுகாக்கும்.

மேலும் விவரங்களுக்கு:
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை 600 008.
போன் : 8255261 / 8255467 / 8254917
24 மணிநேரமும் இயங்கும் ஹாட் லைன்:
8256882 / 8256864



கல்கி - பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

வாரம் ஒரு சவரன்!

போட்டி-8

எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது ஏதாவதொரு காட்சியைப் பார்த்து உங்களை மறந்து மயங்கி நின்றிருப்பீர்கள் அல்லவா! அந்தக் காட்சியை 'என்னை மறந்தேன்' என்ற தலைப்பில் கீழுள்ள கூப்பனில் எழுதியனுப்புங்கள். சிறந்தவை பிரசுரமாவதோடு மிகச் சிறந்த காட்சியை எழுதியவருக்கு ஒரு சவரன் பரிசு! கடைசி தேதி: 10.3.97. உறையின் மேல் 'சவரன் போட்டி - 8' என்று மறவாமல் குறிப்பிடுங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

சவரன் போட்டி - 8

என்னை மறந்தேன்:

பெயர்:..

முகவரி:..

....

....

"யோசனை பண்ணிச் சொல்றேன் சார் - அப்புறம் அப்பாவோட 'வீட்' எங்க இருக்கு?"

"ஏன்...?"

"இல்ல கொஞ்சம் அதப் பாக்கணும்"

"ஏ 3 சார்... கொஞ்சம் போயி... இவுங்க ஃபாதர் வீட்ட காமிச்சிட்டு வாங்களேன். தம்பி, இன்னும் உங்க ஃபாதர் வீட்ட 'சார்ஜ்' எடுக்க ஆள் வரலே... போய்ப் பாருங்க"

மாடிப்படிகள் ஏறிப் போக வேண்டியிருந்தது. மரப்படிகள் 'பொத்-பொத்'தென, ஒலி எழுப்பின. சுவரில் - 'பண்டகக் கணக்கு, சேர் - 15. ரிவால்விங் சேர் - 2. ஸ்கிரைபர் - 1. ஜீரோ கிராஃபிக் மிஷின் 1. இப்படி சிவப்பில் எண்ணிக்கையும் - ஊதாவில் எழுத்துக்களும் தெரிந்தன.

பூட்டைத் திறந்து. அறைக்கதவைத் திறக்க - தூசு வாடை.

"இருங்க... இப்பப் போக வாணாம். ரூம் பூட்டி ஒரு வாரமாச்சு. உள்ளார ஸ்டேஷனரி, இரும்புச் சங்கிலி, கிராஸ் டாப் - குத்தூசி- எல்லாம் கெடக்கு. சின்னச் சின்ன பூச்சியெல்லாம் பறக்கும்."

வலது கையால் காற்றை விரட்டினான்.

உள்ளே போய் விளக்கைப் போட்டு சன்னலைத் திறந்தான். இப்போது வாசலில் தூசு வாடை குறைந்தது போலிருந்தது.

"இதுதாம்பா உங்க ஃபாதர் வீட்..."

மயக்கம் வருவது போன்றிருந்தது.

காரை பெயர்ந்து - மழைப் பாசி பிடித்த தரைச்சுவர். துரு ஏறிக் கிடக்கும் சங்கிலிகள். வளைந்து நெளிந்து சீராய் அமுக்கப்படாத நில அளவு ஊசிகள். பாதத்தில் நழுவுகிற கறையான்கள்.

கண்களில் கண்ணீர் முட்டிற்று.

சட்டையை அவிழ்க்கத் தொடங்கினேன்.

"சார், பத்து நிமிஷம் வெளிய நில்லுங்க... இதையெல்லாம் ஒழுங்கா அடுக்கிட்டு வந்துர்றேன்"

அவன் - என்னை ஒரு பைத்தியக்காரனைப் பார்ப்பது போலிருந்தது. அவன் பார்வையைப் பொருட்படுத்தாமல் தூசு தட்டி நேர்த்தியாய் அடுக்கத் தொடங்கினேன்.

'பேண்ட்' பாக்கெட்டில் 'செக்' கனத்தது.

தயாளு போட்ட நாடகம்!

கலைஞர் : என்ன தயாளு, ஒரு மாதிரி இருக்கே?

தயாளு : நீங்கதான் ரெண்டு மாதிரி பேச றீங்களே, அதான் நான் ஒருமாதிரி இருக்கேன்.

கலைஞர் : அப்படியென்ன பேசிட்டேன்?

தயாளு : முதல்ல இரண்டு மாசத்துக்கு ஐம்பது யூனிட் பயன்படுத்தறவங்களுக்கு மின் கட்டண உயர்வு கிடையாதுன்னீங்க. இப்ப ஒரு மாசத்துக்கு ஐம்பது யூனிட் பயன்படுத்தினா மின்கட்டண உயர்வு இல்லேன்றீங்க...

கலைஞர் : அதனால் என்ன? சலுகை தந்தா சந்தோஷப்படவேண்டியதுதானே?

தயாளு : அது சரி, இந்தச் சலுகையை அனுபவிக்க எத்தனை பாடுபட வேண்டி யிருக்கு! நேற்று ராத்திரி பூரா தூக்கமே இல்லை யாது!

கலைஞர் : ஏன்? ஏன்?

தயாளு : மின்சாரத்தை மிச்சப்படுத்த ஃபேனை நிறுத்திட்டேன், ஒரே கொசுக்கடி!

கலைஞர் : அடடா! நல்லவேளை, இன் னும் கோடை ஆரம்பிக்கலை; அப்ப கொசுக் கடியோட வியர்த்துக் கொட்டுவதையும் சகிச் சுக்கணும் பாரு! அந்த மட்டும் சந்தோஷப்படு!

தயாளு : அது சரி, இந்த கொசுத் தொல் லைக்கு ஏதோ பயோஸைடு பயன்படுத்தறாங் களாமே... ஒரு பலனும் காணுமே?

கலைஞர் : அதெல்லாம் மாநகராட்சி விவகாரம், ஸ்டாலினைக் கேளு.

தயாளு : அவனை எங்க கேட்கிறது; அவன்தான் இங்க கூட்டம் தாங்கலைன்னு தனியே பிய்ச்சுக்கிட்டுப் போயிட்டானே!

கலைஞர் : அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே? ஃபோன் போட்டுக் கேளேன்! நல்லவேளை ஃபோன் கட்டணம் இன்னும் உயரலை.

தயாளு : அதுக்குள்ளே அவ சரப்படாதீங்க. உங்க கூட்டணி அமைச்சர் சிதம்பரம் பட் ஜெட்டை சமர்ப்பிக்கிற வரை காத்திருந்து பாருங்க. டெலி ஃபோன் கட்டணம் உயர லேன்னா அப்புறம் அதுக்கு மட் டும் தனியா கொஞ்சமா சந் தோஷப்பட்டு வைக்கலாம்.

கலைஞர் : சரி சரி, நேர மாவுது; வெந்நீர் ரெடியா? குளிச்சிட்டு வரேன்.

தயாளு : வெந்நீராவது ஒண்ணாவது? கரண்ட் மிச்சமாகட்டும்னு காலைல ஹீட்டர் போடவேயில்லை.

கலைஞர் : ஐயய்யோ! என் வழுக்கைத் தலையில் பச்சைத் தண்ணி கொட்டிக்கிட்டா ஜலதோஷம் பிடிக்குமே... சரி, சரி, உடம்புக்கு மட்டும் குளிச்சிட்டு வந்துடறேன்.

தயாளு : இந்தாங்க ரேஸர், பிளேடு. ஞாபக மறதியா எலக்டிரிக் ஷேவரை பயன்படுத்திடப் போறீங்க. அது தினம் நாலு யூனிட்டாவது முழுங்குது.

கலைஞர் : இது வேற தொல்லையா? நான் இன்னிக்கு ஷேவே பண்ணிக்கலை! சீக்கிரமா குளிச்சிட்டு வந்துடறேன். இட்டிலி எடுத்துத் தயாரா வை.

தயாளு : இட்டிலியாவது, தோசையாவது? கிரைண்டரைப் பயன்படுத்தவே வேண் டாம்னு வைச்சாச்சு!

கலைஞர் (கொஞ்சம் அலுப்பாக) : என்ன தயாளு இது? காலை டிபனுக்கு இட்டிலி சாப் பிடாம எப்படி? அதுக்கு எவ்வளவு கரண்ட் செலவாகிடப் போவுது?

தயாளு : நீங்கதான் ஃபைல் பார்க்கறேன் பேர்வழின்னு ராத்திரி பதினோரு மணி வரை பெட்ரூம்ல லைட்டைப் போட்டுக்கிட்டு இருக் கீங்க; போதாக்குறைக்கு ஏஸி வேற. அதான், கிரைண்டரிலாவது மின்சாரம் மிச்சப் படுத்தலாமேன்னு...

கலைஞர் (குளித்து விட்டு வந்ததும்) : டிபன்தான் கிடையாது! காப்பி யாவது தருவாயோ இல்லியோ?


தயாளு : காப்பிக் கொட்டை கிரைண்டர், காப்பி பெர்க்கொலேட்டர் எல்லாம் எவ்வளவு கரண்ட் இழுக்கும் தெரியுமா? வேணும்னா புரு வாங்கிட்டு வாங்க; கரைச்சுத் தரேன்.

கலைஞர் : ஐயய்ய... இன்ஸ்டண்ட் காப் பியே எனக்குப் பிடிக்காதும்மா.

தயாளு : அதுக்கு என்ன பண்றது? நான் கூடத்தான் நேத்து சன் டீவில சினிமா பார்க் கணும்னு ஆசைப்பட்டேன். மின் கட்டண உயர்வு ஞாபகம் வந்ததோ இல்லியோ டக் குன்னு ஆஃப் பண்ணிட்டேன்.

கலைஞர் : த்சொ த்சொ! இருந்தாலும் உன்னோட சிக்கன புத்தி இந்த அளவுக்குப் போக வேண்டாம்!

தயாளு : பேச மாட்டீங்களா, பின்னே!



செம்பியன்

உங்களுக்கென்ன, ஐய முன்னு கோட்டையிலே போய் ஆபீஸ் நடத்தறேன்னு சாயந்திரம் வரை ஏஸி ரூம்ல உட்கார்ந்துருவீங்க. நான்தானே இங்க வெய்யில்ல ஃபேன் கூட இல்லாம வேகணும்.

கலைஞர் : ஹூம், பேசாம திருவாரூர் பக்கம் அஞ்சு ஏக்கர் நிலம் வாங்கி உழுதுட்டிருக்கலாம். இலவச மின்சாரமாவது கிடைக்கும்.

தயாளு : உங்களோட அமைச்சர் பேசறதைப் பார்த்தா அதுக்கும்தான் ஆபத்து வந்துடும் போலிருக்கே!

கலைஞர் : அதெல்லாம் அரசியல் விவகாரம். இன்னிக்கு ரத்தும்போம்; நாளைக்கு உண்டும்போம்; அப்புறம் மறு பரிசிலனைன்னு வோம்; பிறகு பேச்சு வார்த்தைன்னு பேசுவோம்!

தயாளு : ஆரம்பத்துல ஒரு மாதிரின்னீங்க, அப்புறம் ரெண்டு மாதிரி ஆச்சு; இப்ப நாலு மாதிரி அரசியல் பண்றீங்க!

கலைஞர் (வெறுத்து) : கிடக்கு, ஒரு தம்ளர் மோராவது கொடு. குடிச்சுட்டுப் போறேன்.

(வாங்கிக் குடிக்கிறார். காரை நோக்கி வாசலுக்கு விரைகிறார். அங்கே அந்தரங்க உதவியாளர் சண்முகநாதனிடம் ஏதோ சொல்லி அனுப்புகிறார்.)

சண்முகம் (உள்ளே வந்து) : அம்மா, கவலைப்படாதீங்க; நீங்க இத்தனை சிக்கனம் பார்க்க வேணாம்; முதல்வரோட வீட்டு மின்சார பில்லை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். தலைவர் உங்களிடம் விளக்கிச் சொல்லிட்டு வரச் சொன்னாங்க.

தயாளு : உங்க தலைவருக்குத் தெரிஞ்ச அந்த சங்கதி எனக்குத் தெரியாதாக்கும். சராசரி மத்தியதரக் குடும்பங்கள்ல எவ்வளவு கஷ்டப் படுவாங்கன்றது அவருக்குத் தெரியணுமில்ல...? சரி சரி, போற போக்கில அந்த ஏ.ஸி.யை ஆன் பண்ணிட்டுப் போங்க... வேகுது...

ஆசை

இந்திரா சௌந்தர்ராஜன்

8

"தேசிகாச்சாரி கூட மோகன்ராமிடம் புதிர் போடுகிறார். அவனது பிரக்ஞை 'விதையில்லாமலே முளைவிட்டு, வேரில்லாமலே வளர்ந்தெழுந்து' நிற்கும் ஒன்று என்கிறார். மோகன்ராமுக்கே அவரது விடுகதைப் புதிர் பிடிபடவில்லை. உங்களுக்கு?"

ஜவஹர் பாபுவையும், தாமுவையும் இப்படி வீட்டிற்குள்ளேயே மோகன்ராம் எதிர்பார்க்கவில்லை. சரி அதற்காக வந்தவர்களிடம் பகைமை பாராட்டுவதும் பண்பில்லையே! "வாங்க... என்ன விஷயம்?" என்றபடி தறிமேடையில் நிமிருகிறான்.

"யாரு ஜவஹரா... வாப்பா வா – எங்க இவ்வளவு தூரம்?" மகா வேறு திருவட்டம் சுழற்றிய கையோடு கூடவே மனம் நிறைய பயத்துடன் எழுந்து வருகிறாள்.

"நாங்க ஒண்ணும் விருந்து சாப்பிட வரலை..." பேச்சின் ஆரம்பமே ஜவஹரிடம் இளவாகத் தொடங்குகிறது.

"நாங்களும் விருந்து சாப்பிட கூப்பிடலைன்னு நினைக்கறேன்..." – பட்டென்று மோகன்ராமும் பதில் தருகிறான்.

"ஆனா இப்படி திமிரா பேசிக்கிட்டுத் திரியறே பாரு. அதுக்குத் தகுந்த பதில் கொடுக்கத்தான் வந்திருக்கோம்..." தாமு தாடையை தடவிக் கொண்டு அவன் பங்குக்கு ஆரம்பிக்கிறான்.

"என்ன பதில்... அடிக்கப் போறீங்களா?"

"ஏன் ஏற்கெனவே காளியப்பன்கிட்ட வாங்கினது போதலையா?"

"அந்தப் பேடி, நான் கொடுத்ததைச் சொல்லாம, அவன் செஞ்சதை மட்டும் சொல்லியிருக்கான் போல..."

பேச்சு மூவருக்கும் நடுவில் அனல் பாகமாய் பெருகத் தொடங்க, மகாலட்சுமி கசங்கிப் போகிறாள்.

"ஜவஹர் நீ சண்டை போட வந்திருந்தாலும் சரி, எதுக்கு வந்திருந்தாலும் சரி... உக்காந்து பேசப்பா..." என்று அவனிடம் உபசரணை காட்டுகிறாள். ஓிசல் பாயை தரையில் விரிக்கிறாள். அவன் அவள் பக்கம் திரும்பாமல், தறி மேடையில் இருக்கும் மோகன்ராமையே வெறிக்கிறான்.

"இதோ பார்... நீ உன்னை எவ்வளோ பெரிய ஹீரோவா வேணா நினைச்சுக்கோ. ஆனா எங்க விஷயத்துல தலையிட்டே, சும்மா விட மாட்டோம்."

"தலையிடாத நான்லேயும்தான் சும்மா விடலையே...?"

"என்னடா சொல்றே?"

"தமிழ்லதான் சொல்றேன். உன் குடியாலதான் என் அப்பா செத்தாரு. நாங்க வீட்டை இழந்தோம். என் அக்கா தூக்குல தொங்குனா. அதைத்தான் சொன்னேன்."

"அது அவங்க தலையெழுத்து... அதுக்கு நாங்க காரணமில்லை."

"இதே மாதிரி ஒரு பதிலை ஒரு நாள் நான் உங்களைப் பார்த்துச் சொல்வேன். அப்ப தெரியும் எது தலையெழுத்து, கால் எழுத்துன்னு..."

"ஜவஹர் இவன்கிட்ட பேசறது தப்பு. வந்த வேலையப் பார்..."

"என்னைச் சொல்லாதே... நீயே செய்."

"சரி இப்பவே செய்யறேன். என் விஷயத்துலையும் இவன் ஒரு சாட்சியா உறுத்திக்கிட்டு இருக்கான். தேரடி வீதியில நான் லட்சுமணனைத் தாக்குவதை இவன் பார்த்தானாம். கோர்ட்லையும் சொல்வானாம். கூடவே இதையும் சேர்த்துச் சொல்லட்டும். ஆறு மாசம்கறது ஒரு வருஷம்னு மாறி நான் உள்ள இருந்தாலும் சரி. இனி இவன் என்னை நினைச்சாலே ஒண்ணுக்கிருக்கணும்."

பேசிக் கொண்டே ஒரு தீக்குச்சியைக் கொளுத்திய தாமு அதைப் பட்டுப்பாவின் மேல் போட்டு விட, அந்த விலைமதிப்பற்ற செல்வம் மோகன்ராம் கண் எதிரிலேயே திகுதிகுவென பற்றி எரியத் தொடங்கியது.

"ஐயோ... நெசவுத் தறி சாமி மாதிரி. கொளுத்திட்டியேடா பாவி..." – அரற்ற ஆரம்



நெசவு


பிக்கிறாள் மகாலட்சுமி. மோகன்ராமுக்கோ அவன் உடம்பே பற்றி எரிவது போல ஒரு பிரமை. திருதிரு வெனவும் சடசட வெனவும் சப்தித்த படி எரிந்து தொங்கின நிலையில் மெஷின் கட் டையருகு வரை வந்து விட் டது நெருப்பு. அணைக்கக் கூட தோன்றாது வெறிக்கிறான் மோகன் ராம்.

மகாலட்சுமி உள் ஓடுகிறாள். இரும்பு வாளியில் தண்ணீர் மொண்டு வருகிறாள். பதற்றத்தில் மோகன்ராம் மேல் எல்லாம் அந்த நீர்த்தாரையைச் செலுத்துகிறாள்.

நெய்த பட்டு சதுரக் கட்டையில் சுருண்டு மடிந்திருக்கும் அளவில் தண்ணீர் பட்டு நமுத்துப் போகிறது. தீயும் அணைகிறது. ஆனாலும் அந்த பட்டுப்பாவும் வேட்டியும் இனி கால் காசு பெறாது—

தாமுவும் ஜவஹரும் முறைப் போடு திரும்பி நடக்கின்றனர்.

வாசல் நிலைக்காலருகே நின்று கொண்டு, ஜவஹர் மட்டும் திரும்பிப்



பார்த்து "யார்கிட்ட வேணா போ... தெரிஞ்சதப் பார்... எது வந்தாலும் சரி எங்களால ஏறி வெளிய வர முடியும். ஆனா உன்னால முடியாது. ஞாபகம் வெச்சுக்கோ..." என்று ஒரு கடைசி எச்சரிக்கை வேறு செய்கிறான்!

"என்னோட கல்யாணத்துல யாருக்குமே செருப்பு திருட்டுப் போகலை!"
"ரிஜிஸ்டர் மேரேஜா?"
— சீர்காழி வி. ரேவதி

வீதியே திரண்டு வந்திருக்கிறது. எரிந்த பட்டுத் தறியைப் பார்த்து உச்சுக் கொட்டுகிறது. 'அநியாயம், அக்கிரமம்' என்கிறது. கூடவே "நமக்கெதுப்பா ஊர் வம்பு. துஷ்டனைக் கண்டா தூர விலகணும்" என்று பழமொழி சொல்கிறது.

"ஹூம் எல்லாம் கலிகாலம். உலகம் அழியப் போகுது. அதான் இப்படி நடக்குது."

"மகாத்மாவையே சுட்ட மண்ணு இது. இங்க போய் நல்லதை எதிர்பார்க்கலாமா?"

– இப்படித்தான் அபிப்ராயங்கள் வந்தன. அனுதாபமும் கூட பாலாய்ப் பொங்கியது. ஆனால் யாரும் மறந்தும் இதற்கொரு நியாயம் பெற்றே தீர வேண்டும் என்கிற ஆவேசத்தை மட்டும் எங்கும் அடைந்த மாதிரியே தெரியவில்லை. எல்லோர் கண்களிலும் பயம் நன்றாகவே மின்னுகிறது. அதையும் தாண்டி நேர்மையாய் இருப்பது என்பது தவம் செய்வதைப் போன்ற ஒரு கடின காரியம் என்றும் சராசரி ஜனங்களுக்கு அது பிடிபடாத ஒன்று என்றும், அப்படியும் இப்படியுமாகத்தான் இருக்க முடியும் என்றும் நம்பிக் கொண்டிருக்கிற அவர்கள் எண்ணம் பளிச்சென்று புரிய வருகிறது. அதன் எதிரொலியாக விபரீத நியாயங்கள் கூட பிறக்க ஆரம்பிக்கின்றன.

"வேணும்னா ஜவஹரை ஊருக்கு வெளியே போய் வித்துக்கப்பான்னு சொல்லலாம். நீ சாராயமே விக்கக் கூடாதுன்னு சொல்றது சரியில்லை. நாள் பூரா நாயா உழைக்கற நமக்கு அதை விட்டா வேற மருந்து இருக்கா என்ன?"

"நா பத்து வருஷமா குடிக்கறேன். நல்லாத்தான் இருக்கேன். என்னா கெட்டுப் போயிட்டேன். மோகன் அப்பனுக்குப் பூஞ்சை உடம்பு. போயிட்டான். அது புரியாம சாராயத்தை நொட்டு சொல்லிக்கிட்டுத் திரியறான் இந்தப் பய..."

இடிந்தும் இடியாதபடி அமர்ந்திருக்கும் மோகன்ராமின் காதுகளையும் இந்தக் கருத்துக்கள் எட்டாமல் இல்லை. மௌனமாய் இருக்கிறான் அவன். பதிலடி எப்படி கொடுக்கப் போகிறான்? கேட்கிறான் முகுந்தன்.

"என்ன பண்ணப் போறே?"

"என்ன பண்ணலாம், நீயே சொல்லு..."

"மன்னிச்சுடப் போறியா?"

"அது தப்பை உணர்ந்தவங்க விஷயத்துல செய்ய வேண்டியது. இது அப்படி ஒரு விஷயமா?"

"இல்ல... இவங்க அரக்கங்க! அழிக்கப்பட வேண்டியவங்க."

"சரியாச் சொன்னே.... அழிக்கத்தான் போறேன்."

"மோகன், நீ ஒண்ணும் ரஜினி, கமல் இல்லை. நம்ம வாழ்க்கையும் சினிமா இல்லை. நம்ம ஜனங்களும் சரியானவங்க இல்லை."

"தெரியும்... அதுக்காக?"

"எப்படி அழிப்பே?"

"எப்படியாவது அழிக்கணும்."

"எப்படியாவதுன்னா? நக்ஸலைட்டா மாறப் போறியா? வேண்டாம்...."

"நிச்சயம் அப்படி எல்லாம் மாற மாட்டேன்."

"நம்மளை சாராயம் மட்டுமா பாதிக்குது? முதலாளிமாருங்க, சினிமாகாரங்க, அரசியல்வாதிங்க எல்லோரும்தான் பாதிக்கறாங்க. பேசாம விட்டுடு. கடவுள் பாத்துக்குவார்." முகுந்தன் கூட கிட்டத்தட்ட சராசரி கருத்துக்கே வந்து விட்டதில் மோகன்ராமிடம் சிரிப்பு.

"என்னடா சிரிக்கறே... நான் சொன்னதுல என்ன தப்பு? மோசமான உலகம்டா இது. நமக்குப் பிடிக்கலைன்னா நாமதான் ஒதுங்கிப் போகணும். இல்லேன்னா அது நம்மை ஒதுக்கிடும். அவ்வையாரும் வள்ளுவரும் சொல்லாததையா நாம சொல்லிடப் போறோம். காந்தியை விடவா ஒரு மகாத்மாவை பாத்துடப் போறோம். எல்லாரும் தோத்தவங்கதானே? நீ மட்டும் எப்படிடா ஜெயிக்க முடியும்...? வேண்டாம் விட்டுடு. பரீட்சை வருது. படிக்கற வழியைப் பார். அந்த ஜவஹருக்கே வக்கீலாகி காசு சம்பதிக்கற வழியைப் பார். அதுதான் யதார்த்தம். அதுதான் புத்திசாலித்தனம்."

– முகுந்தன் ஆழமாக உழுது விட்டுப் போய் விட்டான். மோகன்ராம் மனத்தை சலிப்பு கவ்விக் கொள்கிறது. நல்லதற்கு நிஜ மாலுமே காலமில்லையா? கேள்வியின் பிடியில் அகப்பட்டு அல்லாட ஆரம்பிக்கிறான்.



நாமமலை அடிவாரத்தில் ஆலமரப் பந்தலுக்கு கீழே அந்த ஆஸ்ரமும் அழகு...

> "தலைவர் ஏன் கோபமாயிருக்கிறார்?"
> "யாரோ ஒரு தயாரிப்பாளர், தன் படத்துல ஊழல் காட்சிகள் தத்ருபமாக இருக்க நடிக்க கூப்பிட்டிருக்காராம்!
> – ஆர்.எஸ்.சந்திரசேகர்

பயிற்சியும் கூட அழகு! அந்த ஆஸ்ரமத்தை கைவசம் புத்தகத்தோடு தாண்டிச் செல்கிறான் மோகன்ராம். எப்பொழுதும் பளிச்சென்று இருப்பவன் முகத்தில் இப்போது கருமை பூசிக் கிடக்கிறது. தாடையில் கூட அறுவடை வயல் போல செதில் செதிலாக சிரைக்காத முடிக் கூட்டம். யாரை அது ஆச்சரியப்படுத்தியதோ இல்லையோ, தேசிகாச்சாரியை அது மிக ஆச்சரியப்படுத்துகிறது. ஏன் எதற்கு என்று தெரியவில்லை. அருகில் கம்புச் சண்டையில் கலக்கிக் கொண்டிருந்த ஒருவனைக் கூப்பிட்டுக் கேட்கிறார்.

"டேய் அது மோகன்ராம்தானே?"

"ஆமாம் குரு..."

"ஏன் ஒருமாதிரி இருக்கான்?"

"சும்மா இல்லாம சாராயக்கார ஜவஹர் பாபுகிட்டேயும், தாமுகிட்டேயும் முறைச்சிக்கிட்டான். அவங்க அவன் பட்டுத் தறிக்கே நெருப்பு வெச்சிட்டாங்க. அதான்..."

"இவன் திருப்பி அடிக்கலையா?"

"அது எப்படி முடியும் குரு... அவங்க அடிப்பாங்க, அடியும் வாங்கிக்குவாங்க. ஜெயில் அவங்களுக்கு மாமியார் வீடு மாதிரி. போவாங்க வருவாங்க. நம்மளால முடியுமா? ஒதுங்கிப் போறதுதானே நமக்கு மரியாதை...?"

"இது அவன் அபிப்ராயமா.. இல்லை உன் அபிப்ராயமா?"

"எல்லார் அபிப்ராயமும்..."

"ஓஹோ... அப்ப எதுக்கு உனக்கு இந்த சிலம்பம், யோகப் பயிற்சி எல்லாம்?"

தேசிகாச்சாரி கேள்வி முன் பதில் சொல்லி வந்தவனிடம் ஒரு திணறல். அடர்ந்த மௌனம்.

'இவர் என்ன சொல்கிறார்? திருப்பித் தாக்க வேண்டும் என்றா? அது எதிரியை ஓட விரட்டினால் நல்லது... மாறாக பகையைக் கூட்டி வளர்த்து எதிலெதிலெல்லாமோ போய் முடியுமே...?'

அவன் மனத்துக்குள் நினைக்கிறான். ஆனால் கேட்கவில்லை. இருந்தபோதிலும் தேசிகாச்சாரி அவன் சிந்தனையை வார்த்தை விடாமல் அப்படியே சொன்னார்! சொல்லி விட்டு மோகன்ராமை நோக்கிக் கிளம்புகிறார்.

'இவர் எப்படி மனத்தில் இருப்பதை வார்த்தை மாறாமல் பிட்டு வைத்தார்?' – சிலம்பக் கழியோடு நிற்பவன் தேசிகாச்சாரியின் இந்தச் சக்தியை பலமுறை பல இடங்களில் பார்த்து விட்டான்.

இந்த எண்பது வயது கிழத்தை யாராவது பார்த்தால் ஐம்பதுக்கும் குறைவாகத்தான் மதிப்புப் போடுவார்கள். அத்தனை இளமை, அத்தனை திடகாத்திரம்! கட்டுமஸ்தான உடம்பு, நரைக்காத தலை, உதிராத பற்கள் என்று சகலத்திலும் மார்க்கண்டேயம்!

உச்சி முடி உதிர்வதில் இருந்து எப்பொழுது எங்கே எச்சில் உமிழுவோம் என்பது வரை சகலமும் எப்பொழுதோ தீர்மானமாகி விட்ட விஷயங்கள் என்று அவர் சொல்லும் போது, சிலருக்கு அது ஒரு பிற்போக்குச் சிந்தனையாகத் தெரியலாம். ஆனால் அவர் அதில் இந்த வினாடி வரை அணுவளவு மாற வில்லை. தண்டவாளத்தை விட்டு விலகாத பெட்டிகளைப் போல, விதியை விட்டு வாழ்க்கை விலகுவதேயில்லை என்பதும் அவர் நம்பிக்கை.

அதனாலேயே அவர் வரை வாழ்க்கை பாரமானதாக இல்லை. இலேசானதாகவும் இல்லை. கடமையைச் செய்து கொண்டேயிரு – நடப்பது தானாக நல்லவிதமாகவே நடக்கும் என்கிற கீதா ஸ்லோகத்தை பல கோணத்தில் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு காலத்தில் பட்டு நெய்த நெசவாளி. இப்போதைக்கு யோகி. தனியே ஆஸ்ரமம், யோகம் என்று ஒதுங்கி விட்டிருக்கிறார். ஆனாலும் சிலர் அவரை ஒதுங்க விடாமல் குருவே என்று சரண் புகுந்திருக்கின்றனர்.

அவருக்குத் தெரிந்த சிலம்பம், வர்மம், யோகம் எல்லாவற்றிலும் நுனிப்புல் மேயவும் தொடங்கியிருக்கின்றனர்.

இப்பொழுது கூட அந்தக் கூட்டம் விர்ர்ர் விர்ர்ர் என்று கழி சுழற்றிக் கொண்டும் தண்டால் பஸ்கி எடுத்துக் கொண்டும்....

அந்த மேற்பார்வையையெல்லாம் விட்டு விட்டு இப்பொழுது எதற்காக மோகன்ராமைத் தேடிப் போகிறார். அவன் அவர் போன திக்கையே பார்த்து நிற்கிறான்.

நிச்சயம் அதில் பெரிய அர்த்தம் இருப்ப தாக நம்புகிறது அவன் மனது.

அருகில் அமர்ந்து கொண்டு படிக்கவே மனம் ஒட்டாமல் எதிர்ச்சாரியில் தெரியும் அடிவாரச் சருக்கத்தையே பார்த்துக் கொண்டி ருக்கிறான் மோகன்ராம். நிழல் ஒன்று மேலே விழவும் திரும்பிப் பார்க்கிறான். தேசிகாச்சாரி தான்! மரியாதைக்குரிய மனிதர் என்பதால் பார்த்த மாத்திரத்தில் பக்தி, பணிவு, பரவசம் எல்லாம் குழைந்தடித்து வருகிறது.

"எல்லாம் கேள்விபட்டேன்பா..." என்று ஆரம்பிக்கிறார். அவனிடம் ஊன்றுதல்.

> புத்திசாலிக்கும் கெட்டிக் காரனுக்கும் இதுதான் வேறுபாடு. கெட்டிக் காரனுக்கு சரியான செய்தியை சொல்லத் தெரியும். புத்திசாலிக்கோ, அதைச் சொல்லலாமா வேண்டாமா என்பதும் தெரியும்.
>
> – ஹெரக்ஸ்டீயின்
>
> தகவல்: ச.லாவண்யா

"நல்லதுக்கே காலமில்லாம போச்சுன்னு நினைச்சு வெறுத்துப் போயிட்டியோ?" அந்தக் கேள்வி முன் ஆமோதிப்பாக தலையசைக் கிறான்.

"இல்லப்பா... காலம் சரியாத்தான் போய்க் கிட்டிருக்கு..." – இந்தக் கருத்துக்காகத் துளி சிரிக்கிறான்.

"நீ என் கருத்தை ஒத்துக்க மாட்டேங்கற, அப்படித்தானே?"

"ஏன் உங்களுக்கே தெரியாதா?" எதிர்க் கேள்வி கேட்கிறான்.

"எதை வெச்சு கெட்டுப் போச்சுங்கறே?" அவர் எதற்காக இப்படிக் கேட்கிறார் என்று தெரியவில்லை. ஆனாலும் சிரிக்காமல் இருக்க மோகன்ராமால் முடியவில்லை.

"சிரிக்காம பதில் சொல்லு..."

"நீங்க எதுக்குக் கேக்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"அதை பிறகு சொல்றேன். நீ என் கேள்விக்கு பதில் சொல்லு...."

"எதைச் சொல்ல... ஒண்ணா இரண்டா? தொட்ட இடமெல்லாம் ஊழல். ஒரு பக்கம் சுரண்டல் கூட்டம் – மறுபக்கம் பயந்த கூட் டம். மழை கூட பருவம் தப்பிப் பெய்யற கொடுமை. மார்கழியிலயும் வெய்யில் தாளாத நிலைமை. எதைச் சொல்ல இதுல..."

"இவ்வளவுதானா... இல்லை, இன்னும் இருக்கா?"

"நிறைய இருக்கு.... நல்லது கெட்டது எல் லாத்துக்கும் நடுவில ஏற்பட்டுப் போச்சு. படிப்பு, கல்யாணம் உத்யோகம் எல்லாமே இன்னிக்கு பணத்தோட பிடில. இந்த பணமோ ரவுடிகள்கிட்டே மோசமான மனிதர்கள் கிட்டே..."

"உம்... அப்புறம்?"

"கண் எதுக்க கொள்ளை நடக்கும்; வேடிக்கை பாப்போம். ஆனா கண்ணுக்கே தெரியாத ஜாதிக்காக கலவரத்துல பஸ்ஸைக் கொளுத்துவோம். ஒரு கோயில்ல பொறு மையா வரிசையில நிக்க சகிக்க மாட்டோம். ஆனா சினிமா தியேட்டர்ல சாயங்கால ஆட் டத்துக்கு மத்தியானமே போய் தவம் இருப் போம். பக்கத்து வீட்டுல, குடியிருக்கற தெருவுல, வசிக்கற ஊருல, எவ்வளவோ திறமைசாலிகள் இருப்பாங்க. திரும்பிக் கூட பாக்க மாட்டோம். ஆனா சினிமாக்காரனுக்கு மன்றம் வெப்போம். உடல் மண்ணுக்கு, உயிர் அவனுக்கும்போம்...."

ஓர் ஆயிரம் வெடி வரிசை போல மோகன் வெடித்து நிற்பதைப் பனிச்சென்ற கண்ணோ டும் ரசனையோடும் பார்க்கும் தேசிகாச்சாரி விடாமல் "அப்புறம்?" என்று விடாமல் கேட் கிறார்.

"அப்புறம் என்ன அப்புறம்? முன்ன இந்த மோசடி வித்தை ஜனக்கூட்டத்துகிட்ட மட் டும்தான் இருந்துச்சு. இப்ப தெய்வத்துகிட்டே யும் போயிடிச்சு. வருஷம் பூரா எப்படி வேணா இருக்கலாம். ஒரு நாற்பது நாள் விரதம் இருந்து சபரிமலை போய்ட்டு வந்தா அதெல் லாம் சரியாயிடும்கற அளவுக்கு வந்தாச்சு. பவித்ரமா பக்தி சிரத்தையோட தவமிருந்து போய் வரவேண்டிய இடம், இன்னிக்கு கிட்டத்தட்ட ஒரு பிக்னிக் ஸ்பாட் ஆக ஆரம் பிச்சிடிச்சு. அற்புதமான அந்த மூலிகை மலைக்காடு இப்போ சிறுநீரும் மலமும் பட்டு நாறத் தொடங்கியிருக்கு. இதைச் சொன்னா என்னை நாத்திகன்னும் கிறுக்கன்னும் சொல்லி கல்லால அடிக்கற அளவு ஒரு நிலை. ஆரோக்கியமா ஒரு விஷயம் இல்லை. ஏன் பிறந்தோம்னு இருக்கு. நீங்க என்னடான்னா காலம் சரியாத்தானே இருக்குங்கறீங்க..."

– மோகன்ராம் புயலடித்து ஓய்ந்த மாதிரி உலுங்கிப் போய் அவரைப் பார்க்கிறான்.

அவரிடமோ ஓர் அர்த்தமுள்ள கேள்வி.

"ஆமா நீ இனி எப்படி செயல்படப் போறே?"

(தொடரும்)

தில்லி நியூஸ் :

நரசிம்மராவ் பிரதமராக இருந்த வரையில், அவரது பிரதம காரியதரிசி அமர்நாத் வர்மா இட்டதுதான் சட்டம். அவர் கோப்பில் கையெழுத்துப் போட்டுவிட்டால், அதுதான் ஆணை. தேவேகௌடாவின் அலுவலகம் நேர் எதிர். பிரதமரின் அலுவலகத்துக்கு வரும் 70 சதவிகித கோப்புகளில் முக்கியச் செயலர் சதீஷ்சந்திரன் ஒரு கேள்வி எழுப்புவார். இணைச் செயலர் மீனாட்சி சுந்தரம் இன்னொரு கேள்வி எழுப்புவார். கோப்புகள் ஊர்வலம் போய்விடும். பிரச்னை மட்டும் அப்படியே இருக்கும்! கோப்புகள் தேங்கும். முடிவுகள் எடுக்கப்பட மாட்டா! பல அரசாங்க அமைப்புகளுக்குத் தலைவர்கள் இல்லாமலே ஓடுகிறது



• கேசரி



• சங்மா

வண்டி. விவசாயத்துறை அமைச்சர் சதுரானன் மிஸ்ராவுக்கு ஒரே எரிச்சலாம் - தொட்டதெற்கெல்லாம் தமது ஆட்களையே நியமித்து விடும் ஆர்வம் கொண்ட தேவேகௌடா மீது.

● தில்லி குளிர் தேவேகௌடாவுக்குப் பிடிக்கவில்லை என்பது இருக்கட்டும். போகிற இடத்தில் எல்லாம் குளிர் காய, கணப்பு. இல்லை என்றால் ஒரு வாணலியில் தணல் போட்டு அறை மூலையில் வைத்துவிட வேண்டும் என்று உத்தரவு போட்டு விடுகிறார் பிரதமர். பாதுகாப்பு அதிகாரிகள் இந்த மாதிரி ஏற்பாடுகளை ஏற்பதில்லை. ஆனால் தேவேகௌடா அவற்றை எல்லாம் காதில் போட்டுக் கொள்ளுவதில்லை. 'குளிரில் கை கால் எல்லாம் விறைத்துப் போய்விடுகிறது. தெரியுமா?' என்று சத்தம் போடுகிறார்.

● சபாநாயகர் சங்மாவுக்கு, இப்போது ஏகப்பட்ட கிராக்கி. எல்லா விழாக்களுக்கும் அவரை விரும்பி அழைக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் கூட.. கேசரிக்குப் பதில் சங்மாவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க முடிவு செய்திருப்பது கேசரிக்கு உதறல் எடுக்க வைத்திருக்கிறது. சங்மாவின் ஆதரவாளர்கள், அவரை துணை ஜனாதிபதி அல்லது ஜனாதிபதி பதவியில் ஒருநாள் அமருவார் என்று வெளிப்படையாகச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

● பஞ்சாப் தேர்தல் முடிவுகள், போலி செக்யுலரிசம் பேசும் காங்கிரசுக்கு ஒரு சம்மட்டி அடி கொடுத்து விட்டதாக முதலமைச்சர் பாதல் சொன்னாராம். வெளிப்படையாக நடந்து கொள்ளும் பா.ஜ.கவும் அகாலிதளமும் எத்தனையோ மேல் என்று மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார் பாதல்.



• பாதல்

● பம்பாயிலிருந்து திரும்பிய பிரதமர் நேரே ஏர்போர்ட்டிலிருந்து வாஜ்பாய் வசிக்கும் சப்தர்ஜங் சாலை வீட்டுக்குப் போய் ஒரு மணி நேரத்துக்கு மேல் பேசி விட்டுத் திரும்பினார். காலை வாருவோம், காலை வாருவோம் என்று பயமுறுத்தி வரும் காங்கிரஸ், நிஜமாகவே ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டால் என்ன செய்வது என்று தேவேகௌடா யோசித்துக் கொண்டிருந்தபோது, முதல் வேலையாக வாஜ்பாயை நண்பராக்கிக் கொள்ளுவோம் என்று யோசனை சொல்லப்பட்டதாம்!

● தில்லியின் பகட்டான பகுதியான 'வஸந்த் குஞ்ச்'சில்

கேசரிக்கு உதறலா?

டில்லி வளர்ச்சிக் குழுமத்தின் ஃப்ளாட் ஒன்றுக்கு விண்ணப்பம் செய்திருந்தார் சீதாராம் கேசரி. விலை - பத்து லட்சம் முதல் பதிமூணரை லட்சம் ரூபாய். இரண்டு மாதங்கள் முன்பு, இதைத் தெரிந்து கொண்ட பத்திரிகையாளர் மதுரேஷ், ஒரு வழக்குத் தொடர்ந்தார். வழக்கு பற்றிய விவரம் தெரிந்ததோ இல்லையோ, சத்தம் போடாமல் வீட்டு விண்ணப்பப் படிவங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார் கேசரி!


● ஹெக்டேயைக் கட்சி தொடங்க வேண்டாம் என்று கடைசி நிமிஷத்தில் கூட ஜனதாதளம் கேட்டுக் கொண்டதாம். பீகார் முதல்வர் லாலுபிரசாத் யாதவ் கர்நாடக எம்.பி. கோதண்டராமையாவிடம் ஒரு பர்சனல் கடிதம் கொடுத்து ஹெக்டேயிடம் கொடுக்கச் சொன்னாராம். கோதண்டராமையா முன்னாள் பெங்களூர் சிடி போலீஸ் கமிஷனராயிருந்தவர்.



• லாலு

● இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் வைத்தியம் செய்து கொள்ளப் போன வி.பி. சிங் இப்போது திரும்பி விட்டதில், பிரதமர் தேவேகௌடாவுக்கு யானை பலம் வந்து விட்டது. ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆபத்து விளைவிக்கும், அல்லது குறைந்தபட்சம் சங்கடம் தரும் எந்த விஷயத்தையும் வி.பி.சிங் அனுமதிக்க மாட்டார் என்று பிரதமர் நம்புகிறார். இடது சாரிக் கட்சிகளிடம் சிங்கின் செல்வாக்கு நிச்சயம் எடுபடும் என்று நம்புகிறார் தேவேகௌடா.

● மனைவி வென்ற இடத்தைக் கணவரால் வெல்ல முடியாமல் போனது சீதாராம் கேசரிக்கு எரிச்சல் ஊட்டியிருக்கிறது. முன்னாள் மத்திய அமைச்சர் கமல்நாத்தின் மனைவி சிந்த்வாரா தொகுதியில் நாடாளுமன்றத்துக்கு நின்று வெற்றி பெற்றார். ஆனால் கணவருக்காக அதை விட்டுக் கொடுக்க, தமது எம்.பி. பதவியை ராஜிநாமா செய்தது, விபரீதமாகப் போய்விட்டது! கேசரியும், அர்ஜுன் சிங்கும், ஏன் - மாதவராவ் சிந்தியாவும், பிரசாரம் செய்தும், கமல்நாத் தோற்றுப் போய் விட்டார். "கறை படிந்த தலைவர்களுக்குத் தேர்தலில் டிக்கெட் கொடுக்கக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை? கேட்டீர்களா?" என்று ராவ் ஆதரவாளர்கள் இப்போது கேசரியை ஆளாளுக்குத் தாக்குகிறார்கள்!




• ஹெக்டே

● குவெட்டரோச்சி ஏதோ போஃபர்ஸ் பேரத்தில் மட்டுமே பணம் பண்ணினார் என்பது போலப் பேசப்படுகிறது. பல பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தியாவில் பிரதிநிதியாகச் செயல்பட்டிருக்கிறார் குவெட்டரோச்சி. அதிலும் ராஜீவ் பிரதமராக இருந்த சமயத்தில், அவரது குறுக்கீடு அதிகமாகவே இருந்ததாம். அவராகவே ஃபோனில், நிதிச் செயலரை அழைத்து, "என்ன மிஸ்டர், உங்களிடம் பிரதமரே பேசணும்னு எதிர்பார்க்கறீங்களா? நான் சொன்னாப் போதாதா?" என்று கேட்பாராம்! அப்புறம் எந்த நிதிச் செயலருக்கு தைரியம் வரப்போகிறது பிரதமரை முறைத்துக் கொள்ள?

● மலேசியாவுக்குச் சென்று குவெட்டரோச்சியையும் அவர் மனைவியையும் இந்தியாவுக்கு அழைத்து வர முயன்ற சி.பி.ஐ.யின் முயற்சியில் தோல்வியே ஏற்பட்டிருக்கிறது. குவெட்டரோச்சியை சி.பி.ஐ. அதிகாரிகள் சந்திக்கவே முடியவில்லை. இன்டர்போல் அதிகாரிகள் வேண்டுமானால் குவெட்டரோச்சியைச் சந்தித்து விசாரணை நடத்தட்டும் என்று மலேசிய அரசு ஜோகிந்தர் சிங்கிடம் தெரிவித்து விட்டது.

- நியூஸ்வாலா


சிக்கனமாக ஸ்மைல் ப்ளீஸ்
கருத்து: ஜாலி
பணவீக்கத்தைக் குறைக்க உறுப்பினர்களின் ஆலோசனையை வரவேற்கிறேன்...
அயோடெக்ஸ் உற்பத்தியைப் பெருக்கலாம்
பட்ஜெட்ல புதுசா ஒண்ணுமில்லைன்னு சுலபமா சொல்லிட்டியே! எவ்வளவு புதுவரி இருக்கு? சரியா படிக்கலையா?
பற்றாக்குறையைச் சமாளிக்க, நோட்டு அச்சடிக்க வேண்டிய நிலைமையில் அரசாங்கம் இருக்குதாம்... அதுக்கு உதவ நானும் கொஞ்சம் நோட்டு அடிச்சதைத் தப்புன்னு சொல்லுறீங்களே இன்ஸ்பெக்டர்!
டீவியில பட்ஜெட் பத்தின விவாதம் பார்த்தியா...?
எங்கே பார்க்கறது! குடும்ப பட்ஜெட் எப்படி மாத்திப் போடறதுன்னு விவாதத்துக்கே நேரம் போச்சு!


வருமானவரி கட்டுகிறவங்களுக்கு உதவ, அரசு புரட்சிகரமா ஒரு திட்டம் அறிவிச்சிருக்கா? அது என்ன?
அரசாங்கமே வருமானவரி கட்ட, கடனுதவி செய்யப் போகுதாம்
அரசாங்கத்துக்கு எங்கேயிருந்து பணம் வருகிறது? அது எப்படி செலவாகுதுன்னு, பட்ஜெட் உரையில் விளக்கியிருக்காரு நிதி அமைச்சர்!
எங்கேயிருந்து வருதுன்னு எல்லாருக்கும் தெரியும். ஆனா எங்கே போகுதுன்னு தானே தெரிய மாட்டேங்குது!
அதென்னாங்க பட்ஜெட் மீல்ஸ்....?
பட்ஜெட் அறிவிப்புக்கு ஏத்த மாதிரி விலையைக் கூட்டாம, அளவையும் ஈட்டத்தையும் குறைச்சுடுவோம்!
சாப்பாடு ரெடி
இன்று முதல் ஸ்பெஷல் பட்ஜெட் மீல்ஸ் போடப்படும்!
இந்த வருஷ பட்ஜெட்டில் பெட்ரோல் விலை ஏத்தலே இல்லையாம்!
அடப்பாவி! நிஜமாவா?
ஹி ஹி... குவைத்தல
பட்ஜெட்டுக்கப்புறம், பான்பராக் விலை எக்கச்சக்கமா ஏறிடும்னு பேசிக்கறாங்க...
அதனால்... விட்டுட்டீங்களா?

"**யா**ரைச் சொல்ல? யாரை விட? என்றாலும் இருவரைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்!'' என்று தொடங்குகிறார் அனுராதா ரமணன் :

என் கணவர் இறந்த பிறகுதான் நான் எழுதத் தொடங்கினேன். சென்னையில் என் குழந்தைகளோடு நிரந்தரமாகக் குடியேறிய அந்தக் காலகட்டத்தில் என் பளுவைப் பெரிதும் குறைத்தவள் என் பெரியம்மா பெண் ஜெயந்தி. சேலத்தில் இருந்த அவள், தன் கல்லூரிப் படிப்பை அப்போதுதான் முடித்திருந்தாள். என்னைக் கவனித்துக் கொள்வதற்காகவே சென்னைக்கு வந்தாள். வருமானம் குறைவு என்பதால் வேலைக்காரி கூட வைத்துக் கொள்ள முடியாத நிலை. என்றாலும் ஒரு பொழுது கூட என்னை துணி துவைக்கவோ, வீடு பெருக்கவோ விட்டதில்லை அவள். "எழுதும் கையால் துடைப்பத்தை எடுப்பதா?'' என்பாள் கண்ணில் நீருடன். சமையல் டிபார்ட்மெண்டில் மட்டும் நான்தான் ஹெட் குக். நான் கொஞ்சம் செலவாளி; மாதச் சம்பளத்திற்குள் செலவு அடங்கும்படி அவ்வப்போது லகான் போடுவது அவளது வழக்கம்.

எந்தக் கதை எழுதுவதாக இருந்தாலும் அவளிடம் நான் அதுபற்றி விவாதிப்பதுண்டு. எழுதுவது காதல் கதையா, அதற்கேற்ற டூயட் பாடல்களை ஒலிக்கவிடுவாள். அறையில் ஊதுவத்தி ஏற்றுவாள்; நல்லதொரு எழுதும் சூழ்நிலையை உண்டுபண்ணுவாள்.

அவளுடைய அன்பின் ஆழத்தைச் சென்னை வரும் முன்பே நான் அறிந்திருக்கிறேன். சேலத்தில் அவள் அக்காவுக்குக் கல்யாணம். நெருங்கிய உறவினர்களுக்கு ரவிக்கைகள் தைக்கும் பொறுப்பு அவளுக்கு. நான் மேட்டூரில் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டிருந்தேன். தையல் மெஷின் உடைந்து விட்டதாகக் கூறி மேட்டூருக்கு வந்து விட்டாள். போதாத காலம், அவளுக்கும் மஞ்சள் காமாலை வந்து விட்டது. அதற்கும் சந்தோஷப்பட்டாள்!

"ரெண்டு பேரும் சேர்ந்து கல்யாணத்தில் மோர்சாதம் மட்டுமே சாப்பிடலாம்'' என்றாள்.



• அனுராதாரமணன்

திருமணம் நடப்பதற்கு முன் சுரேஷிடம் (சுபா) "கல்யாணமான பிறகும் அனும்மாவுக்கு ஹெல்ப் செய்துக்கிட்டுத்தான் இருப்பேன்'' என்று கண்டிஷன் போட்டாள். அப்படியே நடந்து கொண்டாள். என்றாலும் அவளுக்கும் இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகு என்னை அவ்வளவாக கவனிக்க முடியவில்லை என்ற வருத்தம் அவளுக்கு உண்டு. திருமணம் நிச்சயமான பிறகு அவள் என்னிடம் அடிக்கடி பாடிய பாட்டு – "அன்னமிட்ட கைகளுக்கு அன்பு செய்த கண்களுக்கு உன்னை விட்டுப் போவதற்கு உள்ளமில்லை மகளே''. சொல்லப் போனால் என் மகளைத் திருமணம் செய்து கொடுப்பதாகத்தான் நான் எண்ணினேன். எனவே இந்தப் பிரிவில் எனக்கு உறுத்தல் இல்லை.

நாங்கள் இருவருமே நல்லா சாப்பிடக்கூடியவர்கள். ஆனால் வெளியிடங்களுக்குப் போனால் அங்கு கிடைக்கும் உணவை நான் அட்ஜஸ்ட் செய்து கொண்டு விடுவேன். அவள் அப்படி அல்ல. நெரிசலான இடங்களுக்குச் செல்ல எனக்குப் பிடிக்கும். அவளுக்கு அலர்ஜி. இதுபோன்ற வேறுபாடுகள் சில இருந்தாலும்

சந்தோஷமான 'சிறை'கள்!


மூழ்காத ஷிப் : அனுராதா ரமணன்

ஜெயந்தியின் நட்புக்கு தனி இடம் உண்டு. மேட்டூரில் காவிரிக் கரையில் அவளோடு பேசியபடி நடந்தபோது உருவான கதை கருக்கள்தான் கூட்டுப்புழுக்கள், சிறை ஆகியவை. சமீபத்தில் என் கால் பலவீனமான போது, வெளியூர் நிகழ்ச்சிகளின் போது என் ஊன்றுகோலாகவே விளங்கினாள் அவள்.

• ஜெயந்தி



• பாண்டியன்



1987-ல் அவள் திருமணமாகிச் சென்ற பிறகு நான் சொந்தமாக ஒரு பத்திரிகை நடத்தத் தொடங்கினேன். அதற்கான பல பொறுப்புக்களை ஒருவரிடம் நம்பிக் கொடுத்திருந்தேன். அவரது நிஜமுகத்தை எனக்கு அறிவித்த வகையில்தான் பாண்டியன் எனக்கு அறிமுகமானார். வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்று கூறி தம்மை ஏமாற்றியவர் அவர் என்று குறிப்பிட்டு என்னை உஷார்ப்படுத்தினார்.

பிறகு ஒருமுறை பத்திரிகை அலுவலகத்துக்குப் பாண்டியன் வந்த போது, அவர் நன்றாக வரைவார் என்பதை அறிந்து கொண்டேன். எனக்கும் ஓவியத்தில் ஈடுபாடு உண்டு. "இப்படி லே-அவுட் செய்யலாமா? இந்த ப்ரூஃபைத் திருத்தலாமா?" என்று கேட்டபடி வேலைகளைத் தாமாக இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வார்.

இவ்வளவுக்கும் அவரை என் எழுத்தின் ரசிகர் என்று சொல்ல முடியாது. ஜெயகாந்தன் போன்ற ஒரு சிலரின் எழுத்துக்கள்தான் எழுத்து என்பது அவர் எண்ணம்!

என் எழுத்தைப் படித்ததைவிட, என் சுபாவத்தை அதிகம் படித்திருக்கிறார். நான் சுலபத்தில் ஏமாந்து போவேன் என்ற கருத்து அவருக்கு (அது முழுக்கத் தவறானதல்ல)! என்னைச் சந்திக்கும் பலரது மறுபக்கத்தைச் சுட்டிக்காட்டி எச்சரிப்பது அவர் வழக்கம்.

"இன்னொரு பிள்ளை பிறந்ததாவே வச்சுக்கறேன்" என்று என் அம்மாவே கூறும் அளவுக்கு எங்கள் குடும்பத்தோடு ஒன்றி விட்டார். இத்தனைக்கும் அவரோடு தினமும் மூன்று முறையாவது சண்டை போடுவதுண்டு. ஐஸ் க்ரீம் உட்பட பார்த்ததை வாங்கிவிடும் வழக்கம் எனக்கு. அவர் கட்டுப்படுத்திக் கொள்ளச் சொல்வார். சினிமா நாடகம் என்று வெளியே கிளம்ப முயற்சி செய்தால் "இந்தக் கதையை முடிச்சுட்டுப் போயிடுங்கம்மா!" என்று கூறி நாசூக்காக வேலை வாங்கி விடுவார்.


ஏழெட்டு மாத காலம் நான் சரியாக பேச்சு வராமல் பலவீனப்பட்டு இருந்த போது, எனக்கு மிகுந்த நம்பிக்கையை அளித்தார். எனக்குத் தெரியாமலே என் பேச்சுக்களை அவ்வப்போது பதிவுசெய்து என் உண்மை நிலையையும் முன்னேற்றத்தையும் உணர வைத்தார். ஒரு டாக்டர் "புறா புழுக்கையில் உமியைக் கலந்து, ஒருவித எண்ணெயில் கலந்து காலில் தடவினால் நல்லது" என்று கூற, புறாக்கள் அதிகம் கூடும் மசூதிகளுக்கெல்லாம் முறமும் வார்கோலுமாகச் சென்று விட்டார்!

நட்பு என்பது ஆன்மாவும் ஆன்மாவும் இணையும் அன்பு அனுபவம். இதற்கு உருவமோ, ஆண் பெண் என்ற வேறுபாடோ கிடையாது. நான், ஜெயந்தி, பாண்டியன் மூவரும் இணைந்திருக்கும் போது கிண்டலுக்கும், கலகலப்புக்கும் பஞ்சமே இருக்காது. என் மீது நட்புரிமை கொண்டாடுவதில் அவர்கள் இருவருக்குமிடையே ஒருவித "கண்ணுக்குத் தெரியாத மோதல்" இருப்பதை உணர்ந்து மனதுக்குள் ரசித்துக் கொண்டிருப்பேன்.

வெளி உலகம் தெரியாத ஜெயந்தியை நான் வைரமாக எண்ணிப் பாதுகாத்தேன் என்றால், ஓர் ஆணுக்கு இருக்கக்கூடிய அளவுக்கு வெளி அனுபவம் அவ்வளவாக இல்லாத என்னை, வைரமாக எண்ணிப் பாதுகாத்து வருகிறார் பாண்டியன்.

இந்த இருவரும் தங்கள் கட்டுப்பாடுகளை என் மீது அவ்வப்போது சுமத்துவதுண்டு. இதுபோன்ற நட்புச் சங்கிலிகள் சிறைப்படுத்தினாலும் - வாழ்க்கைக்கு வேண்டித்தான் இருக்கிறது: இனிமை சேர்க்கிறது!

சந்திப்பு : அருண்சரண்யா



அரவிந்தன்

அக்கிரமக்காரர்களையும் அநீதியையும் கண்டு எந்த சினிமா ஹீரோதான் சும்மா இருப்பார்?

கிராமத்து ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் ஊர்ப் பெரிய மனிதரின் மகனில் ஆரம்பித்து, நிமிடத்துக்கு ஒரு கொலை, குத்து வீதம் படம் முழுக்க கசாப்புக் கடை நடத்துகிறார் சரத்குமார்.

'தட்டினால் திறக்காது; உடைக்கணும்' என்றொரு புல்லரிக்கச் செய்யும் தத்துவத்தை அவருக்கு போதித்துவிட்டு, வந்த சூட்டிலேயே சிலபல கொலைகள் செய்துவிட்டு இறக்கும் பார்த்திபன் கேரக்டரின் பின்னணி என்ன என்று டைரக்டர் சொல்லி இருக்க வேண்டும்.

சாகும் தருவாயில் மேற்படி பொன்மொழியை அவர் உதிர்ப்பதால்தானே சரத்குமார் அத்தனை பொங்கி எழுகிறார்? களம் காணும் புறநானூற்று வீரனுக்கு வெற்றித் திலகமிட்டு வழியனுப்பும் வீரத் தாய்மார்கள் இறந்து விடவில்லை. 'மகனே நீ படித்துக் கிழித்தது போதும்; புறப்படு போருக்கு!' என்பது மாதிரி அரிவாள் எடுத்துக் கொடுக்கும் அற்புதத் தாயை இப்படத்தில் பார்க்கலாம். எப்போது சரத்குமார் கத்தி தூக்குவார் என்று காத்திருந்தாற்போல திடீரென்று நாலு பேர் அவருக்கு அஸிஸ்டென்ட்களாகச் சேர்ந்து விடுகிறார்கள். அவர்கள் வீட்டிலும் அம்மாமார்கள் அரிவாள் எடுத்துத் தந்தார்களா, தெரியவில்லை.

ஆரம்பத்தில் சரத்தை விழுந்து விழுந்து காதலிக்கும் நக்மா, பின்னால் அவர் ஊர்வசியை மணந்து விட்டது தெரிய வரும் போது கூட ஒரு வார்த்தை ஏனென்று கேட்கவில்லை. களம் காணும் மாவீரனுக்குக் கலக்கம் தரக்கூடாது என்கிற உயரிய நோக்கமா என்றும் தெரியவில்லை.

அதெப்படி வக்கீலுக்குப் படித்த நக்மா திடீரென்று ஜெயிலர் ஆகிறார்? சண்டையெல்லாம் போடுகிறார்? தெரியவில்லை.

லியாகத் அலிகானின் வசனங்களில், இந்தப் படத்தில் பல அதிர்ச்சி தரும் விஷயங்கள் கிடைக்கின்றன. காந்தியுடன் ஒப்பிட்டுக் கதாநாயகர் பேசப்படுகிறார். நேதாஜி, பகத்சிங் பெயரெல்லாம் சகட்டுமேனிக்கு சந்திக்கு இழுக்கப்படுகின்றன. கொலைகார ஹீரோவுக்கு உவமானம்!

இது ஒரு பக்கம். சரத்குமாரின் சமீப காலத் தனி வாழ்க்கை நடவடிக்கைகளுக்கான விளக்கங்கள் வேறு கிடைக்கின்றன. ("நீங்க எதைச் செஞ்சாலும் அதுல ஒரு அர்த்தம் இருக்கும்!") நக்மாவுடன் இத்தனை நெருக்கமான டூயட் இதுவரை பார்த்த ஞாபகமில்லை.

ஜொலிக்கும்படியான விஷயங்கள் இரண்டு. ஒளிப்பதிவு, இசை. கேமராமேன் ரத்னவேலும் இசையமைப்பாளர் யுவன் சங்கரும் புதியவர்கள்.

ரத்னவேலுவின் கேமிராவில் உயிர் இருக்கிறது. யுவன்சங்கர் இசை, அடுத்தது. அசாத்திய வேகம். முதல் வரி மனத்தில் சுழல ஆரம்பிப்பதற்குள் பாடலே முடிந்து விடுகிறது. Paceஐக் குறைத்து, சற்று Spin முயற்சித்துப் பார்த்தால் நிச்சயம் ஜொலிப்பார்.

வன்முறை கூடாது என்ற நல்ல கருத்தைச் சொல்ல நினைத்திருக்கிறார் டைரக்டர். கமர்ஷியல் தேவைகளுக்காகப் படத்தையே வன்முறைக்கு பலியிட்டிருக்கிறார்!

— ஆர்.பி.ஆர்

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன்.

ஆசிரியர் : சீதா ரவி.

முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.

ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.

ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.


Lalitha
வாழ்வின் ஒவ்வொரு தருணமும்
கனவின் சுவைகளோடு
லலிதா ஜுவல்லரி மார்ட் பி. லிமிடெட்.,
123, உஸ்மான் ரோடு, பனகல் பார்க், சென்னை 600 017. போன் : 828 2939, 828 3413.